# என் ஜென்னி ஆ.சுசீலா அவர்களை இழந்தேன்! என் அரிய செயல்களின் பின்புலம் அவர்!



**வே.ஆனைமுத்து** ஆகிய நான் 21.6.1925-இல் பிறந்தேன்.

புதுச்சேரி மணல்வெளியில், 4.6.1938 அன்று ஆனை. சுப்பிரமணியம்-தையல் நாயகி இணையருக்கு மகளாகப் பிறந்தார், தனலட்சுமி என அவருக்குப் பெற்றோர் இட்ட பெயரை, உறவினர்கள் சுசீலா என மாற்றினர்.

சு.சுசீலா அவர்கள் 4.6.1938 முதல் 30.4.2019 வரை 80 ஆண்டுகள் 10 மாதங்கள் 26 நாள்கள் வாழ்ந்து, தம் 81ஆம் அகவையில் சென்னை அரசு இராசீவ் காந்தி மருத்துவமனையில் 30.4.2019 இரவு 7.00 மணிக்கு மறைவுற்றார்.

அவர் புதுச்சேரித் தேங்காய்த் திட்டில் வாழ்ந்த பட்டாளத்தார் ஆனையப்ப நாயகர் - இளைய மனைவி மீனாட்சி அம்மாள் பேத்தியாவார். மேற்படி இணையருக்கு குப்புலட்சுமி, சுப்பிரமணியன், கோவிந்தசாமி என மூன்று மக்கள். ஆனையப்ப நாயகர் மூத்த மனைவிக்கு, குப்புசாமி என்று ஒரு மகன்.

சுப்பிரமணிய நாயகர் 1943இல் சுசீலாவுக்கு 5 அகவை ஆகும் போது மறைந்தார். 10 அகவை முதல் 14 அகவை வரை குப்புசாமி - பார்வதி பாதுகாப்பில் வளர்ந்தார்.

1952-இல் தம் 14-ஆம் அகவையில் பூப்பு அடைந்தார்.

1952-இல் ஆ. கோவிந்தசாமி தமிழகச் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

1952 முதல் 1954 ஆகத்து வரையில், கடலூர் வண்ணாரப்பாளையம் ஆ.கோவிந்தசாமி - கோ. பத்மாவதி இணையர் மற்றும் குப்புலட்சமி அம்மையாரின் அரவணைப்பில், செல்வாக்கோடு வளர்ந்தார், சுசீலா.

முறைப்படி பெண் கேட்டு, 22.8.1954-இல் ஒகளூரில், தமிழ்மறவர் வை. பொன்னம்பலனார் தலைமையில் சு. சுசீலா அவர்களை நான் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றேன். அப்போது நான் திருக்கோவிலூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எழுத்தராக இருந்து மாதம் ரூபா 75/- ஊதியம் பெற்றேன்.

அங்கு 10.10.1955-இல் அரசு மருத்துவமனையில் ஆ. சுசீலா முதலாவது குழந்தையை ஈன்றார். அக்குழந்தைக்குத் தமிழ்ச்செல்வி எனப் பெயரிட்டோம்.

எவரோடும் கலந்து பேசாமல் திருக்கோவிலூரிலிருந்த வேலையை விட்டு விலகினேன்.

எந்தத் தொழிலும் இல்லாமல், கடன்பெற்று "குறள் முரசு" என்கிற கிழமை இதழை 1957 பிப்பிரவரியில் திருச்சியில் தொடங்கினேன். அது கிழமை இதழ் ஆனதால் நிறையப் பணம் செலவாயிற்று.

ஆ. சுசீலா இரண்டாவதாக 17.2.1957-இல் திருச்சியில் ஒரு ஆண் மகவை ஈன்றார். முதலில் என் துணைவியார் அணிந்திருந்த தங்க வளையலைக் கேட்டேன். ஆண் மகவைப் பெற்ற மகிழ்ச்சியில், கேட்ட உடனே தங்க வளையல்களைக் கழற்றிக் கொடுத்தார்.

1957 மார்ச் மாதம் என் துணைவியாரிடமிருந்து 5 பவுன் தங்கச் சங்கிலியைப் பெற்றேன். 4 மாதம் நகர்ந்தது. 1957 ஆகத்து மாதம் மற்ற

சுவடி : 43
ஏடு : 11
மே 2019
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**
**94441 05892**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

நகைகளையும் கேட்டுப் பெற்றேன். கடைசியாக அவருடைய தாலியையும் பெற்று நசுக்கி அடகு வைத்துக் கடன் பெற்றுச் செலவு செய்துவிட்டு, என் மனைவி மக்களை வெறுங் கையாக விட்டுவிட்டு 26.11.1957-இல் அரச மைப்புச் சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்றுக் கைது செய்யப்பட்டேன்.

26.11.1957-இல் கைது செய்யப்பட்ட நான் 18 மாதங்கள் தண்டனை பெற்று திருச்சியிலும் வேலூரிலும் சிறையில் அடைக்கப்பட்டேன்.

என் மக்கள் பசி பட்டினி தாங்க முடியாமல் முதலில் நான் பிறந்த முருக்கன்குடிக்குச் சென்றனர். அங்குச் சில மாதங்கள் இருந்துவிட்டு, பின்னர் புதுச்சேரிக்குச் சென்றனர். அங்கு என் சிறிய மாமியார் சின்னப்பொண்ணு வீட்டில் சுசீலாவும் குழந்தைகளும் சிறிது காலம் தங்கினார்கள். நான் சிறையிலிருந்து விடுதலையாகும்போது என் மனைவியும் இரண்டு மக்களும் முருக்கன்குடிக்கு வந்து விட்டனர். 1958 திசம்பர் கடைசியில்தான் என் மனைவி மக்களைப் பார்த்தேன்.

பின்னர் நான் மட்டும் 1960-இல் திருச்சிக்குச் சென்று ஆயிரம் ரூபாய் முதலீட்டில் விறகு மண்டி தொடங்கினேன். அதில் இருந்து கொண்டே இயக்கப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டேன்.

1963 சூனில் திருச்சியில் தெப்பக்குளம் அருகில் தமிழ்நாடு தனிப்பயிற்சிக் கல்லூரி நிறுவனத்தைத் தொடங்கினேன். தனிப்பயிற்சிக் கல்லூரியை மிகத் திறமையாக நடத்தினேன். ஆனால் பெரும்பொருள் இழப்புக்கு ஆளானேன்.

1964 மார்ச்சு-ஏப்பிரலில் கொடிய வறுமையில் குடும்பம் அல்லாடியது. அப்போது மேலும் மூன்று மக்கள் - ஆ.வெற்றி, ஆ.வீரமணி, ஆ.அருட்செல்வி. அருட்செல்வி 2 அகவை குழந்தை; பசிக்கொடுமை தாங்காமல் ஈர மண்ணை எடுத்துத் தின்றாா். நோய்வாய்ப்பட்டாா்; அவளை 30.4.1964 பகல் திருச்சி தலைமை மருத்துவமனை யில் சேர்த்தோம். என் துணைவியார் சுச்சலா மட்டும் உடனிருந்தார்.

நான், 1.5.1964 காலை தொட்டியத்தில் நடைபெற இருந்த தி.க.தோழர் வீட்டுத் திருமண ஏற்பாட்டைச் செய்வதற்காகவும், அன்று மாலை அங்கு நடைபெற இருந்த பொதுக்கூட்ட ஏற்பாட்டைச் செய்வதற்காகவும் 30.4.1964 இரவே தொட்டியம் சென்றுவிட்டேன்.

என் மகள் அருட்செல்வி 30.4.1964 இரவு 8 மணிக்கு இறந்துவிட்டார். என் மனைவியும் மக்களும் உறையூரில் வீட்டில் கண்ணீரும் கம்பலையாகவும் இருந்தனர்.

1.5.1964 காலை 8 மணிக்குத் தொட்டியம் திருமண வீட்டை அடைந்த தந்தை பெரியார் என் மகள் இறந்து விட்ட செய்தியைச் சொல்லி, உடனே என்னை வீட்டுக்குப் போகச் சொன்னார். நான் 1.5.64 காலை 10.30 மணிக்கு என் மகளின் உடலைப் பார்த்தேன்; என் ஜென்னி சுசீலா அலறித் துடித்தார்.

இப்படிப்பட்ட இழப்புகள் பலவற்றை எதிர்கொண்டவர்- என் ஜென்னி! அவர் இன்று இல்லை, அய்யகோ!

1967 இல் ஒரு பெண்மகவு பிறந்தார். 30.4.64இல் மறைந்த அருட்செல்வியின் நினைவாக, அம்மகவுக்கு, அருள்மொழி எனப் பெயர் சூட்டினோம்.

என் துணைவியாரின் சிற்றப்பா கடலூர் ஆ.கோவிந்த சாமி 18.5.1969 அன்று மறைந்தார். அவருடைய நினைவைப் போற்றும் வண்ணம், 1968இல் பிறந்த ஆண் மகவுக்கு, கோவேந்தன் எனப் பெயரிட்டோம். நிற்க.

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் சார்பில் நாங்கள் ரூபாய் அறுபதாயிரம் வட்டிக்கும், இருபதாயிரம் கை மாற்றாகவும் பெற்று, 1.7.1974-இல் ‘‘பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்’’ மூன்று தொகுதிகளை வெளியிட்டோம்,

இவ்வளவு பணிகளிலும் ஈடுபட்ட நான் என் மக்க ளுக்கு நல்ல கல்வி தருவது பற்றியும் என் குடும்பத்தை வறுமை இல்லாமல் நடத்தக் கூடிய வருவாயைத் தேட வழி செய்யாமலும் என் துணைவியாரை அனலிடை யிட்ட புழுவாகத் துடிக்க விட்டேன், அவருடைய உடல் நலமும், என் உடல் நலமும் கெட்டது.

இந்த நிலையில் 16.11.1975 அன்று நான் திராவிடர் கழக அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கப் பட்டேன்; இன்னும் சிலரும் நீக்கப்பட்டனர்.

நீக்கப்பட்ட அனைவரும் 8.8.1976-இல் திருச்சியில் சீர்காழியில் கூடி ‘‘பெரியார் சம உரிமைக் கழகம்’’ என்ற தனி அமைப்பைத் தொடங்கினோம்.

இந்தச் சூழலில் 17.8.1974-இல் ‘‘சிந்தனையாளன்’’ இதழைத் தொடங்கினேன். 1981 வரை கிழமை இதழா கவும் மாதம் இருமுறை இதழாகவும் நடத்தினோம்.

என் மூத்த மகள் தமிழ்ச்செல்வியின் திருமணம் முடிந்த பிறகு, பாவேந்தர் அச்சகத்தை நிருவகிக்க வசதி யில்லை. உடனே சென்னைக்கு அச்சகத்தை ஒரு குழுமத்திற்கு விலைக்கு விற்றுவிட்டேன். அக்குழுமம் ஆறு மாத காலத்திற்கு சிந்தனையாளன் இதழைக் கிழமை இதழாக நடத்தியது. பெரிய இழப்பு ஏற்பட்டது. இதழை நிறுத்திவிட்டு, பிறகு 1986-இல் மாத இதழாகத் தொடங்கினோம்.

இடையில் எங்களுக்குள் சிறிது வருத்தம் ஏற்பட்டு நான் 1986-இல் வாலிகண்டபுரத்தில் குடியேறினேன். என் குடும்பம் சிதறுண்டது. என் மக்களின் கல்வி பாழாயிற்று.

அதனால் என் மக்களில் இருவரான மூத்த மகன் ஆ.பன்னீர்செல்வம், மூன்றாவது மகன் ஆ.வீரமணி ஆகியோர் சவுதி அரேபியா நாட்டிற்குச் சென்று எட்டு ஆண்டுகள் அங்குத் தங்கி 1995-இல் இருவரும் திரும்பினர்.

26.2.1995-இல் ஆனை. பன்னீர்செல்வம் - சேலம் மல்லூர் செ.போதம்மாள், அருள்மொழி-க.ராமச்சந்திரன் திருமணங்கள் நடைபெற்றன.

13.9.1998-இல் ஆனை. வெற்றி-இரா. விசயலட்சுமி, ஆனை. வீரமணி-க.மலர்க்கொடி ஆகியோரின் திருமணங்கள் தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் தலைமையில் நடைபெற்றன.

எங்களின் நான்கு குடும்பங்கள் புதுச்சேரியிலும், இரண்டு குடும்பங்கள் சென்னை மேற்குத் தாம்பரத்திலும் தனித்தனியாக வாழும்படி நேரிட்டது.

நான்காவது மகன் ஆ.கோவேந்தன் அரசு வேலையில் உள்ளார். அவருக்குக் குடும்பம் இல்லை. எனவே அவர் தன்னுடைய உடல்நலத்தையும், தாயார் ஆ. சுசீலா அவர்களின் உடல் நலத்தையும் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.

புதுவையில் உள்ளவர்கள் அவ்வப்போது தாம்பரத்திற்கு வந்து அம்மா சுசீலா அவர்களைப் பார்த்துக் கொண்டார்கள்.

என்னுடையவும், எங்கள் இயக்கத்தினுடையவும் அரிய சாதனைகள் மூன்று.

1. வடநாட்டில், மாநில அரசுகளில், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 1978-இல் இடஒதுக்கீடு பெற்றது.
2. தமிழ்நாட்டு மாநில அரசில் 1979-இல் 31 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோருக்கு இருந்ததை 50 விழுக்காடாக 1.2.1980-இல் பெற்றுத் தந்தது.
3. இந்திய மத்திய அரசில், முதன்முதலாக 1990-இல் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு பெற்றுத் தந்தது. இது 1994-இல் முதன்முதல் நடப்புக்கு வந்தது.

நானும் என் தோழர்களும் 1978 முதல் 2017 வரையில் இந்தியா முழுவதும் சென்று இவற்றுக்கு முயற்சித்தோம். நான் தனியாக என் மனைவி, மக்களை விட்டுவிட்டு அதிக நாள் வடநாட்டில் பணி செய்தேன். அது என் உடல்நலத்தை மட்டும் அல்லாமல், என் துணைவியாருடைய உடல்நலத்தையும் நான் கவனிக்க முடியாமல் செய்துவிட்டது. இந்த வகையில் என் அரிய செயல்கள் எல்லாவற்றிற்கும் மறைந்த என் ஜென்னி ஆ. சுசீலா அவர்கள் பின்புலமாக விளங்கினார் என்பதை மன நிறைவோடும், அதே நேரத்தில் நீங்காத் துன்பத்தோடும் கூறுகிறேன். என் குடும்பத்தார் அனைவருக்கும் உறவினர்களுக்கும், மா.பெ.பொ.கட்சித் தோழர்களுக்கும், சிந்தனையாளன் ஆசிரியர் குழுவினருக்கும், பெரியார் நாகம்மை அறக்கட்டளையினருக்கும், தமிழக மக்களுக்கும், நேரில் வருகை தந்து எங்கள் குடும்பத் துயரத்தில் பங்குபெற்ற தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

28.4.2019 ஞாயிறு இரவு 9 மணிமுதல் தன் பெற்ற தாயாரை எப்படியும் காப்பாற்றித் தீரவேண்டும் என்று இரவும் பகலுமாகக் கண்விழித்து மருத்துவம் பார்க்க ஏற்பாடு செய்த என் மூத்த மகன் ஆனை. பன்னீர் செல்வம், அவருடைய துணைவியார் போதம்மாள், என் பெயர்த்தி ஆசுபள்; புதுவை ஆ. வெற்றி மனைவி விசயலட்சுமி, ஆ.வீரமணி மனைவி மலர்க்கொடி, இளைய மகன் ஆ. கோவேந்தன், தாம்பரம் மா. சுப்பிரமணி, சென்னை கல்வி அலுவலர் ஆ. மதிவாணன் மற்றும் தோழர்களுக்கும், என் மைத்துனர்கள் ஆ.கோ. சம்பத், மருத்துவர் ஆ.கோ. இளங்கோவன், சகலர் ஆதிமூலம், இ.ஆ.ப. (I.A.S.) அவருடைய துணைவியார் மல்லிகா ஆகியோருக்கும் மைத்துனர்கள், மைத்துனிகள், சீனு. அரிமாப் பாண்டியன்-தமிழ்ச்செல்வி, க. இராமச்சந்திரன்-அருள்மொழி, வடக்கு மாங்குடி சம்பந்திகள், ம. புடையூர் சம்பந்திகள், முருக்கன்குடி உறவினர்கள், வடக்கலூர் அகரம் உறவினர்கள், வாலிகண்டபுரம் உறவினர்கள் அனைவருக்கும் மனங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

**2.5.2019** **- வே.ஆனைமுத்து**

---

## பெரியாரின் தோழர் வே.ஆனைமுத்து ஐயா அவர்களின் துணைவியார் திருவாட்டி சுசீலா அம்மையார் மறைவு

## இரங்கற் பா!

துணையின் பணிபற்றித் தோழமையாய் வாழ்ந்த
இணைநீங்கள்! மேன்மை இருப்பு! – பிணைத்துள்ள
நும்சீரார் செல்வங்கள் நும்பரிவை நீங்கினும்
அம்புகழ் வாடா அறம்.

பசித்திருந்த பூனைகள் பாசமறா நாய்கள்
விசித்தழு தே! சுசீலா... மீள்வீர் – கசிந்துருகும்
தோழரை அன்பரை சுற்றத்தை நீங்கினீர்.
ஆழத் தொழுதோம் அடல்.

வேறு

அயலகத்தில் இருப்பினும் அன்பின் இருப்பாய்
நயவுரை அளித்தும் நட்புறு தோழராய்
உங்கள் அருகிருக்கும் உளத்துடன் நாங்கள்
எங்களின் மனம் நீர் ஏந்தியதே!!!

பாவேந்தர் பேர்த்தி
**பாவலர் மணிமேகலை குப்புசாமி**
ரெளன்பரக் செர்மனி

# தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர், பெரியார் போர்ப்படையின் முரசாக விளங்கிய, கவிஞர் தமிழேந்தி மறைந்தார். அந்தோ!



வடஆர்க்காடு மாவட்டத்தில், முதன்முதலில் அரக்கோணத்தில் 1978இல் தமிழேந்தியின் இல்லத்தில் பெரியார் சம உரிமைக் கழகச் சார்பில் நானும் ஆசிரியர் ந.கணபதியும் அவர்களும் சந்தித்தோம்.

தமிழேந்தி அவர்கள் பள்ளி ஆசிரியர் என்பதையும், வானொலியில் அடிக்கடி பாடல்களைப் படிப்பவர் என்பதையும் அப்போது அறிந்தேன்.

**அவருடைய பாடல்கள் சோர்ந்து போன உடம்பில் ஊக்கத்தை ஊட்டுபவை; நைந்து போன நெஞ்சில் வீரத்தை விதைப்பவை.**

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் வீரார்ந்த வேலைத் திட்டங்களைப் போர்ப்பரணி போல் முழங்குவார், தமிழேந்தி.**

கட்சி மாநாட்டு ஊர்வலங்களில், ஊர்வலத் தலைமை தாங்குவது தமிழேந்தி மட்டுமே. அவர் சலிக்காமல்-யானை பிளிறுவது போல ஊர்வல முகப்பில் முழங்குவார்.

அவர் 6.3.2016இல் திடுமென ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது மயக்கமுற்று, இரவு போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு மூளையில் குருதிக் கசிவு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. உடனே வலக்கை, வலதுகால் இரண்டும் துவண்டுவிட்டன.

மூன்று ஆண்டுகளாக, கொளத்தூர் மகள் வீட்டிலும், அரக்கோணம் சொந்த வீட்டிலும் மாறி மாறி இருந்தார். நேற்று இரவு 4.5.2019 இரவுதான் மகள் வீட்டி லிருந்து, அரக்கோணத்திற்கு வந்தார்.

5.5.2019 காலை 7.30 மணிக்கு, குளிப்பதற் காகக் குளியல் அறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கேயே மயக்கமுற்றார். உடனே மருத்துவமனைக் குக் கொண்டு போயினர். அங்கு, ‘‘அவர் ஏற்கெனவே இறந்துவிட்டார்’’ என்று மருத்துவர்கள் அறிவித்தார்கள்.

மா.பெ.பொ.க. தோழர்களுக்கெல்லாம், இச்செய்தி தங்கள் தங்கள் வீட்டில் ஒரு சாவு நடந்தது போல் ஆகிவிட்டது.

நானும் என் மக்களும் எங்கள் குடும்பத் தலைவி சுசீலா அவர்களை 30.4.2019 இரவு இழந்தோம். இன்னும் அந்தத் துயரில் இருந்து நாங்கள் மீளவில்லை.

என் பாலும், என் துணைவியார் பாலும், என் மக்கள் பேரிலும் குருதிப்பாசம் கொண்டவர் தமிழேந்தி.

இன்று தமிழேந்தியை இழந்து எங்கள் குடும்பத் தாரும், மா.பெ.பொ.க. தோழர்களும் அடங்காத் துயரம் அடைகிறோம்.

நம்மில் ஒரு தமிழேந்தி உருவாக வேண்டும். அவர், தமிழேந்தி போல் அமையாவிட்டாலும் அவரு டைய பாடல்களை நாட்டு நலன் கருதி நிலை நாட்டுப வராக விளங்க வேண்டும் என பேராவலுடன் வேண்டு கிறேன்.

கவிஞர் தமிழேந்தியின் மறைவு, மா.பெ.பொ.க. வுக்கும் ‘‘சிந்தனையாளன்’’ இதழுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

தம் கணவரை இழந்து துடிக்கும் அவரது துணைவி யார் இராணி அவர்களுக்கும், மகன் பாவேந்தர் அவர் களுக்கும், இரண்டு மகள்களுக்கும், இரண்டு மருமகன் களுக்கும், அவருடைய குழந்தைகளுக்கும்; சோளிங்க புரம் உடன்பிறவாத் தமையன் க.முகிலன், அவருடைய துணைவியார் கலைமகள், மற்றும் அவருடைய குடும் பத்தார் அவர்களுக்கும், ஆயிரமாயிரம் மா.பெ.பொ.க. குடும்பத் தோழர்களுக்கும் என் சார்பிலும் என் குடும்பத் தார் சார்பிலும் மா.பெ.பொ.க. சார்பிலும், சிந்தயைாளன் ஆசிரியர் குழு சார்பிலும் தமிழேந்தியை அறிந்த எல்லாத் தோழமை அமைப்பினர்க்கும் என்னுடையவும், என் குடும்பத்தினுடையவும் மனங்கசிந்த இரங்கலையும் வருத்தத்தையும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாழ்க, வளர்க கவிஞர் தமிழேந்தியின் புகழ்!**

**5.5.2019** **வே.ஆனைமுத்து**

## பாவலர் தமிழேந்தி ஐயா மறைவு!!!

சிந்தனை யாளனின் செம்மாப்பே!! போகுதியோ!!
வந்தனை நந்தமிழன் வாழ்வெனவே! – முந்துபகை
இஃதெனும் சாட்டையடி ஏந்தும்பா தந்தனை.
எஃகுமனத் தீரே இழப்பு!!!

பாவேந்தர் பேர்த்தி
**மணிமேகலை குப்புசாமி**
ரெளன் பர்க், செர்மனியிலிருந்து.

# மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர்களுக்கு மனந்திறந்த வேண்டுகோள்!

என் துணைவியார் தோழியர் **ஆ. சுசீலா** அவர்களின் இறுதி நிகழ்ச்சிக்குப் பல மாவட்டச் செயலாளர்களும் 1.5.2019 புதன் அன்று, தாம்பரத்துக்கு வருகை தந்து, எனக்கும் என் குடும்பத் தாருக்கும் ஆறுதல் கூறித் தெம்பூட்டினீர்கள். பெருநன்றி.

**அடுத்து, 2019 சூன் 21 அன்று நான் 95ஆம் அகவையைத் தொடுவேன். என் 95 அகவை தொடக்கத்தில், நம் கட்சியை, முறைப்படி ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாக அமைத்துத் தாருங்கள் என வேண்டுகிறேன்.**

**இதை முன்வைத்து, 2019 மே 15 முதல் 31.10.2019-க்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டச் செயலாளர் தலைமையில் செயல்பட்டு-மா.பெ.பொ.க. இளைஞரணித் தோழர்கள் தி. துரைசித்தார்த்தன், ஆ.முத்தமிழ்ச் செல்வன், வாணியம்பாடி நா.மதனகவி ஆகியோர், முன்கூட்டி நன்கு திட்டமிட்டு, ஒரு மாவட்டத்துக்குக் குறைந்தது 50 முதல் 100-க்குக் குறையாமல் கட்சி அடிப்படை உறுப்பினர்களைச் சேர்த்து அளிக்க அன்புடன் வேண்டுகிறேன்.**

தோழமையுள்ள
**வே. ஆனைமுத்து**
பொதுச் செயலாளர்

அம்பத்தூர்
03-05-2019

# திராவிடர் கழகத்தலைவர் ஆசிரியர் கி.வீரமணி இரங்கல் செய்தி



## திராவிடர் கழகம்

தலைமை நிலையம்: பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007.
தமிழ்நாடு, இந்தியா. தொலைப்பேசி : 91-44-26618161,62,63 தொலைப்பதிவி : 91-44-26618866
மின் அஞ்சல் : dkheadquarters@gmail.com இணையதளம் : www.dravidarkazhagam.org

நிறுவனத் தலைவர்
**தந்தை பெரியார்**

தலைவர்
**கி.வீரமணி,** எம்.ஏ.,பி.எல்.,

பெறுநர்:

01.05.2019

**தோழர் வே.ஆனைமுத்து** அவர்கள்,

சென்னை.

அன்புடையீர்!

வணக்கம். தங்களின் அருமை வாழ்விணையர் திருமதி சுசீலா அவர்கள் மறைவுற்றார் என்பதை அறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

தங்கள் பொதுவாழ்வில் உற்ற துணைவராக இருந்தவர் அம்மையார் ஆவார்கள். அவர்களின் மறைவு தங்களைப் பொறுத்தவரை பேரிழப்பாகும்.

பெருந்துயரத்திற்கு ஆளாகியுள்ள தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அன்புடன்,**

**(கி.வீரமணி)**

# 43 ஆண்டுகளில்

# சிந்தனையாளன் சாதித்தவை என்ன?

**- வே. ஆனைமுத்து**

பெரியார் சமஉரிமைக் கழகம் 8.8.1976இல் நிறுவப்பட்டது. அதன் பெயர் 1988இல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி என மாற்றப் பட்டது.

சிந்தனையாளன், கிழமை இதழாக 17.8.1974இல் தொடங்கப்பட்டது. அது, நான் தொடங்கிய மூன்றாவது கிழமை இதழாகும். இப்போது சிந்தனையாளன் 43 ஆண்டுகளையும் 10 மாதங்களையும் 2019 ஏப்பிரல் வரை முடித்துள்ளது. இவ்வளவு செய்திகளையும் நாம் ஒரு சேர எண்ணிப் பார்க்க வேண்டும்.

**தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகள் வகுப்புவாரி உரிமை, நால்வருண ஒழிப்பு, சமதர்ம ஆட்சி அமைப்பு என்பவை ஆகும்.**

நாம் சீர்காழியில் கட்சியை அமைத்தபோதே, ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டோம். தந்தை பெரியார் அவர்களின் வேலைத் திட்டங்களுள் “வகுப்பு வாரி உரிமை” என்கிற வேலைத் திட்டத்தையாவது அனைத்திந்திய அளவில் பரப்புரை செய்து வெற்றி பெற வேண்டும் என்று முடிவு செய்தோம்.

நம் கட்சிக்கு வழிகாட்டிகளாக அமைந்த சேலம் அ.சித்தய்யன், 1929 முதல் தந்தை பெரியாரின் தொண்டராகப் பணியாற்றிப் பயிற்சி பெற்றவர். தாதம்பட்டி ம.இராசு பெரியாரின் தமையனாருடைய மருமகனாவார். இவர்களின் நீங்காத் துணை நமக்கு இவ்விருவரின் மூச்சடங்கும் வரை கிடைத்தது.

பெரியாரின் வகுப்புரிமைக் கோரிக்கை வேண்டுகோள் விண்ணப்பத்தை ஆங்கிலம், தமிழ், இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் அறிக்கையாக அச்சடித்துக் கொண்டு, 29.4.1978இல் நானும், சீர்காழி மா.முத்துச்சாமி, சேலம் ம.இராசு ஆகிய மூவரும் தில்லியை அடைந்தோம்.

இப்பயணத்தைத் திட்டமிட்டபோது வாழப்பாடி கூ.இராமமூர்த்தி அவர்கள் மக்களவையின் உறுப்பினராக இருந்தார். அவருடைய இல்லத்தில், நாங்கள் எப்போது தில்லி சென்றாலும், 1992 வரை தங்கிக் கொண்டோம். இது நம் பணிக்கு மிகவும் வசதியாக அமைந்தது.

தில்லியில், 30.4.1978 முதல் அன்றாடம் 10 முதல் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து நம் கோரிக்கையை அவர்களுக்கு விளக்கினோம்.

29.4.1978இல் பி.பி.மண்டல் அவர்களைத் தில்லியில் சந்தித்துப் பேசினோம். மண்டல் அவர்களின் ஆலோசனையின் பேரில், 6.5.1978 மாலை இராம் அவதேஷ்சிங் என்கிற மக்களவை உறுப்பினரைச் சந்தித்தோம். அவர் 7.5.1978இல் முசாபர் நகரில் நடைபெற்ற “உத்தரப் பிரதேசப் பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டுக்கு” எங்களை அழைத்துச் சென்றார். அந்த மாநாட்டில் 1944ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்களை, கான்பூருக்கு அழைத்து “அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர் லீக் மாநாட்டை” நடத்திய சிவ் தயாள் சிங் சௌராசியா அவர்களின் அறிமுகமும், 1959இல் லக்னோவுக்கு தந்தை பெரியாரை அழைத்த செடிலால் சாத்தி அவர்களின் அறிமுகமும் எனக்குக் கிடைத்தன. வடமாநிலங்களில் நாங்கள் செயல்பட இவர்களின் துணை நன்கு பயன்பட்டது.

8.5.1978இல் மக்களவை உறுப்பினர் வாழப்பாடி கூ.இராமமூர்த்தி, வே.ஆனைமுத்து, ம.இராசு, சீர்காழி மா.முத்துசாமி ஆகிய நால்வரும், அன்றைய குடிஅரசுத் தலைவர் நீலம் சஞ்சீவிரெட்டி அவர்களைச் சந்தித்து நீண்ட நேரம் நம் கோரிக்கை குறித்து விவாதித்தோம். அவர், நாங்கள் கொடுத்த கோரிக்கை ஆவணத்தை முழுவதும் படித்தார். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு பெறுவதை அவர் விரும்பவில்லை; வேறு சிக்கலுக்கு எங்களுடைய கவனத்தைத் திருப்பினார். “நான் இந்தியில் பேச வேண்டுமென்று வடநாட்டுக்காரர்கள் வற்புறுத்துகிறார்கள். நீங்கள் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு மாநாடு போடுங்கள், நான் வந்து பேசுகிறேன்” என்று அவர் எங்களை திசை திருப்பினார்.

11.5.1978இல் அன்றைய உள்துறை இணை அமைச்சர் தணிக் லால் மண்டல் அவர்களை அவருடைய இல்லத்தில் சந்தித்தோம். அவர் பொறுமையாக எங்களுடைய கோரிக்கையைப் படித்துவிட்டு, “நான் நூற்றுக்கு நூறு இதை ஒப்புக் கொள்கிறேன்” என்று மகிழ்ச்சியாகக் கூறினார். உடனே சென்னை கே.சுப்பிரமணியன் மூலம், நாங்கள் சென்னையில் 24.6.1978இல் நடத்த இருக்கும் அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டினை அவர் தொடங்கி வைத்திட ஒப்புதல் பெற்றோம்.

**இவ்வளவு பயணச் செய்திகளையும் தமிழ்நாட்டில் பரப்பியது சிந்தனையாளன் ஏடு மட்டுமே.**

அடுத்து, சென்னை மாநாட்டுச் செய்திகளையும், கேரளச் சுற்றுப்பயணம், கருநாடகச் சுற்றுப் பயணம் இவற்றைப் பற்றியும், 19.8.1978இல் அமைக்கப்பட்ட அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச்சிறுபான்மையினர் பேரவையின் செய்திகளையும் பரப்பியது சிந்தனையாளன் ஏடு மட்டுமே.

சென்னை மாநாட்டின் முடிவை ஒட்டியும், பேரவை அமைப்பின் முடிவை ஒட்டியும் தமிழ்நாட்டிலிருந்து ஒரு பரப்புரைக் குழுவினரை இராம் அவதேஷ் சிங் பீகாருக்கு அழைத்தார். வே.ஆனைமுத்து, சீர்காழி மா.முத்துச்சாமி,

வேலூர் நா.ப.செந்தமிழ்க்கோ, திருச்சி து.மா.பெரியசாமி ஆகிய நால்வர் அடங்கிய பயணக்குழுவினர் 16.9.1979 காலை பீகார் தலைநகர் பாட்னா போய்ச் சேர்ந்தோம். அப்போதைய பீகார் மாநிலத்தின் 31 மாவட்டங்களில் 31 நாள்களில் நாங்கள் தொடர்ந்து பரப்புரை செய்தோம். அக்டோபர் 10ஆம் நாளுக்குப் பிறகு பிரதமர் மொரார்ஜி தேசாய் எங்களுக்கு எதிராகப் பரப்புரை செய்தார். அவரை பீகாரில் எங்கும் பேசவிடாமல் மக்கள் தடுத்துவிட்டனர்.

இதனாலும், பீகாரில் இரண்டு தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஜனதா கட்சிக்கு எதிராக ஆள்களை நாங்கள் நிற்க வைத்ததாலும், பிரதமர் தேசாய் நல்ல பாடம் கற்றார்.

நாங்கள் பாட்னாவில் காந்தி மைதானத்தில் அக்டோபர் 19 முதல் 3 வரை நடத்திய போராட்டத்தில் 10 ஆயிரம் பேர் சிறைப்பட்டனர். இந்த மூன்று காரணங்களால்தான் சனதா கட்சி அரசாங்கம் “இரண்டாவது அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அரசு அமைக்கும்” என்று பிரதமர் தேசாய் 20.11.1978இல் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அதேபோல் பிந்தேசுவரி பிரசாத் மண்டல் அவர்களை மேற்படி ஆணையத்துக்குத் தலைவராகப் பிரதமர் நியமித்தார்.

**நம் கோரிக்கையின் முதல் பகுதி இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.**

அடுத்து 23.3.1979இல் தில்லியில் பெரியார் நூற்றாண்டு விழாவையும், டாக்டர் லோகியாவின் 80ஆம் பிறந்த நாள் விழாவையும் தில்லியில் நடத்தினோம். தமிழ்நாட்டிலிருந்து குடும்பம் குடும்பமாக 200 பேர் கலந்து கொண்டனர். பீகார், இராசஸ்தான், உத்தரப் பிரதேசம், அரியானா, பஞ்சாப், கேரளா, ஆந்திரா, கருநாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்து 27 ஆயிரம் பேரும், பழைய தில்லி பெரோஷா கோட்லா மைதானத் திலிருந்து 8 கி.மீ., நடந்து அவரவர் மொழியில் இடஒதுக்கீடு கோரிக்கை முழக்கத்தை முழங்கிக் கொண்டு பகல் 2 மணிக்கு போட் கிளப் மைதானத்தை வந்தடைந்தோம். அங்கு நடந்த விழாவுக்கு வே.ஆனைமுத்து தலைமை ஏற்றார்; இராம் அவதேஷ்சிங் வரவேற்புரை ஆற்றினார். துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன்ராம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்; முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜ் நாராயண் பெரியாரின் எழுத்தும் பேச்சும் அடங்கிய இந்தி மொழியாக்க நூலை விழாவில் வெளியிட்டார்.

இவ்வளவு செய்திகளையும் சிந்தனையாளன் ஏடு பரப்பியதால்தான் இப்படிப்பட்ட அடிப்படைப் பணிகளை நாம் செய்திட முடிந்தது. ஆங்கிலத்திலும் Periyar Era என்கிற மாத ஏட்டையும் தொடங்கி நடத்தினோம்.

தமிழ்நாட்டில், பிற்படுத்தப்பட்டோருக்கு இடையூறு செய்யும் தன்மையில், “9 ஆயிரம் வருமான உச்ச வரம்பு ஆணையை” முதல்வர் எம்.ஜி.ஆர்.அரசு 1979 இல் வெளியிட்டது. எல்லாக் கட்சிகளும் அந்த வருமான வரம்பு ஆணையை எதிர்த்தன;

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மட்டும். அந்த ஆணையை எதிர்த்ததுடன் மட்டும் நில்லாமல், முதன்மையான ஒரு செய்தியை விளக்கித் தமிழக அரசுக்கு ஒரு கோரிக்கையை ஆவணமாக அச்சிட்டு அளித்தது. அந்தச் செய்தி வருமாறு:

1976இல் உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு முர்த்துசா பசல் அலி அவர்கள் பின்வருமாறு (State of kerala Vs. N.M. Thomas, AIR 1976, SC 40) தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். அதாவது “ஒரு மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் 80 விழுக்காடு இருப்பார்களானால் - அந்த மாநில அரசு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு விதி 16(4)இன்படி 80 விழுக்காடு வேலையில் இடஒதுக்கீடு வழங்கலாம் அல்லவா? அப்படிச் செய்வதை விதி 16(4) தடுக்காது” என்று குறிப்பிட்டார்.

ஏற்கெனவே தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட்டோருக்கு மொத்தம் 31 விழுக்காடு மட்டும் இடஒதுக்கீடு 1971இல் வழங்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் எல்லோரும் அதில் இடம்பெற முடியாது என்று அரசு கருதினால், அவர்களுக்குரிய இடஒதுக்கீட்டின் அளவை அவர்களுடைய மக்கள் தொகையைக் கணக்கெடுத்து உயர்த்தி வழங்க வேண்டும். அதை விட்டுவிட்டு 31 விழுக்காட்டை உயர்த்தாமல், வருவாய் குறைந்தவர்களுக்கு மட்டும் இடஒதுக்கீடு கொடுப்பது அநீதியாகும்.

இந்தச் செய்திகளை அன்றைய தமிழக அமைச்சர் பண்ருட்டி ச.இராமச்சந்திரன் மூலம் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் புரிய வைத்தோம். அதனால்தான் எம்.ஜி.ஆர். அவர்கள், 1.2.1980இல், 31 விழுக்காட்டுடன் 19 விழுக்காட்டைச் சேர்த்து தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 50 விழுக்காடாக உயர்த்தினார்.

**இது நம் சாதனை.**

**2019 சூன் மாதம் சிந்தனையாளன் ஏடு 43ஆம் ஆண்டுகளை முடித்து, சூலை மாதம் 44ஆம் ஆண்டின் முதல் இதழ் வெளிவரும்.**

**நம் தோழர்கள் தொடர்ந்து கட்டுரை எழுதி வருகின்றனர். மேலும் பலர் வருந்தி முயன்று கட்டுரைகள் எழுதி, அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

**நான் உடல் நலிவுற்ற நிலையில், சொந்தமாகக் கட்டுரை எழுத முடியாத நிலையில் துன்பப்படுகிறேன்.**

**நம் துணைப் பொதுச் செயலாளர்கள், துணை அமைப்புகளின் பொறுப்பாளர்கள் மாவட்டச் செயலாளர்கள், அருள்கூர்ந்து வருந்தி முயன்று சிந்தனையாளன் படிகளின் எண்ணிக்கையை இரு மடங்காக்கும் தன்மையில் முயன்று ஓர் ஆண்டு-மூன்றாண்டு-வாழ்நாள் எனப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்குமாறும் உறுப்பினர்களை சேர்க்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.** ❖

# 'மே நாள்' வரலாறு

- செங்கதிர்

உற்பத்திச் செயலில் ஈடுபடுதல் என்பது மனித இனத்தைப் பிற உயிரினங்களிலிருந்து பிரித்துக் காட்டும் முதன்மையான கூறு ஆகும். பிற உயிரினங்கள் தம் தேவைகளுக்காக இயற்கையில் இருப்பவற்றை அப் படியே பயன்படுத்துகின்றன. மனிதன் மட்டுமே இயற் கையில் இருப்பவற்றைக் கருவியைக் கொண்டு தன் உழைப்பைச் செலுத்தி தன் தேவைகளுக்கு ஏற்ப உற் பத்தி செய்து பயன்படுத்திக் கொள்கிறான்.

ஆதிகாலத்தில் மனிதர்கள் உற்பத்திச் செயலில் கூட்டாகத் தம் உழைப்பைச் செலுத்தினர். உற்பத்தி யில் கிடைத்ததைச் சமமாகப் பகிர்ந்து கொண்டனர். காலப்போக்கில் தனிச் சொத்துடைமை ஏற்பட்டது. சமூகத்தில் வர்க்கப் பிரிவினை உண்டாயிற்று. அடிமை முறை தோன்றியது. உற்பத்திச் சாதனங்களை உடை மையாகப் பெற்றிருந்தோர், இவை இல்லாதவர்களின் உழைப்பைச் சுரண்டினர். நிலவுடைமைச் சமுதாயத் தில் நிலப்பிரபு-பண்ணையடிமை என்கிற உற்பத்தி உறவின் மூலம் உழைப்புச் சுரண்டல் நிலவியது. முதலாளிய உற்பத்தி முறை ஏற்பட்ட பிறகு முதலாளி-தொழிலாளி என்கிற உற்பத்தி உறவு தோன்றியது.

முதலாளிய உற்பத்தியின் முதன்மையான கூறு எரி சக்தியைக் கொண்டு இயந்திரங்களை இயக்குவதன் மூலம் பெருவீத அளவில் உற்பத்தி செய்வதே ஆகும். அதற்கு முன்வரை மனித உடலுழைப்பைக் கொண்டே உற்பத்தி நிகழ்ந்தது.

முதலாளியம் பற்றிய வரலாற்றில் கி.பி.1500-1750 வரையிலான காலத்தை வணிக முதலாளியக் கட்டம் என்று குறிப்பிடுகின்றனர். பிரிட்டன், பிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுக்கல், ஹாலந்து முதலான அய்ரோப் பிய நாடுகள் தங்களுடைய வணிக ஆதிக்கத்தை இக்காலக் கட்டத்தில் பல நாடுகளிலும் விரிவுபடுத்த முனைந்தன.

1759 முதல் நீராவியின் ஆற்றலைக் கொண்டு இயந்திரங்கள் மூலமாகப் பொருள்களை உற்பத்தி செய்வது என்பது தொடங்கியது. அதனால் அதற்குமுன் பத்துப் பேர் செய்த வேலையை ஒரே இயந்திரம் செய்து விடக் கூடிய நிலை ஏற்பட்டது. 1814-இல் இரயில் என்ஜின் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால், முதலாளிய உற்பத்திக்குத் தேவையான இரும்பு, நிலக்கரி முதலான கனிமங்களையும், பருத்தி முதலான மூலப் பொருள் களையும் மலிவான விலையில் உலகின் எந்தவொரு பகுதியிலிருந்தும் பெறக்கூடிய பேராற்றலை முதலாளியம் பெற்றது. இதேபோன்று உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்கான சந்தையையும் விரிவுபடுத்த உதவியது.

முதலாளிய உற்பத்தியில் கடுமையான போட்டி நிலவியது. தொடக்கத்தில் 14 மணிமுதல் 18 மணிநேரம் வரை தொழிலாளர்கள் உழைக்குமாறு கட்டாயப்படுத்தப் பட்டனர். இக்கொடிய உழைப்புச் சுரண்டலால் எண்ணற்ற தொழிலாளர்கள் தொழிற்சாலைகளிலேயே மடிந்தனர். உயிரையே உண்ணும் உழைப்புச் சுரண்டலுக்கு எதிராகத் தொழிலாளர்கள் அணிதிரண்டனர். தொழிற்சங்கம் அமைத்தனர்.



*2019 பிப்ரவரி 7 அன்று மகாராட்டித்தில் சின்சவாத்தில் வேலைவாய்ப்புச் சந்தையில் (Job Fair) காத்திருந்தோர்*

வடஅமெரிக்காவில் பிலடெல்பியா நகரில் 1806-இல் தொடங்கப்பட்ட தொழிற்சங்கம்தான் உலகின் முதலாவது தொழிற்சங்கம் என்று கருதப்படுகிறது. இது உருவான இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் இங்கி லாந்தில் தொழிற்சங்கம் ஏற்பட்டது. வேலை நேரத்தைப் பத்துமணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்று கோரி 1827-இல் பிலடெல்பியா நகரில் கட்டுமானத் தொழி லாளர் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது. அதன் பின் அய்ரோப்பிய நாடுகளிலும் வேலை நேரத்தைக் குறைக்கக் கோரி தொழிற்சங்கங்கள் போராட்டங்களில் ஈடுபட்டன. முதலாளிகள் தொழிலாளர்கள் மீது கொடுமை யான ஒடுக்குமுறைகளை ஏவினர். அரசுகளும் முதலாளி களுக்குச் சார்பாகவே செயல்பட்டன.

1848 பிப்பிரவரியில் காரல்மார்க்சு, பிரடெரிக் எங்கல்சு எழுதிய 'கம்யூனிஸ்ட் அறிக்கை' வெளியானது. இந்த அறிக்கை தொழிற்சங்க இயக்கம் வீறுகொண்டு செயல்பட உந்து விசையாக அமைந்தது. ஒவ்வொரு நாட்டிலும் ஏற்படுத்தப்பட்ட தொழிற்சங்கங்களை ஒருங்கி ணைக்கும் வகையில் 'தேசியத் தொழிற்சங்கம்' உரு வாக்கப்பட்டது. தேசியத் தொழிற்சங்கங்களை ஒருங்கி ணைத்து உலக அளவில் தொழிலாளர்களிடையே ஓர்மையை உருவாக்கவும் வழிகாட்டவும் 'சர்வதேசத் தொழிலாளர் சங்கம்' (International Workingmen's Association) செப்டம்பர் 24 அன்று இலண்டன் மாநகரில் செயின்ட் மார்டின் மண்டபத்தில் உருவாக்கப்பட்டது. **இதில் முதன்மையானவர்களில் ஒருவராகக் காரல்மார்க்சு**



*2014 அக்டோபர் 17 அன்று நெய்வேலி என்.எல்.சி. ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக அனைத்துக் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டம்*

**இருந்தார். இக்கூட்டத்தில் அய்ரோப்பாவின் பல நாடுகளிலிருந்து தொழிலாளர்கள் பிரதிநிதிகள் 2000 பேர் கலந்துகொண்டனர். சர்வதேசத் தொழிலாளர் சங்கம் தமிழில் 'முதலாவது அகிலம்' என்று குறிப்பிடப் படுகிறது. முதலாவது அகிலத்தின் கூட்டம் 1866 செப்டம்பரில் ஜெனிவாவில் நடைபெற்றது. அப்போது 8 மணிநேர வேலை என்பது சட்டமாக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதே கோரிக் கையை முன்வைத்து அமெரிக்காவிலும் ஆஸ்திரேலி யாவிலும் தொழிற்சங்கங்கள் போராடிவந்தன.**

அமெரிக்காவில் 1886 மே முதல் நாள் முதல், எட்டு மணிநேர வேலை என்பதைச் சட்டமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துத் தொடர்ந்து போராட்டங்கள் நடத்துவது என்று தொழிற்சங்கங்கள் முடிவெடுத்தன. சிக்காகோ நகரில் அனைத்துத் தொழி லாளர்களும் 1886 மே முதல் நாள் வேலை நிறுத்தம் செய்தனர். 1886 மே 3 அன்று தொழிலாளர்கள் மீது கண்மூடித்தனமான முறையில் தாக்குதல் நடத்திய தைக் கண்டித்து மே 4 அன்று வைக்கோல் சந்தை (Hay Market) இடத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திடத் தொழிலாளர் கள் கூடினர்.

அப்போது கூட்டத்தில் எறியப்பட்ட ஒரு குண்டு இராணுவ அதிகாரி ஒருவரைக் கொன்றது. இதன் விளைவாக எழுந்த மோதலில், ஏழு காவல் துறையி னரும் நான்கு தொழிலாளர்களும் கொல்லப்பட்டனர். எண்ணற்ற தொழிலாளர் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலில் வைக்கோல் சந்தை வெளியில் தொழி லாளர் குருதி ஆறாய் ஓடியது. **இக்குருதியில் தோய்ந்த தொழிலாளர்களின் சட்டைகளே தொழிலாளர் களின் போர்க் குணத்தையும் விடுதலையையும் குறிக்கும் செங்கொடியாக மாறியது. சிக்காகோ தொழிற்சங்கத் தலைவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவர்களில் நால்வர் தூக்கிலிடப்பட்டனர். பலருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இது உலகம் முழுவதும் தொழிலாளர் களிடையே பேரெழுச்சியை உண்டாக்கியது.**

சிக்காகோ தொழிலாளர் தலைவர்கள் தூக்கிலிடப் பட்ட ஓராண்டுக்குப்பின், 1888 திசம்பரில் செயின்ட் லூயிஸ் நகரில் அமெரிக்காவின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கூடியது. அக்கூட்டத்தில் 1890 மே முதல் நாளை 8 மணிநேர வேலை நாள் மற்றும் தொழிலா ளர்களின் மற்ற கோரிக்கைகளுக்கான நாளாக அறிவித்து வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம் செய்வ தென முடிவு செய்யப்பட்டது.

**பிரெஞ்சுப் புரட்சியில் 1789 சூலை 14 பாஸ்டில் சிறை தகர்க்கப்பட்டதன் நூற்றாண்டையொட்டி, 1889 சூலை 14 அன்று பாரிசு நகரில் சோசலிச இயக்கத் தலைவர்கள் கூடினார்கள். இரண்டாம் அகிலத்தை உருவாக்க வேண்டும் என்பதும் இக்கூட்டத்தின் நோக்க மாக இருந்தது. இக்கூட்டத்தில் பிரடெரிக் கெங்கெல்சு, "சிகாகோ தொழிலாளர்களின் ஈகத்தை நினைவு கூரும் வகையில், மே முதல்நாளை 1890 ஆம் ஆண்டு முதல் 'மே நாள்' என்ற பெயரில் உலகத் தொழிலாளர் நாளாகக் கொண்டாட வேண்டும்" என்று முன் மொழிந்த தீர்மானம் ஏற்கப்பட்டது. இதன்படி 1890ஆம் ஆண்டு அய்ரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் மே நாள் கொண்டாடப்பட்டது.**

1893-இல் இரண்டாம் அகிலத்தின் கூட்டம் ஜூரிச்சில் நடைபெற்றது. அம்மாநாட்டில், "உழைக்கும் வர்க்கத்தின் முதன்மையான நோக்கம் சமூக மாற்றத் தின் மூலம் வர்க்க வேறுபாடுகளை அழித்தொழிப்பது மற்றும் உலகம் முழுவதும் எல்லா மக்களுக்கும்

அமைதியை ஏற்படுத்துவது ஆகும். எனவே மே நாள் ஆர்ப்பாட்டங்கள் எட்டுமணி நேர வேலை நாளுக்காக மட்டுமல்லாமல் மேற்கூறிய நோக்கங்களுக்காகவும் பயன்பட வேண்டும்'' என்று தீர்மானம் இயற்றப் பட்டது. இம்மாநாட்டில் எங்கெல்சு கலந்து கொண்டார், எனவே எங்கெல்சு வாழ்ந்த காலத்திலேயே மே நாள் என்பது உழைக்கும் மக்கள் அனைவரின் ஒட்டுமொத்த விடுதலைக்கான குறிக்கோளை அடைவதற்கான போராட் டத்தை உழைக்கும் வர்க்கம் சூளுரைக்கும் நாள் என்பது தெளிவாக்கப்பட்டது.

8 மணிநேர வேலை என்பதில் வெற்றி கண்ட பின், தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் வேலை செய்யும் இடத்தில் பாதுகாப்பான சூழ்நிலை, வீட்டு வசதி, தொழிற்சாலைகளில் நியாயமான விலையில் உணவு, மருத்துவ வசதி, போனஸ், வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம் முதலான கோரிக்கைகளை முன்னிறுத் தித் தொடர்ந்து போராடின, 1917இல் இரஷ்யப் புரட்சி வெற்றி பெற்று சோசலிச சோவியத் நாடு அமைந்த பின், அங்கு தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம், ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்பு வேகமாக உயர்ந்தது. உலகத் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டத் துக்கு இது உந்து விசையாக விளங்கியது.

**1929 முதல் 1933 வரை முதலாளித்துவ நாடு களில் கடுமையான பொருளாதார நெருக்கடி நீடித்தது. அலைவட்டம் போல் முதலாளிய உற்பத்தி முறையால் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும் என்று காரல் மார்க்சு கூறியது நடந்தது. இந்த நெருக்கடிக்குத் தீர்வாக பிரித்தானியப் பொருளியல் வல்லுநர் ஜான் மேனார்டு கீன்ஸ் ஒரு கோட்பாட்டை முன் மொழிந்தார். அதில், தொழிலாளர்களுக்கு முழு வேலை வாய்ப்பு, நிரந்தர வேலை, குறைந்தபட்ச ஊதியம், கல்வி, நலவாழ்வு, ஓய்வூதியம், உறைவிடம் போன்ற சமூகப் பாது காப்பு ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும் என்று கீன்சு வலியுறுத்தினார். இதுவே மக்கள் நல - அரசு (Welfare Sate) எனும் கோட்பாடாயிற்று.**

முதலாளிய நாடுகளில் தொழிலாளர்களின் போராட் டங்கள் சோசலிசப் புரட்சியாக மாறிவிடுமோ என்கிற அச்சத்தால் அரசுகள் தொழிலாளர்களின் கோரிக்கை களைப் படிப்படியாக நிறைவேற்றின. இரண்டாம் உலகப் போருக்குப்பின் காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற இந்தியா போன்ற நாடுகளிலும் தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதற்கான பல சட்டங்கள் இயற்றப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

**1970 முதல் அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய - முதலாளித்துவ நாடுகள் உலக வங்கி, பன்னாட்டு நிதியம் ஆகியவற்றின் துணையுடன் சோசலிசக் கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் எதிராகத் தீவிரமாகச் செயல்பட்டன. இதனால் 1990-இல் சோசலிச சோவியத் ஒன்றியத்தின் சோசலிச அரச மைப்பு வீழ்த் தப்பட்டு, சோவியத் நாடு 15 நாடுகளாகச் சிதறுண்டது. கிழக்கு அய்ரோப்பாவில் இருந்த சோசலிச நாடுக ளிலும் முதலாளித்துவ ஆட்சி முறை ஏற்பட்டது.**

1980-களில் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் தாராள மயம், தனியார் மயம் தீவிரமாகச் செயல்படுத் தப்பட்டது. 1990 முதல், உலக வணிக அமைப்பின் மூலம் உலக அளவில் தாராள மயம், தனியார் மயம், உலக மயம் எனும் கோட்பாட்டை எல்லா நாடுகளிலும் செயல்படுத்தும் நிலை ஏற்பட்டது. இதனால் தொழிலா ளர்கள் கடுமையாகப் போராடிப் பெற்ற பல உரிமை களை முதலாளித்துவ அரசுகள் பறித்து வருகின்றன அல்லது நீர்த்துப் போகச் செய்கின்றன.

இந்தியாவில் 1991-இல் பிரதமராக பி.பி. நரசிம்ம ராவும் நிதி அமைச்சராக மன்மோகன் சிங்கும் பதவி ஏற்றது முதல் தாராளமய-தனியார்மயக் கொள்கை தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலாளி கள் தொழில்களைத் தொடங்குவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதற்காக, தொழி லாளர் நலச் சட்டங்களில் தொழிலாளர்களுக்குக் கேடு ஏற்படும் வகையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வரு கின்றன. தொழிலாளர்களின் அடிப்படை உரிமையான தொழிற்சங்கம் அமைக்கும் உரிமைக்கு எதிராக அரசு களும் முதலாளிகளும் கூட்டு சேர்ந்து கொண்டு ஒடுக்கு முறைகளை ஏவிவருகின்றனர்.

**கடுமையான போராட்டங்கள் மூலம் தொழிலா ளர்கள் உரிமைகளை வென்றெடுத்தனர். அதுபோல் இப்போது பறிக்கப்படும் உரிமைகளை மீட்டெடுக்கத் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடுவதற்கு மே நாள் வரலாறு ஊக்கமளிக்கும் என்பது உறுதி.** ❖

## ஆசிரியருக்கு மடல்

பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

நான், சிந்தனையாளன் இதழின் ஆண்டு உறுப்பினர். முன்பு நான் அனுப்பிய ஆண்டுக் கட்டணம் கடந்த 2018 செப்டம்பர் மாதத்தோடு முடிவடைந்துவிட்டது. அதன்பின் ஆண்டுக் கட்டணம் அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ளாமல் இருந்ததற்குப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

இப்பொழுது நான், 5.4.2019 அன்று "சிந்தனையாளன்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் நூற்று எண்பதும், "சிந்தனையாளன்" இதழின் வளர்ச்சி நிதி நூறும் ஆக இருநூற்று எண்பது உருபா (280) பணவிடை செய்துள் ளேன். நன்றி.

- புலவர் **மு. செம்பியன்**
பெரம்பலூர்

அறிவுக்கடலே! அறிவுக்கடலே! அறிவுக்கடலே!

# அரை குறை அகவையில் எங்களை விட்டு ஏன் பிரிந்தீர்?



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் நிறுவனருள் ஒருவரும் முன்னாள் மூத்த துணைப் பொதுச் செயலாளராக விளங்கியவருமான தோழர் சீர்காழி மா. முத்துசாமி - பேச்சியம்மாள் பெயர்த்தியும், தற்போதைய நாகை மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் முத்து அன்பழகன் - மா.பெ.பொ.க. மகளிர் அணியின் துணைச் செயலாளர் அழகு அன்பழகன் ஆகியோரின் அன்பு மகளுமான பேராசிரியர் இரா. அறிவுக்கடல் அவர்கள் 27.04.2019 சனிக்கிழமை அதிகாலை சீர்காழியில் மறைந்தார். அவருடைய உடல் சிதம்பரம் கணவர் இராஜ்குமார் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

உடனடியாக வே. ஆனைமுத்துவுக்கும், கு. தொல்காப்பியனுக்கும் காலை 5.30 மணிக்குச் செய்தி கிடைத்தது.

அறிவுக்கடல்-பா.இராஜ்குமார் ஆகிய இணையருக்கு, சீர்காழியில், நான் 1999-இல் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து வைத்தேன். இன்று கணவர் ராஜ்குமாரையும், 19 அகவை மகள் அனுப்பிரியாவையும் அவருடைய பெற்றோர் அன்பழகன்-அழகு அவர்களையும் தவிக்க விட்டு, 44-ஆம் அகவையில் பிரிந்துவிட்டார் அறிவுக்கடல்.

அன்னாரை இழந்து வருந்தும் கணவர் பா.இராஜ்குமார், அனுப்பிரியா, தாய்மாமன் தி. தங்கமுத்து, சித்தப்பா இரணியன், அவருடைய துணைவியார் மகாலெட்சுமி, தம் தந்தையுடன் பிறந்த அத்தைகள் செந்தமிழ்ச் செல்வி, மரகதமணி, நேருஜி ஆகியவர்களின் மற்றும் அவர்களின் குடும்பத்தாரையும் ஏங்க விட்டு, 44ஆம் அகவையிலேயே அறிவுக்கடல் மறைந்துவிட்டார்.

அந்தோ! அவலம்! அவலம்!

அன்னாரின் மறைவையொட்டி, மா.பெ.பொ.க. சார்பில் மகளிர் அணிச் செயலாளர் கோவி ராமலிங்கம், மாணவரணிச் செயலாளர் ஆ. முத்தமிழ்ச்செல்வன், புதுவை மாநிலச் செயலாளர் இரா. திருநாவுக்கரசு, கடலூர் மாவட்டச் செயலாளர் பா. மோகன், சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் பா.வை. அருள்மொழி, சென்னை ஆனை. பன்னீர்செல்வம், காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர் தாம்பரம் மா. சுப்பிரமணி, புதுவை தங்கராசு, ஆ. வெற்றி, தாம்பரம் ப. வடிவேலு, எஸ். கிருஷ்ணமூர்த்தி, சென்னை வழக்குரைஞர் கோ.ரா. சுந்தரகாந்தம், சிதம்பரம் முனைவர் சி.இரா. இளங்கோவன், வடக்கு மாங்குடி இரா. காந்தி, பெரியார் - நாகம்மை அறக்கட்டளைச் செயலாளர் துரை. கலையரசு, கவிஞர் நேதாஜி, நெல்லிக் குப்பம் இரா. இரமணன் ஆகியோர் அறிவுக்கடல் இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

அறிவுக்கடல், ஆண் தோற்றமுள்ளவர்; மேடையில் கொள்கைகளை எடுப்பாகப் பேசக் கூடியவர். பாட்டன் மா.முத்துசாமி மனம் குளிர பல கூட்டங்களில் அவர் சொற்பொழிவாற்றினார்.

சிந்தனையாளன் பொங்கல் மலர் 2019-க்கு. அறிவுக்கடல் எழுதிய கட்டுரை "சுயமரியாதைச் சுடர் சீர்காழி முத்து அன்பழகன்" என்று தன் தந்தையாரைப் பற்றிப் படிப்போர் மனம் தம் தந்தையை உயர்வாக நினைக்கும் தன்மையில் அக்கட்டுரையை அவர் அமைத்துள்ளார். அக்கட்டுரையின் அச்சுப்பிழை திருத்தும் வாய்ப்பு எனக்கு எதிர்பாராமல் கிடைத்தது. அறிவுக்கடலின் திறமையை அப்போதே தோழர்களிடம் நான் பாராட்டினேன்.

அந்த அறிவுக்கடல் இன்று நம்மிடையே இல்லை.

**வாழ்க, தோழியர் இரா. அறிவுக்கடல் புகழ்!**

**- வே.ஆனைமுத்து**

## திருத்தம் - பிழைக்கு வருந்துகிறோம்

ஏப்பிரல் 2019 சிந்தனையாளன் இதழில் வெளிவந்த "இந்திய ஒன்றியத்தின் பொருளாதார வளர்ச்சி வெகுமக்களின் உண்மையான வளர்ச்சியா?" கட்டுரையில் 6ஆம் பக்கத்திலுள்ள இரண்டாம் அட்டவணையில் "ஆ - தனிமனித ஆண்டு வருமானம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது; அது தவறானது. அதற்கு வருத்தம் தெரிவிக்கப்படுகிறது. அந்தச் சொற்றொடருக்குப் பதிலாக "தனிமனித ஆண்டு உள்நாட்டு உற்பத்தி மதிப்பு" என்ற சொற்றொடராகக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். அஃதேபோன்று கட்டுரையின் பிற பகுதிகளில் இடம் பெறும் "தனிமனித ஆண்டு வருமானம்" என்ற சொற்றொடரையும் தயவு செய்து "தனிமனித ஆண்டு உள்நாட்டு உற்பத்தி மதிப்பு" என்று கொள்ள வேண்டப்படுகிறது.

**- ஆசிரியர் குழு**

# மே 5 காரல் மார்க்சு பிறந்தநாள்
# மார்க்சை அறிவோம்-மார்க்சியம் கற்போம்

**க.முகிலன்**

காரல் மார்க்சு 1818ஆம் ஆண்டு மே 5ஆம் நாள் செருமனி (பிரஷ்யா) நாட்டில் டிரியர் எனும் சிறிய நகரத்தில் பிறந்தார்.

காரல் மார்க்சு தன் பள்ளிப்படிப்பின் இறுதித் தேர்வில், ''எதிர்காலப் பணியைத் தேர்வு செய்வது குறித்து ஒரு இளைஞனின் சிந்தனைகள்'' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில், ''மனித குலத்தின் பெருமைக்காகப் பாடுபடக்கூடிய ஒரு வேலையைத் தீர்மானித்துக் கொண்டால், எவ்வளவு சுமைகளும் நம்மை வளைத்துவிடாது. ஏனெனில் அவையெல்லாம் அனைவருக்குமான தியாகங்கள். நமக்குக் கிடைக்கப் போகிற மகிழ்ச்சியோ எல்லையற்றது; கஞ்சத் தனமில்லாதது; அகங்கார மற்றது. நமது மகிழ்ச்சி கோடானுகோடி மக்களுக்குச் சொந்தமானது. நமது சாதனைகள் நீடித்து நிற்கும்; என்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும். உன்னதமான மனிதர்கள் வடிக்கும் கண்ணீரால் நமது சாம்பல் கழுவப்படும்'' என்று எழுதினார். ஆழ்ந்த கருத்துகளைக் கவிதை நடையில் எழுதும் ஆற்றல் காரல் மார்க்சுக்குப் பள்ளிப் பருவத்திலேயே அமைந்துவிட்டது.

**மார்க்சு எழுதிய இக்கட்டுரையும் மற்றும் ஆறு கட்டுரைகளும் இன்றும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.**

'டெமாக்ரிடஸ் மற்றும் எபிகூரசு ஆகியோரின் இயற்கை பற்றிய தத்துவத்தில் வேறுபாடு' எனும் தலைப்பில், மார்க்சு தன் முனைவர் பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரையை எழுதினார். டெமாக்ரிடஸ், எபிகூரசு இருவருமே நாத்திகர்கள். ஆயினும் டெமாக்ரிடசைவிட எபிகூரசின் ஆய்வும், தத்துவமும் உயர்ந்தவை என்பது மார்க்சின் மதிப்பீடாகும். இக்கட்டுரையில் எபிகூரசை, கீழ்க்குறித்துள்ள லுக்ரிடசின் புகழ் மொழிகளை மேற்கோள் காட்டி மார்க்சு பாராட்டியுள்ளார்.

''பிணம் போல் கனத்த மதத்தின் சுமை தாங்காமல் மனிதக் கண்ணுக்கும் புலப்படாதபடி மனித வாழ்வு முட்டிபோட்டு ஊர்ந்தது. முரண்டு பிடித்த தனது ஊனக் கண்களைக் கிரேக்கத்தின் ஒரு மனிதன் உயர்த்தினான். முதலில் முதுகெலும்பை நிமிர்த்தினான். துணிவோடு எதிர்கொண்டான். கடவுள்கள் பற்றிய கதைகள் அவனை நொறுக்கவில்லை. வானத்தின் மின்னல் ஒளியும் இடியும் அவனை அசைக்கவில்லை. அவனது காலடியில் மதம் வீழ்ந்து நசுங்கியது. அவனது வெற்றியால் நாமெல்லாம் வானமளவுக்கு உயர்ந்தோம்.''

**1841 ஏப்ரல் 15 அன்று ஜெனா பல்கலைக் கழகம் காரல் மார்க்சுக்கு முனைவர் பட்டம் வழங்கியது. அப்போது மார்க்சுக்கு அகவை 23.**



ரைன்லாந்து பகுதியின் தலைநகரான கொலோனில் 1842இல் 'ரைனிஷி ஷெய்டுங்' என்ற நாளேடு தொடங்கப்பட்டது. 1842 மே மாதம் அதில் பத்திரிகைச் சுதந்தரம் பற்றி மார்க்சு நீண்ட கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில், ''வாழ்வதற்கும் எழுதுவதற்கும் மனிதன் சம்பாதிக்க வேண்டும் என்பது உண்மையே. ஆனால் சம்பாதிப்பதற்காகவே அவன் வாழவோ, எழுதவோ கூடாது. எழுத்தாளனுக்கு அவனது எழுத்து ஒரு கருவி அல்ல. அது தன்னளவிலே முடிந்த ஒரு இலக்கு. தேவைப்பட்டால், எழுத்து உயிர்த்திருப்பதற்காகத் தனது உயிரையும் தியாகம் செய்வான்'' என்று எழுதினார். அதன்படியே தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார்.

1842இல் அந்நாளேட்டின் ஆசிரியரானார். பிரடெரிக் எங்கெல்சு இங்கிலாந்தில் இந்நாளேட்டின் நிருபராக இருந்து செய்திகளையும் கட்டுரைகளையும் அனுப்பி வந்தார். மார்க்சும், எங்கெல்சும் நேரில் சந்திப்பதற்கு முன்பே, இந்த நாளேட்டின் மூலம் இருவரும் அறிமுகமாகியிருந்தனர். ரைனிஷி ஷெய்டுங் நாளேட்டிற்கு நான்கு மாதங்களே மார்க்சு ஆசிரியராக இருந்தார். அரசின் செயல்பாடுகளைக் கடுமையாகத் திறனாய்வு செய்ததால், அரசு இந்நாளேட்டை வெளியிடுவதற்குத் தடை விதித்துவிட்டது.

1843 சூன் 19 அன்று காரல்மார்க்சும் ஜென்னியும் திருமணம் செய்து கொண்டனர். ஏழு ஆண்டுகளுக்கு மேலான இவர்களின் காதல் திருமணத்தில் முடிந்தது. அப்போது மார்க்சின் அகவை 25. ஜென்னியின் அகவை 29.

பிரஷ்யாவில் (செருமனி) இருந்து கொண்டு பத்திரிகை நடத்த முடியாது என்பதால், பாரிசு நகரிலிருந்து அர்னால்டு ரூகே என்பவருடன் இணைந்து புதிய பத்திரிகை நடத்துவதற்காக, மார்க்சும் ஜென்னியும் 1843 அக்டோபரில் பாரிசில் குடியேறினர். 1844 சனவரியில் 'ஜெர்மன்-பிரெஞ்சு வருடாந்திர ஏடு' என்ற பெயரில் இரட்டை இதழாக வெளிவந்தது. இதன் ஆசிரியர்கள் அர்னால்டு ரூகே - காரல் மார்க்சு என அட்டையில் குறிக்கப்பட்டிருந்தது. இம்முதல் இதழே இறுதி இதழாகவும் அமைந்துவிட்டது. பிரஷ்ய அரசு (ஜெர்மன்) தனது நாட்டுக்குள் இப்பத்திரிகை நுழையத் தடை விதித்தது. மேலும் மார்க்சு தன் சொந்த நாடான பிரஷ்யாவுக்குள் நுழைந்தால் கைது செய்ய ஆணை பிறப்பித்தது.

ஜெர்மன்-பிரெஞ்சு வருடாந்திர ஏடு இதழில் மார்க்சு, 'ஹெகலின் உரிமையின் தத்துவம் பற்றிய விமர்சனத்திற்குப் பங்களிப்பு: ஓர் அறிமுகம்' என்ற கட்டுரையை எழுதியிருந்தார். 13 பக்கங்கள் கொண்ட அக்கட்டுரையில் தான் மார்க்சின் புகழ்பெற்ற - 'மதம் மக்களுக்கு அபின்' எனும் சொற்கோவை இடம்பெற்றுள்ளது. அதன் முழுமையான பத்தி கீழே தரப்பட்டுள்ளது.

“மதத்திற்கு எதிரான போராட்டம் என்பது அந்த மதம் எனும் ஆன்மீக வாசனையைக் கொண்டுள்ள உலகத்திற்கு எதிரான மறைமுகப் போராட்டமே! மத ரீதியான துன்பம் என்பது உண்மையான துன்பத்தின் வெளிப்பாடே - உண்மையான துன்பத்துக்கு எதிரான கண்டனமே. மதம் என்பது; ஒடுக்கப்பட்ட சீவனின் பெருமூச்சு; இதயமற்ற உலகின் இதயம்; ஆன்மநேய மற்ற சூழல்களின் ஆன்மநேயம். அது மக்களின் அபின். **மக்களின் கற்பிதமான இன்பம் என்கிற மதத்தை ஒழிக்க உண்மையான இன்பத்தைக் கொண்டுவர வேண்டியுள்ளது.** நடப்புச் சூழல்கள் பற்றிய மாயைகளைக் கைவிடச் செய்ய, அந்த மாயைகளைத் தாங்கி நிற்கும் சூழல்களைக் கைவிடச் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே மதம் மீதான விமர்சனம் என்பது மதம் எனும் ஒளி வட்டத்தைக் கொண்ட கண்ணீர் வாழ்வு பற்றிய முதல் விமர்சனமாகும்.”

**மதம் நீடித்திருப்பதற்கான அடிப்படைச் சூழலை மாற்றாமல், மதத்தை ஒழிக்க முடியாது என்கிற இம் மாபெரும் கருத்தை, மார்க்சு தன் 26ஆம் அகவையில் கண்டறிந்தார் என்பது பெருவியப்புக்குரியதாகும்.**

மேலும், இதே கட்டுரையில் மார்க்சின் மற்றொரு புகழ்பெற்ற மேற்கோளும் இடம்பெற்றுள்ளது: “ஒரு பௌதிக சக்தியானது இன்னொரு பௌதிக சக்தியாலேயே தூக்கி எறியப்படும். ஆனால் சித்தாந்தமும் கூட ஒரு பௌதிகச் சக்தியாக மாறும் - எப்போது எனில், அது மக்கள் திரளைக் கவ்விப் பிடிக்கும் போது”. தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் இடையிலான தொடர்பையும், தத்துவம் மனிதர்களின் வழியாக மாபெரும் பௌதிகச் சக்தியாக மாறும் என்கிற பேருண்மையையும் மார்க்சு இதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மார்க்சைவிட 14 ஆண்டுகள் மூத்தவரான பாயர் பாக் என்பவர், 1841இல் 'கிறிஸ்துவத்தின் சாரம்' என்கிற நூலை வெளியிட்டார். பொருள் முதல்வாத அடிப்படையில் பாயர்பாக் அந்நூலில் மதத்தை விமர்சனம் செய்திருந்தார். இந்நூலை மார்க்சு வரவேற்றார். ஆயினும் பாயர்பாக் தர்க்க அடிப்படையில்-சிந்தனை அடிப்படையில் மட்டுமே மதத்தை விமர்சனம் செய்திருப்பதை மார்க்சு உணர்ந்தார். பாயர்பாக்கின் தத்துவம் நடைமுறையிலிருந்து விலகி கற்பனை உலகில் நிற்பதால் பயன்படாது என்று எண்ணினார். 1844இல் பாரிசில் இருந்தபோது பாயர் பாக்கின் நூல் பற்றிய தன் கருத்துகளைக் குறிப்பேட்டில் இரத்தினச் சுருக்கமாய் எழுதினார். இதுவே பாயர்பாக் பற்றிய சூத்திரங்கள் எனப்படுகிறது. இதன் 11வது சூத்திரத்தில் “**தத்துவ ஞானிகள் பல வகையிலும் உலகை விளக்கி இருக்கிறார்கள். நாம் செய்ய வேண்டியது என்னவோ அதை மாற்றுவதுதான்**” **என்று எழுதி இருந்தார்.** இக்குறிப்பேட்டை மார்க்சு இறந்தபிறகே எங்கெல்சு கண்டெடுத்தார்; 1888இல் இதை நூலாக வெளியிட்டார். மார்க்சின் கல்லறையில் இந்தச் சொற்றொடர் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

பிரஷ்ய அரசின் நெருக்குதல் காரணமாக 1845ஆம் ஆண்டு மார்க்சு குடும்பம் பாரிசிலிருந்து வெளியேற வேண்டும் என்று பிரான்சு அரசு ஆணையிட்டது. அதனால் மார்க்சு குடும்பம் பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸெல்ஸ் நகரில் குடியேறியது. நடப்பு அரசியல் பற்றி மார்க்சு எழுத்து வடிவில் ஏதும் வெளியிடக் கூடாது என்கிற நிபந்தனையின் பேரில்தான் அந்நாட்டில் அவர் தங்க அனுமதிக்கப்பட்டார்.

“இவ்வுலகம் கடவுளால் படைக்கப்பட்டது. கடவுளால் படைக்கப்பட்ட பொருள்களும் உயிரினங்களும் அவை தோன்றிய காலம் முதலாக மாறாமல் நிலைபெற்று இருக்கின்றன” என்று மதவாதிகளும் கருத்து முதல் வாதிகளும் கூறிவந்தனர். இதை மறுத்து செருமானிய தத்துவ அறிஞரான ஹெகல் (1770-1830) “**இவ்வுலகிலும் - இப்பேரண்டத்திலும் உள்ள எல்லாப் பொருள்களும் இயங்கிக் கொண்டும் மாறிக்கொண்டும் இருக்கின்றன. பொருள்களின் இயக்கத்திற்கு அப்பொருள்களுக்குள் பொதிந்துள்ள எதிரெதிர் ஆற்றல்களே - முரண்பாடே காரணம். உலகில் எந்தவொரு பொருளும் தனித்து இருப்பதில்லை. எல்லாப் பொருள்களும்**

**ஒன்றையொன்று சார்ந்து நின்று இயங்குகின்றன"** என்று அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து அறிவித்தார். இந்தக் கோட்பாடுதான் இயக்கவியல் எனப்படுகிறது. இதுவே மார்க்சியத்தின் அடிப்படையாகும். எனவேதான் ஹெகல் இயக்கவியலின் தந்தை எனப்படுகிறார்.

ஹெகலின் கோட்பாட்டை மார்க்சு, எங்கெல்சு உள்ளிட்ட எண்ணற்ற இளைஞர்கள் தீவிரமாக ஆதரித்தனர். இவர்கள் 'இளம் ஹெகலியர்' என அழைக்கப்பட்டனர். ஆனால் மார்க்சின் ஆய்வுநோக்கு விரிவடைந்த பின், "உயர்ந்த படைப்புகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருப்பது மனிதனின் சிந்தனையே" என்கிற ஹெகலின் முடிவை மார்க்சு எதிர்த்தார். 'ஹெகல் இயக்கவியலைத் தலைகீழாக நிறுத்தியுள்ளார். அதை நேராக மாற்றுவதே நம் வேலை' என்று மார்க்சு கூறினார்.

ஆனால் மற்ற இளம் ஹெகலியர்கள், ஹெகல் கூறியுள்ளதே சரி என்று கூறி, ஹெகலைத் தலை மேல் வைத்துக் கொண்டாடினர். எனவே இளம் ஹெகலியரின் தத்துவ நிலைபாடுகளுக்கு எதிராக 1845 நவம்பரில் மார்க்சும் எங்கெல்சும் இணைந்து, 'ஜெர்மானிய சித்தாந்தம்' என்ற நூலை எழுதினர். ஆனால் எங்கெல்சின் இறப்புக்குப் பின்னரே, இந் நூலின் சில பகுதிகள் வெளிவந்தன. முழுமையான வடிவில் நூலாக 1930களில் சோவியத் கம்யூனிஸ்டு கட்சியால் வெளியிடப்பட்டது. **இந்த நூலில்தான் மார்க்சியத்தின் பிழிவான வரிகளாகத் திகழும் "உணர்வு வாழ்நிலையைத் தீர்மானிப்பதில்லை. வாழ்நிலைதான் உணர்வைத் தீர்மானிக்கிறது" எனும் வரிகள் இடம் பெற்றுள்ளன.**

இந்திய சமூகத்தில் இந்திய மார்க்சியர்களும், மற்றவர்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே கூறப்பட்டிருப்பது போன்ற - நூற்பா (சூத்திரம்) போன்ற - ஒரு கருத்தை மார்க்சும் எங்கெல்சும், 'செருமானிய தத்துவம்' நூலில் எழுதி யுள்ளனர் :

**"ஆளும் வர்க்கத்தின் சிந்தனைகளே ஒரு யுகத்தை ஆளும் சிந்தனைகளாக உள்ளன. ஆளும் வர்க்கம் என்றால் அது சமுதாயத்தின் பொருளியல் சக்தியை மட்டுமல்லாது அறிவுச் சக்தியையும் ஆளுகிறது. பொருள் உற்பத்திக்கான காரணங்களைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கிற வர்க்கமானது, அதன் காரணமாகவே அறிவு உற்பத்திக்கான காரணங்களையும் தன் கட்டுக்குள் வைத்திருக்கிறது. இந்தச் சாதனங்களைக் கொண்டிராதவர்களின் சிந்தனைகள் இதற்குப் பொதுவாகவே அடங்கிப் போய்விடுகின்றன."**

**இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அறிவுச் சக்தியை ஆளும் வர்க்கமாகப் பார்ப்பனர்களே இருந்து வந்துள்ளனர். வருணாசிரம-சாதிய அமைப்பின் காரணமாகப் பார்ப்பனர்கள் சமூகத்திலும் மதம் தொடர்பானவற்றிலும் பெற்றிருந்த ஏகபோக உரிமையால் சமூகத்திற்கான கருத்துருவாக்கம் செய்யும் மூலகர்த்தாக்களாக விளங்கினர். உற்பத்திச் சக்திகளிலும் உற்பத்தி உறவுகளிலும் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களால் பார்ப்பனர்களின் ஏகபோக உரிமைகளில் - பிறப்பால் அறிவிலும் தகுதியிலும் உயர்ந்தவர் என்ற நிலைமையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படவில்லை. முதலாளிய உற்பத்தி முறை மேலோங்கிய பிறகும், இதே நிலைதான் நீடிக்கிறது.**

**ஏனெனில் உற்பத்திச் சக்திகளிலும் உற்பத்தி உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்ற அதே வேகத்தில், அச்சமூகத்தின் சித்தாந்தத்தில் மாற்றங்கள் நிகழ்வதில்லை. இதற்கெனத் தனியாக, தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டாலன்றி, பழைய சமூகத்தின் சித்தாந்த ஆதிக்கமே தொடர்ந்து நீடிக்கும்.**

இந்தியாவில் பாரசிகர், ஹூணர், குஷாணர், துருக்கியர், ஆங்கிலேயர் முதலான அயல்நாட்டவர்களின் படையெடுப்பும், ஆட்சிகளும் ஏற்பட்ட பிறகும், இந்தியாவில் பார்ப்பனியச் சித்தாந்தமே சமூகத்தை ஆட்டிப் படைக்கிறது. உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட மாற்றத்தின் வேகத்திற்கு ஈடான வகையில் சமூகச் சிந்தனையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற குறிக்கோளுடன் சீனாவில் 1965இல் மாசேதுங் 'கலாச்சாரப் புரட்சியை' நடைமுறைப்படுத்தினார்.

**செய்தி ஏடுகள், தொலைக்காட்சி, கணினி போன்ற நவீன ஊடகங்கள் வாயிலாக ஆளும்வர்க்கம் தன் இருத்தலுக்கான நியாயத்தை மக்கள் நெஞ்சங்களில் பதியச்செய்து வருகிறது. இந்தியா அரை நிலப்பிரபுத்துவ-அரை முதலாளித்துவ நாடாக இருப்பதால், பார்ப்பனர்கள், ஊடகங்கள் வாயிலாகத் தங்கள் கருத்தியலை, சாதி அமைப்பை, தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றனர்.**

1847இல் புருதோன் என்பவர் 'வறுமையின் தத்துவம்' என்ற நூலை எழுதினார். முதலாளித்துவம் பற்றிய பொருளாதார விதிகள் என்பவை நிலையானவை; மாற்ற முடியாதவை என்று புருதோன் அந்நூலில் அறுதியிட்டுக் கூறியிருந்தார். அந்நூலின் கருத்தை மறுத்து, மார்க்சு, 'தத்துவத்தின் வறுமை' என்ற நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதினார். ஏனெனில் புருதோன் அவருடைய நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதியிருந்தார்.

'பொருளாதார விதிகள் என்பவை வரலாற்று ரீதியாக உருவானவை. மனிதனின் தேவைகளின் பொருட்டே புதிய கண்டுபிடிப்புகளும் உற்பத்திச் சாதனங்களும் தோன்றிவருகின்றன. இந்த வளர்ச்சியின் நிகழ்வுப் போக்கின் ஊடாகச் சமுதாயம் மாறுகிறது.

உற்பத்திச் சக்திகளையும் உற்பத்தி உறவுகளையும் அடிக்கட்டுமானமாகக் கொண்டுள்ள சமுதாயத்தில், அவற்றுக்கு ஏற்ப, மேல்கட்டுமானமாக உள்ள அரசியல், சட்டம், தத்துவங்கள் முதலானவற்றில் மாறுதல்கள் ஏற்படுகின்றன' என்று மார்க்சு பதில் அளித்தார்.

**இலண்டனில் இருந்த 'நீதியாளர் கழகம்' என்பது 1847 முதல் 'கம்யூனிஸ்டுக் கழகம்' என்ற பெயரில் இயங்கியது. கம்யூனிஸ்டுக் கழகத்தின் வேண்டுகோளை ஏற்று மார்க்சும் எங்கெல்சும் இதில் இணைந்தனர்.** புதிய பெயருக்கு ஏற்ற தன்மையில் கட்சியின் கோட்பாடுகளை வகுக்கும் பொறுப்பு மார்க்சு, எங்கெல்சு இருவரிடமும் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் உருவாக்கிய 23 பக்க அறிக்கை 'கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை' என்ற பெயரில் 1848 பிப்பிரவரியில் இலண்டனில் வெளியிடப்பட்டது. உலகையே உலுக்கிய இந்த அறிக்கையை எழுதிய போது மார்க்சின் அகவை 30; எங்கெல்சுக்கு 28 அகவை.

**"இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறேயாகும்" எனும் வரியுடன் தொடங்கும் கம்யூனிஸ்டு அறிக்கையில், நிலவுடைமை உற்பத்தி முறையிலிருந்து முதலாளிய உற்பத்தி முறைக்கு மாறியுள்ளதால், சமூகத்தில் உற்பத்தி உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், முதலாளித்துவத்தின் இயக்கப் போக்கு மற்றும் அதன் சுரண்டல் வடிவங்கள் குறித்து நெஞ்சைக் கனலாக்கும் நடையில் எழுதப்பட்டுள்ளது.**

**"அஞ்சி நடுங்கட்டும் ஆளும் வர்க்கங்கள் - கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று; பாட்டாளிகள் இழப்பதற்கு ஏதுமில்லை - தங்கள் அடிமைச் சங்கிலிகளைத் தவிர!**

**ஆனால் அவர்கள் வெல்வதற்கோ அனைத்து உலகும் இருக்கிறது.**

**எனவே உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்ற அறைகூவலுடன் முடியும் கம்யூனிஸ்டு அறிக்கை உலகம் முழுவதும் உழைக்கும் மக்களிடையே புரட்சிக் கனலை மூட்டியது. முதலாளிகளிடையே பெரும் அச்சத்தை ஊட்டியது.**

கம்யூனிஸ்டு அறிக்கையில், தான் புதியதாகக் கூறியுள்ள கோட்பாடு குறித்து மார்க்சு வெய்டெமையருக்கு 1852 மார்ச்சு 3ஆம் நாள் எழுதிய மடலில் அவருக்கே உரிய அறிவு நாணயத்துடன் எழுதியுள்ளார்.

"என்னைப் பொறுத்தவரை நவீன சமுதாயத்தில் வர்க்கங்கள் இருக்கின்றன என்பதையோ, அவற்றிற்கு இடையே போராட்டம் நடக்கிறது என்பதையோ கண்டுபிடித்த பெருமை என்னைச் சேராது. எனக்கு வெகுகாலத்திற்கு முன்னரே இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சியை முதலாளித்துவ வரலாற்றாளர்கள் விரிவாகக் கூறியிருக்கிறார்கள். அதேபோன்று இந்த வர்க்கங்களின் பொருளாதார உள்கட்டமைப்பை முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் விவரித்து விட்டார்கள். **நான் செய்துள்ள புதிய பங்களிப்பு 1. இந்த வர்க்கங்களின் இருப்பு என்பது உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதாகும். 2. வர்க்கப் போராட்டமானது அவசியமான வகையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது. 3. அந்தச் சர்வாதிகாரமும் அனைத்து வர்க்கங்களையும் ஒழித்த, ஒரு வர்க்கமற்ற சமுதாயத்திற்கான இடைக் கால ஏற்பாடாகவே இருக்கும்."**

கம்யூனிஸ்டு அறிக்கையை செருமனி, பிரெஞ்சு, ஆங்கிலம், இத்தாலி, பிளமிஷ், டேனிஷ் ஆகிய ஆறு மொழிகளில் ஒரே சமயத்தில் வெளியிடத் திட்டமிட்டனர். 1848 பிப்பிரவரியில் செருமன் மொழியில் மட்டுமே வெளியிடப்பட்டது. நாற்பது ஆண்டுகள் கழித்து - மார்க்சு மறைந்த பிறகு, 1888இல் தான் ஆங்கில மொழியில் வெளிவந்தது.

**'சமதர்ம அறிக்கை' என்ற பெயரில் பெரியார் 1931இல் 'குடிஅரசு' ஏட்டில் கம்யூனிஸ்டு அறிக்கையை வெளியிட்டார். அய்ந்து வாரங்கள் ஒரு தொடராக அது வெளிவந்தது. முதலாளிகளும் பட்டாளிகளும் எனும் முதல் அத்தியாயம் மட்டுமே வெளியானது. ப.ஜீவானந்தம் இதை மொழிபெயர்த்தார்.**

கம்யூனிஸ்டு அறிக்கையை குடிஅரசில் வெளியிட்ட போது பெரியார் எழுதிய அறிமுக உரையில், "உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மையில் எல்லா நாடுகளிலும் பணக்காரன் - ஏழை, முதலாளி-தொழிலாளி என்கிற வேற்றுமை மட்டுமே இருக்கின்றன. ஆனால் இந்தியாவிலோ, இவற்றுடன்கூட உயர்ந்த சாதி-தாழ்ந்த சாதி என்கிற ஏற்றத்தாழ்வு முதன்மையானதாகவும், இந்தத் தத்துவத்துக்குக் கோட்டையாகவும் இருந்து வருகிறது" என்று எழுதினார். சமதர்மம் வருவதற்கு-வர்க்க ஒர்மை ஏற்படுவதற்குத் தடையாக உள்ள வருணாசிரம-சாதி அமைப்பைத் தகர்க்க வேண்டியது முதன்மையான வேலை என்று பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார்.

1849 ஆகஸ்டு மாதம் மார்க்சு இலண்டனில் குடியேறினார். அதன்பின், இறுதி வரை இலண்டனிலேயே வாழ்ந்தார். 1851 முதல் இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியம் நூலகத்தில் தொடர்ந்து பல ஆண்டுகள் படித்தார். 1853இல் அமெரிக்காவின் 'நியூயார்க் டெய்லி டிரிபியூன்' ஏட்டிற்கு மார்க்சு இந்தியா வைப் பற்றி 11 கட்டுரைகள் எழுதினார். இலண்டனில் படித்தவற்றின் அடிப்படையில் இந்தியாவின் நிலையை

மார்க்சு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இதோ, ஓர் எடுத்துக்காட்டு :

**"இந்துஸ்தானத்தில் கொலையே ஒரு தெய்வச் சடங்காயிற்று. இதை நாம் மறக்கக் கூடாது. இந்தச் சிறு சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும் அடிமை முறையாலும் களங்கமடைந்திருந்தன. மனிதனைச் சூழ்நிலைக்கு எஜமானன் ஆக்குவதற்குப் பதிலாக, அவனை அதற்கு அடிமைப்படுத்தின. சமூக நிலையை ஒருபொழுதும் மாறாத இயற்கை விதியாகச் செய்தன. இயற்கையையே மனிதன் கும்பிட்டு வணங்கும் மிருகத்தனமான நிலைமை ஏற்படுத்தப்பட்டது. இயற்கையின் எஜமானனாகிய மனிதன் குரங்காகிய அனுமன் முன்பும், பசுமாட்டின் முன்பும் தெண்டனிட்டு வணங்கியதில் இந்தச் சிறுமை காட்சியளித்தது. இவற்றை நாம் மறக்கக் கூடாது என்பதே அது.**

1857 மற்றும் 1858இல் 'நியூயார்க் டெய்லி டிரிபியூன்' ஏட்டிற்கு சிப்பாய்க் கலகத்தை மய்யப்படுத்தி மார்க்சு 18 கட்டுரைகளும், எங்கெல்சு 10 கட்டுரைகளும் எழுதினர். மார்க்சு எழுதிய முதல் கட்டுரையில், **"ரோமாபுரியின் பிரித்தாளும் கொள்கை எனும் சக்திவாய்ந்த ஆயுதத்தைக் கடைப்பிடித்தே பிரிட்டன் ஏறக்குறைய 150 ஆண்டுகாலமாக இந்திய சாம்ராஜ்ஜியத்தைத் தந்திரமாகத் தனது பிடியில் வைத்திருக்கிறது. பகைமைகள் நிறைந்த பல்வேறு இனங்கள், குலங்கள், சாதிகள், சமயங்கள், அரசுகள் ஆகியவற்றை ஒன்றுசேர்த்து உருவாக்கப்பட்டிருக்கின்ற பூகோள ஒற்றுமையைத் தான் இந்தியா என்று அழைக்கின்றோம்" என்று எழுதியுள்ளார்.**

1858இல் மார்க்சு 'அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு' என்ற நூலை எழுதினார். இந்நூலுக்கு 1859இல் மார்க்சு ஒரு முன்னுரை எழுதினார். இந்நூலைவிட இந்த முன்னுரை புகழ்பெற்றதாகிவிட்டது. அந்த முன்னுரையில் மார்க்சியத்தின் சாறாக உள்ள ஒரு மேற்கோளைப் படியுங்கள்:

**"மனிதர்கள் தங்களது சமூக வாழ்வை நடத்திச் செல்லும் பொழுது சக மனிதர்களுடன் சில திட்டவட்டமான உற்பத்தி உறவுகளை மேற்கொள்கிறார்கள். அந்த உறவுகள் தவிர்க்க முடியாதவை. இவர்களின் ஆணைக்கு அடங்காதவை. அந்த உற்பத்தி உறவுகளின் கூட்டு மொத்தமே சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பாக - உண்மையான அடித்தளமாக அமைகிறது. இந்த அடித்தளத்தின் மீதே ஒரு சட்டபூர்வ மற்றும் அரசியல் மேற்கட்டுமானம் எழுகிறது. அதற்கேற்ற திட்டவட்டமான சமூக உணர்வுகளும் தோன்றுகின்றன. பொருள் உற்பத்தி வாழ்வு முறையே பொதுவாக சமூக, அரசியல், அறிவுபூர்வ வாழ்வு முறையினை நெறிப்படுத்துகிறது. மனிதனின் உணர்வு நிலை மனிதனின் வாழ்நிலையைத் தீர்மானிக்கவில்லை. மனிதனின் வாழ்வு நிலையே மனிதனின் உணர்வு நிலையைத் தீர்மானிக்கிறது."**

மனிதகுல வரலாற்றைப் பொருள் முதல்வாத அடிப்படையில் விளக்கும் மார்க்சின் இந்நூல் வெளிவந்த 1859ஆம் ஆண்டில், சார்லஸ் டார்வின் எழுதிய 'இயற்கைத் தேர்வின் மூலமாக உயிரினிங்களின் தோற்றம்' எனும் நூலும் வெளிவந்தது. மார்க்சின் வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கோட்பாட்டுக்கு டார்வினின் நூல் அரணசேர்ப்பதாக அமைந்தது.

**1867 செப்டம்பர் 14 அன்று மார்க்சின் பேருழைப்பால் உருவாக்கப்பட்ட 'மூலதனம்' நூலின் முதல் பகுதி வெளியிடப்பட்டது. முதலாளிய உற்பத்தி முறையில் மூலதனத்தை உருவாக்குவதிலும் பெருக்குவதிலும் அச்சாணியாகச் செயல்படும் 'உபரி மதிப்பை' ஆய்ந்தறிந்து கூறியதே மார்க்சின் இரண்டாவது மாபெரும் பங்களிப்பாகும்.**

**அய்ரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலைமைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மூலதனத்தின் முதல் பாகத்தை மார்க்சு எழுதினார். தன் சிந்தனையை மேலும் விரிவுபடுத்துவதற்காக அமெரிக்காவின், இரஷ்யாவின் பொருளாதாரம் குறித்த எண்ணற்ற நூல்களைப் படித்தார். விரிவான குறிப்புகளை எழுதினார். ஆனால் இவற்றை நூல் வடிவில் எழுதுவதற்குள் 1883 மார்ச்சு 14 அன்று அவர் மறைந்தார். 'மனிதகுலத்தின் ஒரு தலை குறைந்தது. ஆனால் நம் தலைமுறையின் மிகச்சிறந்த தலை அது' என்று எங்கெல்சு கூறினார்.**

மூலதனத்தின் இரண்டாம் பாகம் என்று எழுத மார்க்சு திட்டமிட்டிருந்ததை, எங்கெல்சு இரு பகுதிகளாகப் பிரித்து இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம் என்று வெளியிட்டார். இரண்டாம் பாகம் 1885ஆம் ஆண்டிலும், மூன்றாம் பாகம் 1894ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. உண்மையில் இரண்டாம், மூன்றாம் பாகங்களை மார்க்சும் எங்கெல்சும் இணைந்து எழுதினார்கள் என்றே கருத வேண்டும்.

**வெவ்வேறு நாடுகளில் நிலவும் சமூகச் சூழல்களுக்கு ஏற்பவே மார்க்சியத்தைக் கட்டமைக்க வேண்டும் என்பதை மார்க்சியத்தின் மூலவர்களான மார்க்சும் எங்கெல்சும் வலியுறுத்தியுள்ளனர். இலெனினும் மாவோவும் இக்கருத்துக்கு மேலும் செழுமை சேர்த்துள்ளனர். இந்தியாவின் சமூக உற்பத்தியிலும் உறவிலும் சாதி அமைப்பு திட்டவட்டமான முறையில் செயல்படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, இன்றைய ஏகாதிபத்தியச் சூழலில் மார்க்சியத்தை மறுகட்டமைப்புச் செய்ய வேண்டிய வரலாற்றுக் கடமை நம்முன் உள்ளது.**

# வெகுமக்களைக் கொடுமையாக வஞ்சித்துவிட்ட இந்திய ஒன்றிய அரசு

**(வேளாண், நெசவுத் தொழில் சார்ந்தோரை மேம்பட்ட நிலைக்கு உயர்த்துவதுதான் தீர்வு)**

**- இரா. பச்சமலை**

நாட்டின் பொருளாதார வளர்ச்சி விழுக்காடு - உலகிலேயே முதல் இடத்திற்கே வந்துவிட்டது என்று பெருமை பேசப்படுகின்றது. சீனா பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாய்ப் பொருளாதார வளர்ச்சி விழுக்காட்டில் முதல் நிலையிலிருந்ததைப் பின்னுக்குத் தள்ளி முன்னேறி வந்துவிட்டது இந்திய ஒன்றியம் என்றெல்லாம் விதந்து சொல்லப்படுகிறது. இதில் முன்னிலை வகிப்பது பா.ச.க. ஆட்சியினர். அந்தக் கட்சியினர் ஒன்றை மனமறிந்து மறைத்து விடுகின்றார்கள். இந்த வளர்ச்சி பரந்துபட்ட வெகுமக்கள் அனைவருக்கும், சொல்லும் அளவுக்குக்கூட வேண்டாம்; ஓரளவுக்காவது சென்றடைந்துள்ளதா? என்பதை மனச்சான்றுடன் எண்ணிப் பார்க்க வேண்டும். உண்மை நிலை என்னவெனில், ஒரு பெரும் தொகுப்பு மக்கள் ஒருவேளை உணவுக்குக்கூட வழியின்றிப் பிழைக்க வைக்கப்பட்டுள்ளனர் என்ற அவல நிலையைப் பற்றிச் சற்றும் கவலையற்றவர்களாகப் பீற்றிக் கொண்டுள்ளனர். அதாவது இராம அரசு அமைப்பார்களாம்; நாட்டை வல்லரசு நாடாக மாற்ற உள்ளனராம். இதை மறைந்த குடியரசுத் தலைவர் அப்துல்கலாமும் சொன்னது வேதனைக்குரியது. வெகுமக்களை வறுமையின் பிடிக்குள் வைத்துக் கொண்டு, இராமன் கோவில் கட்டுவதே நாட்டின் முதல்பணி என்று திரியும் இந்தப் பார்ப்பனிய மதவெறிக் கும்பலின் கூச்சலை அவர் உணர்ந்திருந்தாரா என எண்ணத் தோன்றுகின்றது.

உலகப் பொருளாதாரச் சரிவுகள் ஏற்பட்ட போதெல்லாம் நாட்டில் பொருளாதாரம் நிலைகுலையாமல் நின்றது என்று இங்குள்ள பொருளியல் வல்லுநர்கள் வெற்றுப் பெருமை பேசிக் கொள்கின்றனர். இவையெல்லாம் கடைந்தெடுத்த கயமைத்தனம். அடிப்படையில் ஆட்சியில், அறத் துறையில், மக்கள் மன்றங்களில் உள்ள மேல்தட்டில் உள்ளோரின் அடிமனதில் பார்ப்பனியச் சனாதனச் சிந்தனை வலுவாக ஆட்கொண்டுள்ளது என்பதுதான். இதேநிலைதான் பரந்துபட்ட மக்களின் ஆழ்மனங்களிலும்.

அண்மையில் இங்கு சுப்பிரமணியம் சாமி வெளிப்படையாகச் சொல்கிறார், நான் காவலாளியல்ல பிராமணன் என்று,

வங்கத்தில் பொதுவுடைமை அரசில் மூத்த அமைச்சராக இருந்தவர், நான் முதலில் இந்து, பின் நான் ஒரு பிராமணன், பின்புதான் நான் ஒரு கம்யூனிஸ்ட் என்கிறார். கேரளத்தில் பொதுப் பள்ளிகள் தொடங்கப்பட்டபோது பொதுவுடைமை இதழ் நடத்தியவர் ஈழவர்களை வகுப்பறைக்குள் அனுமதிக்கக்கூடாது என்றார். இது ஏதோ அவர்கள் மேல் சேற்றை வாரி இரைப்பதற்கானதன்று. இந்த உளவியல்தான் இந்திய ஒன்றிய மக்களின் மனங்களில் வேரூன்றி உள்ளது என்பது தான்.

உண்மையில் பொதுவுடைமைவாதிகள் இந்திய ஒன்றியச் சமூகச் சூழலை, வரலாற்றை மார்க்சு வலியுறுத்திச் சொல்வது போன்று படிக்க, ஆய்வு செய்ய முற்படவே இல்லை. அதனால் தான் பார்ப்பனியச் சனாதத்தைப் பெரியாரும், அம்பேத்கரும் தோலுரித்துக் காட்டிய போது இவர்கள் சமூகப் பிரிவினை வாதிகள் என்று புறம் தள்ளினர். நியாயமாகப் பார்த்தால் பொதுவுடைமைவாதிகள்தான் பார்ப்பனியத்தை வேரறுத்திடும் செயல்பாடுகளைச் செயல்படுத்துவதில் இந்திய சமூகத்தில் முன்னோடிகளாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இவ்வமைப்புகளின் மேல்தட்டிலிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பார்ப்பனர்கள் என்பதால் அவர்களது தன்சாதிப் புத்திதான் (Blood is thicker than water) மேலோங்கியிருந்தது. அதனால்தான் நெடுங்காலம் பொதுவுடைமை அமைப்புகள் தவிர்த்த எந்த அமைப்பும் கட்சியும் பொதுவுடைமைக் கருத்துக்களை, கோட்பாடுகளை, சித்தாந்தத்தை பேசுபொருளாகக் கூடக் கருதாத நிலையில் பொதுவெளிக்கு அச்சு ஊடகங்கள், நெடும் பரப்புரை வாயிலாகவும் பரவலாகக் கொண்டு சேர்த்த பெரியாரை, பார்ப்பனர்களை ஒழிக்க முற்பட்டார் என்பதாக அவரை வகுப்புவாதி என்று அவரின் விரிந்த பரிமாணத்தைச் சுருக்கி, கடும் வசை பாடுவதையே வேலையாகக் கொண்டிருந்தனர்.

இந்தப் பின்னணியில் பார்ப்பனியம் விதைத்துவிட்ட நச்சுச் சிந்தனை - உழைப்பு, உடல் உழைப்பு இழிவானது, வெறுக்கத்தக்கது. உடல் உழைப்போர் எவ்வழியிலும் சுரண்டப்படலாம்; இழிவுபடுத்தப்படலாம். இவர்களுக்கு இழி ஊதியமே போதுமானது, இவர்கள் பிழைப்புக்கே தகுதியற்றோர் என்பதும், படிப்புத்தான் உயர்ந்தது, படித்தவன்தான் உயர் ஊதியம் பெறுவதற்கும், வளவாழ்வுக்குரியவன் - இந்திய ஒன்றியச் சமூகத்தின் நிலைத்ததாகவே நின்று வருகிறது. இந்த வகையில் உழைப்பையே முதன்மையான மூல முதலாகக் கொண்ட வேளாண்மை, நெசவு போன்ற தொழில்களும் இத்தொழில்கள் சார்ந்தோரும் மதிப்புடை வாழ்வு மறுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்.

வேளாண்மைசார் மக்கள் மேம்பாட்டை அடைவதற்கு வேளாண்மைத் தொழில் கட்டமைப்புகளும், முறைகளும், பொருளாதாரமும் தலைகீழ் மாற்றத்திற்கு உட்படுத்தும் வகையில் திட்டங்களும், செயல்பாடுகளும் வகுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தொடர்ச்சியாக நெசவுத் தொழிலும் அடிப்படையில் வேளாண்மைத் தொழிலைச் சார்ந்து அமைந்துள்ளதால் இத்துறையும் சீரமைக்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் அடுத்தடுத்து தனித்தனியாய் விரிவாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம். அதற்கு முன்பாக அரசு அமைப்பு அலகுகளான மக்கள் மன்றம், நிருவாகம், அறமன்றங்களில் இவர்களுக்கான சமூக அடிப்படையிலான பங்கீடுகள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது என்பதைக் காணலாம்.

இந்திய ஒன்றியம் குடியேற்ற நாடாக இருந்த காலத்திலிருந்தே ஒடுக்கப்பட்ட சமூகங்கள் அரசு எந்திரத்தில் பங்கீடு என்ற தன்மையிலின்றி பெயரளவுக்கான ஒதுக்கீடு பெற்று வந்தன. அதன் நீட்சிதான் விடுதலைபெற்ற குடியரசான ஒன்றியத்தின் அரசமைப்புச் சட்டத்திலும் அதற்கான விதிகளும் இடம் பெற்றன. ஆனால் அதன் செயல் வடிவம் முற்றிலுமாக முரணான நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதுதான், தற்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள ஒன்றிய அரசின் பொருளாதாரத்தில் நலிவுற்றோர் என்ற பெயரிலான அவர்களுக்கான அரசுப் பணிகளிலும் கல்வியிலும் 10 விழுக்காடு ஒதுக்கீட்டுச் சட்டம். இது புயல் வேகத்தில் செயல்பாட்டுக்கு வந்து விட்டது. அதாவது பல பத்தாயிரம் கணக்கில் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஒன்றிய அரசு ஆணைகள் வெளியிடுகின்றது. அடுத்து உடன் பணியிடங்களின் பணியமர்த்தப்படுவோருக்கான சம்பளச் செலவிற்காக இலக்கம், கோடிக்கணக்கில் ஒதுக்கீடு செய்கிறது அரசு. உண்மையில் தற்பொழுதுள்ள பணியிடங்களில் 30 விழுக்காட்டுக்கு மேலான இடங்கள் நிரப்பப்படாமல் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்தக் காவிக் கூட்டம் 10 விழுக்காடு ஒதுக்கீட்டுக்காக விரைவில் செயல்படுகின்றது.

இந்த வேகத்தில் இந்திய வரலாற்றில் ஏதும் நிகழ்ந்திடவே இல்லை என்றே சொல்லலாம். 2006-இல் ஒன்றிய அரசுக் கல்வியில் இதர பிற்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்து வெளியிடப்பட்ட சமயத்தில், அந்த இட ஒதுக்கீடு செயல்படுத்த முடியாத அளவுக்கு எவ்வாறெல்லாம் நிபந்தனைகள் விதிக்கப்பட முடியுமோ, அவ்வளவும் வஞ்சகமாக விதிக்கப்பட்டு அந்த ஒதுக்கீடு இப்பொழுது வரை முடக்கப்பட்டுவிட்டது. அவை : ஒவ்வொரு ஆண்டும் 9% மட்டுமே இடஒதுக்கீடு அளித்து மூன்றாம் ஆண்டில் 27% அளிக்கலாம். ஆனால் அந்த 9% இடஒதுக்கீட்டுக்கு உருவாக்கப்படும் இடங்களுக்கான அந்தந்தக் கல்வி நிலையங்களில் அடிப்படைக் கட்டமைப்பு இருந்திட வேண்டும். கூடுதல் இடங்களுக்குப் போதுமான ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆசிரியர்கள் தேர்வு செய்வதற்கு வாய்ப்புகள் உள்ளனவா என உறுதி செய்திடல் வேண்டும். இவற்றையெல்லாம் ஒரு குழு ஆய்வு செய்து ஆய்வு அறிக்கை ஒன்றிய அரசு மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு அளித்து அவர்கள் இசைவளித்த பின்தான், **9% ஒதுக்கீடு செயல்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு சட்டம் நடைமுறைக்கு வந்து 12 ஆண்டுகள் முடிவுற்ற நிலையிலும் 27% ஒதுக்கீடு முற்றிலும் நிறைவேற்றப் படாததாகத்தான் உள்ளது.**

இதேபோன்று 2009இல் அனைவருக்கும் கல்வி என்ற சட்டம் கொண்டுவரப்பட்டு, 10 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அது முடக்கப்பட்டுள்ளது. அதன்படி தனியார் சுயநிதிப் பள்ளிகளில் 25% இடங்கள் நலிவுற்ற மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அதற்கான செலவை அரசே ஏற்கும் என்பதாக அறிவிக்கப் பட்டது. இது வெகுமக்களைக் கொடுமையாக வஞ்சிக்கும் திட்டம். இது அரசே தனியாரை ஊக்குவித்து அரசின் நிதியை வீணடித்துவிட்டு கல்வியை வணிகச் சரக்காக மாற்றிவிட்டு மக்கள் நல அரசு என்ற பொறுப்பிலிருந்து தன்னை முழுமையாக விலக்கிக் கொள்வதற்காகச் செய்த ஏற்பாடுதான்.

இதுபோன்றதுதான் ஒன்றிய அரசு மண்டல் குழு அறிக்கையின் அடிப்படையில் 1990-இல் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27% ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது அது 1994 வரை நடைமுறைப்படுத்த முடியாத அளவுக்கு நிருவாக, சட்டமன்றம், அறமன்றங்கள் ஒருங்கிணைந்து வஞ்சகமாகத் தடுக்கப்பட்டது.

இவ்வாறான தொடர் தடைகளினால் இதர பிற்படுத்தப் பட்டோர், பட்டியல் குலத்தினர், பழங்குடி மக்களுக்கான முறையே 27%, 15% மற்றும் 7.5% இடஒதுக்கீட்டை ஒன்றிய அரசுப் பணிகளிலும், கல்வியிலும் பெற்றிடாத வகையில்தான் எந்த அரசியல் கட்சி ஆட்சியிலான அரசுகளும் செயல்பட்டு வந்துள்ளன. பார்ப்பனர்கள் எவ்வாறு ஆக்கிரமித்து உள்ளனர் என்பதை அட்டவணையில் காணலாம். அரசின் உயர்நிலைப் பணியிடங்களில் இந்த நிலையை தெளிவுபடுத்தும் வகையில் அரசின் பல உயர்நிலை பணிகளில் உள்ளோரின் எண்ணிக்கை ஒன்றிய அரசால் தகவல் பெறும் சட்டத்தின்படி அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்கள் தவிர்த்த அனைத்து மாநில அரசுகளில், உயர் பணியிடங்களில் உள்ளோரின் விகிதமும் இதேபோன்றதுதான். இந்தத் தகுதி வாய்ந்த, திறமைமிக்க இப்பெருங்கூட்டத்தார் விடுதலை பெற்ற இந்திய ஒன்றியத்தை 70 ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டவர்கள், ஆட்டிப் படைப்பவர்கள் நாட்டையும், நாட்டின் வெகுமக்களான எளிய மக்களை எவ்வளவு கொடூரமாகச் சூறையாடி-எவ்வளவு இரங்கத்தக்க இழிவான நிலையில் உலக நாடுகளிடையே வைத்துள்ளனர் என்பதைச் சென்ற இதழில் தெளிவாகப் பட்டியலிட்டுள்ளோம். (அருள்கூர்ந்து வாய்ப்பிருந்தால் பார்க்கவும்).

அரசமைப்புச் சட்டப்படி அளிக்கப்பட்ட அடிப்படை உரிமையான இடஒதுக்கீட்டைக் காலந்தோறும் வஞ்சகமாக உரிய அளவில் அளிக்காமல் மறுத்தே வரப்பட்டுள்ளது. உண்மையில் வேலை, கல்வி மட்டிலும் இட ஒதுக்கீட்டை வலியுறுத்தியது மட்டுமின்றி பிற்படுத்தப் பட்டோரின் நலனுக்காக மண்டல் தம் அறிக்கைகளில் ஒடுக்கப்பட்ட மக்களாக உள்ள இவர்களின் மேம்பாட்டை இலக்காகக் கொண்டு இம்மக்களுக்கு அரசுத் திட்டங்கள் அனைத்திலும் 27% இடஒதுக்கீடு வழங்கிட வேண்டுமெனப் பரிந்துரைத்தார்.

மண்டல் நாடு முழுவதும் பல்வேறு கள ஆய்வுகளை மேற்கொண்டும், பல நிலைகளிலுள்ள மக்களிடம் விரிவாக விவாதித்தும் மக்களின் சமூக நிலை, கல்வி நிலை, விவசாய நிலை, வாழ்க்கைச் சூழல், அடிப்படை வசதி நிலை என இன்னும் இதுபோன்ற பல்வேறு தன்மைகளையும் கருத்தில் கொண்டு முதன்மை விவரங்களையும் (Primary data) அரசு, பிற நிறுவனங்களில் மேற்சொன்ன கூறுகள் தொடர்பாகப் பதிவாகியிருந்த இரண்டாம் நிலை (Secondary data) விவரங்களையும் அடிப்படையாகக் கொண்டு உலகே கண்டிராத தருக்

**பணியிடங்களில் உள்ளோர்**

| அலுவலகம் | மொத்தம் | பார்ப்பனர் | தா.ப. / ப.கு. | இ.பி.வ. |
|---|---|---|---|---|
| குடியரசுத் தலைவர் | 49 | 39 | 4 | 6 |
| துணைக் குடியரசுத் தலைவர் | 7 | 7 | 0 | 0 |
| முதன்மை அமைச்சர் | 35 | 31 | 2 | 2 |
| அமைச்சரவைச் செயலாளர் | 21 | 17 | 1 | 3 |
| வேளாண் துறை | 274 | 259 | 5 | 10 |
| பாதுகாப்பு அமைச்சகம் | 1379 | 1300 | 48 | 31 |
| சமூகநல அமைச்சகம் | 209 | 132 | 17 | 60 |
| நிதி அமைச்சகம் | 1008 | 942 | 20 | 46 |
| பிளானட் அமைச்சகம் | 409 | 327 | 19 | 63 |
| தொழில் துறை அமைச்சகம் | 74 | 59 | 5 | 10 |
| வேதிப்பொருள்கள் பெட்ரோல் அமைச்சகம் | 121 | 99 | 0 | 22 |
| ஆளுநர்கள், துணை ஆளுநர்கள் | 27 | 25 | 0 | 2 |
| இந்தியத் தூதர்கள் | 140 | 140 | 0 | 0 |
| ஒன்றிய அரசுப் பல்கலைக்கழக து.வே. | 108 | 100 | 3 | 5 |
| ஒன்றியச் செயலாளர்கள் | 26 | 18 | 1 | 7 |
| உச்சநீதிமன்ற நீதிபதிகள் | 26 | 23 | 1 | 2 |
| இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் | 3600 | 2750 | 300 | 550 |

(Young India நிறுவனம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் 2018இல் பெற்ற புள்ளிவிவரம் இது.)

கத்திற்கும் (Logical) அறிவுப் பூர்வமான (rational) வினாக்களுக்கும் விடை தரும் மேன்மையான அறிக்கையைச் செயல்படுத்தத் தக்க நியாயமான புரிந்துரைகளுடன் ஒன்றிய அரசுக்கு வழங்கினார்.

இந்த ஒப்பரிய அறிக்கையை அரசுப் பணி, கல்வியில் இடஒதுக்கீட்டுக்கு என்று மட்டும் அரசு திட்டமிட்டு குறுக்கிக் கொண்டு அறிக்கையின் சுருக்கத்தை மட்டும் நாடாளுமன்ற அவைகளில் வைத்ததுடன் மேல்நடவடிக்கை இன்றிக் கிடப்பில் போட்டுவிட்டது.

**மண்டல் ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு அரசு, தொழில் தொடங்குவதற்குள்ள திட்டங்கள், அரசுப் பொது நிறுவனங்கள் மேற்கொள்ளும் வீடுகட்டும் தொழில்கள், வணிக வளாகங்கள் அமைத்தல் என பல்வேறு பணித் திட்டங்கள், இதனால் பயனடைவோர்கள் என்ற பல்வேறு நிலைகளிலும் தளங்களிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய ஈடுசெய் (representation) பங்காக இடஒதுக்கீடு அளித்திடப் பரிந்துரைகள் தந்தார். பிற்படுத்தப்பட்டோர் என்பதை அடையாளப் படுத்த பல்வேறு அளவுகோல்களை வகுத்து அந்த ஆய்வின் அடிப்படையில் அந்தப் பட்டியலை இறுதி செய்தார். அந்த அரிய சிறப்பான அறிக்கையை எவ்வித முழுமையான ஆய்வுக்கும் உட்படுத்தாமல் செயல்படுத்துவதற்கு எவ்வித முனைப்பும் காட்டாமல் பார்ப்பனியச் சிந்தை கொண்ட அனைத்து நிலையிலும் உள்ளோர் புறம்தள்ளிவிட்டனர்.**

எனவே பார்ப்பனியச் சனாதனச் சிந்தனை குறிப்பாக உழைப்பு, உடல் உழைப்பு இழிவானது என்ற சிந்தனை இச்சமூகத்திலிருந்து முற்றிலுமாக வேரறுக்கப்பட்டால்தான், வெகுமக்கள் மதிப்புடன் கூடிய வாழ்க்கையைப் பெற முடியும். இது சமூகத் தளத்திலும், அரசியல் தளத்திலும் பேசுபொருளாக மட்டும் நெடுங்காலமாக இருந்து வருகின்றது. இதன் பயனாய்ப் பார்ப்பனியத்தின் வேர்ப் பிடிப்பில் நெக்குவிட்டதாகக் கூட இல்லை. ஆனால் தலைகீழ் பொருளாதார மாற்றம் தான் அந்த வேரறுப்பு வேலையைச் செய்யும்.

எனவே இதற்கான மாற்றுத் திட்டம் வகுத்தெடுக்கப்பட்டு செயல்படுத்தினால்தான், இந்தச் சிக்கலுக்கான தீர்வை நோக்கி நகரலாம். அத்தன்மையில் முதலில் வேளாண் பொருளியல் நிலையை ஆய்வுக்குட்படுத்தலாம். இந்திய ஒன்றியச் சமூகத்தின் பெரும் பகுதி வேளாண்மையில் ஈடுபட்டும், சார்ந்தும் இருந்து வருகின்றது. மக்கள் தொகையில் 70% வேளாண் மக்கள் உள்ளனர். இவர்களுள் 90%-க்கு மேலான வெகுமக்களாக உள்ள குறு, சிறு விவசாயிகள், விவசாயக் கூலிகளாக விளிம்பு நிலை பிழைப்பு நடத்துபவர்களாக, ஒடுக்கப்பட்டவர்களாக, வறுமையின் பிடியில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு விடுதலையும், வாழ்வும் ஒருசேரக் கிடைத்திட அவர்களின் பொருளாதாரம் மேம்பட வழிகாண வேண்டும். எனவே வேளாண்மைத் துறை பற்றியும், அதைச் சார்ந்துள்ள மக்களின் பொருளாதாரத் தைப் பற்றியும் இனிவரும் இதழ்களில் விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம். ❖

# தேர்தல் பத்திரம் கார்ப்பரேட்டுகளின் கருப்புப் பணத்திற்கான முகமூடி

க. முகிலன்

நாடாளுமன்றத்துக்கும் ஆந்திரம், அருணாசலப் பிரதேசம், ஒடிசா, சிக்கிம் ஆகிய மாநிலங்களின் சட்டப் பேரவைகளுக்கும், தமிழ்நாட்டில் 22 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் 2019 ஏப்பிரல் 11 முதல் மே 19 முடிய ஏழு கட்டங்களாகத் தேர்தல் நடந்து கொண்டிருக் கிறது.



தில்லியில் உள்ள தலைமை தேர்தல் ஆணையர் அலுவலகம்

இதற்குமுன் நடைபெற்ற தேர்தல்களைவிட இந்தத் தேர்தலில் பணம் கோடி கோடியாய்ச் செலவிடப்படுகிறது. ஆந்திரத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரும் தெலுங்குதேசம் கட்சியைச் சேர்ந்தவருமான ஜெ.சி. திவாகர் ரெட்டி வெளியிட்ட அறிக்கை "தி இந்து" ஆங்கில நாளேட்டில் 23.4.2019 அன்று வெளியாகியுள்ளது. அதில், "ஆந்திரத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு வேட்பாளரும் கிட்டத்தட்ட 25 கோடி உருபா செலவிட்டனர். ஆந்திரத்தில் நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் சட்டப்பேரவைக்கும் சேர்த்து தேர்தல் செலவு ரூ.10,000 கோடியைத் தாண்டியுள்ளது. வாக்காளர்கள் ரூ.2000-க்குக் குறைவான தொகையைப் பெற மறுக்கின்றனர். சில இடங்களில் வேளாண் தொழிலாளர்களும் பிற கூலி வேலை செய்வோரும் ரூ.5000 கேட்டனர்" என்று திவாகர் ரெட்டி கூறியுள்ளார்.

ஊடகவியல் ஆய்வு நடுவம் மேற்கொண்ட ஆய்வில், 2010 முதல் 2014 வரை இந்தியாவில் நடந்த தேர்தல்களில் ரூ.1,50,000 கோடி செலவிடப்பட்டதாகவும், இதில் பாதித் தொகை கணக்கில் காட்டப்படாத கருப்புப் பணம் என்றும் கூறியுள்ளது. பா.ச.க.வும், காங்கிரசும் 2019 ஏப்பிரல்-மே மாதங்களில் நடைபெறும் தேர்தலில் தனித்தனியே ரூ.50,000 கோடி செலவிடத் திட்டமிட்டிருப்பதாக 14.4.2019 நாளிட்ட 'டெக்கான் கிரானிக்கிள்' ஆங்கில நாளேட்டின் ஆசிரியவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளுக்குக் கோடி கோடியாகப் பணம் கொடுப்பது யார்? பெருமுதலாளிகள், பெரும் வணிகர்கள், பெரிய ஒப்பந்தக்காரர்கள் முதலானோர் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கின்றனர். 1930-கள் முதலே காங்கிரசுக் கட்சிக்கு பிர்லா, டாடா போன்ற முதலாளிகள் பெருந்தொகையை நன்கொடையாக அளித்து வந்தனர். அதனால், இவர்களின் பொருளியல் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் காங்கிரசுக் கட்சியில் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டன. 1937-இல் பெரும்பாலான மாகாணங்களில் காங்கிரசுக் கட்சியின் தலைமையிலான ஆட்சி அமைந்த போது, ஆட்சியதிகாரத்தில் முதலாளிகளின் செல்வாக்கு வளர்ந்தது. இம்முதலாளிகள் பார்ப்பன - பனியா - மார்வாரி உள்ளிட்ட மேல்சாதியினராகவே இருந்தனர். இன்றளவும் இந்தியாவில் உள்ள பெருமுதலாளிய நிறுவனங்களும் வணிகக் குழுமங்களும் இந்த மேல்சாதியினரின் ஆதிக்கதிலேயே இருக்கின்றன.

இந்தியா குடியரசானபின் 1952இல் நடந்த முதலாவது பொதுத் தேர்தலின்போதே வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பது என்பது ஏற்பட்டுவிட்டது. தேர்தலில் அதிக அளவில் செலவு செய்ய வாய்ப்புள்ள கட்சியே அதிக இடங்களில் வெற்றி பெறக் கூடிய நிலை உண்டாயிற்று. மக்கள் நாயக ஆட்சியாக வளர வேண்டியது பணநாயகத்தின் ஆட்சியாக மாறியது. தொழில் நிறு

வனங்கள் அரசியல் கட்சிகளுக்குப் பெருந் தொகையை நன்கொடையாக அளிப்பது, சனநாயக நெறிமுறைகளுக்கும் மக்களாட்சிக் கோட்பாட்டுக்கும் எதிரானதாகும் என்று எதிர்ப்புக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. இது தொடர்பாக, 1957-இல் மும்பை உயர்நீதிமன்றத் தில் வழக்குத் தொடரப்பட்டது. தலைமை நீதிபதி யாக இருந்த எம்.சி. சாக்ளா, ''இது மிகப் பெரிய ஆபத்து; வேகமாக வளர்ந்து வரும் சனநாயகத்தின் குரல்வளையைக் கூட நெரித்து விடும், தொழில் நிறுவனத்தின் பங்குதாரர் கள் மட்டுமின்றி, வாக்களிக்கும் வாக்காளர்கள் கூட தொழில் நிறுவனங்கள் அரசியல் கட்சி களுக்கு அளித்த நன்கொடை குறித்து அறிவது முதன்மை யாகும்'' என்று தீர்ப்பளித்தார், இதே போன்றதோர் தீர்ப்பை கொல்கத்தா நீதிமன்றமும் 1957-இல் வழங்கியது,



*சனநாயக சீர்திருத்தத்திற்கான அமைப்பின் தலைவர் பேராசிரியர் ஜெகதீப்சோக்கர் தில்லியில் செய்தியாளர் சந்தப்பில் பேசுகிறார். உடனிருப்போர் வழக்குரைஞர் பிரசாந்த் பூசன், அட்மிரல் எல்.இராமதாசு*

அதன் பிறகும் தொழில் நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு அளித்துவந்த நன்கொடை குறித்த விவரம் பொது மக்கள் அறிய முடியாதவாறு இரகசியமாக வைக்கப்பட்டது. இந்த நன்கொடையில் பெரும்பகுதி கருப்புப்பணம் என்பதால் அரசியல் கட்சிகளும் தொழில் நிறுவனங்களும் கூட்டுக் களவாணிகளாகச் செயல்படு கின்றனர்.

1991-இல் தாராள மயம் - தனியார் மயம் என்கிற கொள்கையை அரசுகள் நடைமுறைப்படுத்தத் தொடங்கிய பின், நிலம், காடுகள், கனிம வளங்கள், மணல், பெட்ரோலிய எண்ணெய் வயல்கள் முதலானவை பெருமுதலாளிய நிறுவனங்களின் கொள்ளைக்குத் திறந்துவிடப்பட்டன. இந்த இயற்கை வளங்களை மலிவு விலையில் பெறவும், அப்பகுதிகளில் வாழும் மக்களை வெளியேற்றவும் முதலாளிய நிறுவனங்கள் ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சிக்கும், எதிர்க் கட்சி களுக்கும் பெருந்தொகையைக் கையூட்டாகவும், நன் கொடையாகவும் அளிப்பது வேகமாகப் பெருகியது. சனநாயகம் என்பது பணம் குவிக்கும் வணிகமாக மாறிவிட்டது. தேர்தல் நன்கொடை என்பது அரசியல் கட்சிகளின் அச்சாணி போலாகிவிட்டது. சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் போன்ற பதவிகளுக்குச் செல்வது குறுகிய காலத்தில் கோடிகளில் பணத்தைக் கொள்ளையடிப்பதற்கே என்ற நிலை ஏற்பட்டுவிட்டது,

அரசியல் கட்சி, நன்கொடை என்கிற பெயரில் இவ்வளவு தொகைதான் பெறவேண்டும் என்கிற வரம்பு ஏதும் இல்லை. அதேபோல் தேர்தலில் செலவு செய்வதற்கும் வரம்பு இல்லை, தற்போது நாடாளுமன்றத் திற்குப் போட்டியிடும் வேட்பாளர் எழுபது இலட்சம் உருபா வரையில் செலவு செய்யலாம் என்று விதிக்கப் பட்டுள்ளது, அரசியல் கட்சிகளின் வரவு-செலவு எந்த வொரு தணிக்கைக்கும் உட்படுத்தப்படுவதில்லை, அதனால் அதில் ஊழலும் கருப்புப் பணமும் தாராள மாகப் புழங்குகின்றன. அரசியல் கட்சிகளின் வரவு-செலவை இந்திய அரசின் தலைமைத் தணிக்கைக் கணக்காயரின் தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு அரசியல் கட்சிகள் செவிமடுப்ப தில்லை.

சனநாயக சீர்திருத்தத்திற்கான அமைப்பு என்கிற தன்னார்வ அமைப்பின் தகவல்படி, அரசியல் கட்சிகள் பெறும் நன்கொடையில் 69 விழுக்காடு இன்னாரிட மிருந்து பெறப்பட்டவை என்பதே தெரியாதவை; மீத முள்ள 31 விழுக்காடு வருமான வரித்துறைக்கு அரசியல் கட்சிகள் அளிக்கும் அறிக்கையிலிருந்து வெளியில் தெரிய வருபவை ஆகும். அரசியல் கட்சிகளின் உண் மையான வருவாய் அவற்றின் அறிக்கையில் வெளி யிடுவதைவிட இரண்டு மடங்கு இருக்கும், இவற்றின் உண்மையான வருவாய் குறித்து வருமானவரித் துறையிடமோ, தேர்தல் ஆணையத்திடமோ அதிகாரப் பூர்வ ஆவணம் கிடையாது. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் அரசியல் கட்சிகள் பெற்ற நன்கொடை கள் குறித்து சில தகவல்களைப் பெறமுடிந்தது. இந்த நிலையைத் தேர்தல் பத்திரத் திட்டம் ஒழித்துவிட்டது.

தேர்தல் ஆணையமும், சட்ட ஆணையமும் அரசியல் கட்சிகளுக்குத் தொழில் நிறுவனங்கள் அளிக்கும் தேர்தல் நன்கொடையில் வெளிப்படைத் தன்மை இல்லை என்பதைப் பலமுறை சுட்டிக்காட்டி

யுள்ளன. சனநாயக சீர்திருத்தத்திற்கான அமைப்பு 2002-இல் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம், வேட்பாளரின் கல்வித் தகுதி, சொத்து விவரம், குற்ற வழக்குகள் குறித்த விவரங்களை வேட்பாளர் விண் ணப்பத்தில் தெரிவிக்க வேண்டும்; வாக்காளர்கள் இந்த விவரங்களை அறிவதற்கான உரிமை உடைய வர்கள் என்று தீர்ப்பளித்தது. இது நடைமுறையில் பின்பற்றப்படுகிறது. வேட்பாளர்கள் விண்ணப்பத்தில் அளித்த விவரத்தின்படி, 2009இல் நாடாளுமன்றத்தில் 543 உறுப்பினர்களில் 300 பேர் (58%) கோடீசுரவர் கள், 2014-இல் 100 விழுக்காட்டினரும் கோடீசுவரர் கள். எனவே கோடிகளில் செலவிடக்கூடிய பணவசதி படைத்தவர்களையே எல்லாக் கட்சிகளும் வேட்பாளர் களாக நிறுத்துகின்றன.

2017ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நாடாளு மன்றத்தில் முன்மொழிந்த போது, நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, அரசியல் கட்சிகளுக்குப் பணமாக நன்கொடை தரும் முறையில் கருப்புப் பணத்தின் புழக்கத்தைத் தடுத்திட, தேர்தல் பத்திரத் திட்டம் என்பதை நடுவண் அரசு அறிமுகப்படுத்தவுள்ளதாக அறிவித்தார். இதற்காக 1951-ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1961-ஆம் ஆண்டின் வருமான வரிச்சட்டம், 1934-ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 2013-ஆம் ஆண்டின் தொழில் நிறுவ னங்கள் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் செய்யப் பட்டன.

நடுவண் அரசு 2018 சனவரி 2 அன்று தேர்தல் பத்திரத் திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தின்படி, ரூ.1,000, ரூ.10,000, ரூ.1 இலட்சம், ரூ.10 இலட்சம், ரூ.1 கோடி மதிப்பிலான தேர்தல் பத்திரங்கள் பாரத ஸ்டேட் வங்கியின் குறிப்பிட்ட கிளைகளில் ஒவ்வொரு ஆண்டும் சனவரி, ஏப்பிரல், சூலை, அக்டோபர் ஆகிய மாதங்களில் பத்து நாள்களுக்கு வழங்கப்படும். நாடாளு மன்றத்துக்குத் தேர்தல் நடக்கும் ஆண்டுகளில் கூடுத லாக முப்பது நாள்களுக்குத் தேர்தல் பத்திரங்கள் வழங்கப்படும். இதன்படி 2019 பிப்பிரவரி 28 அன்று நடுவண் அரசு வெளியிட்ட அறிவிப்பில் 2019 மார்ச்சு, ஏப்பிரல், மே மாதங்களில் முப்பது நாள்களுக்குத் தேர்தல் பத்திரம் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது. மே 15 வரை தேர்தல் பத்திரங்கள் கிடைக்கும். மே 19 அன்று இறுதிக்கட்ட வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

தனி நபரோ, இந்துக் கூட்டுக் குடும்பமோ, சிலர் ஒன்று சேர்ந்தோ, தொழில் நிறுவனமோ தேர்தல் பத்திரத்தை வங்கியில் வாங்கி, தனக்கு விருப்பமான கட்சிக்கு நன்கொடையாக அளிக்கலாம். அந்தக் கட்சி தன் வங்கிக் கணக்கில் தேர்தல் பத்திரத்தைச் செலுத்திப் பணமாக மாற்றிக் கொள்ளும். தேர்தல் பத்திரம் வழங்கிய வரின் பெயர் வெளியிடப்படாமல் இரகசியமாக வைக்கப் படும். அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்குவதில் இருந்த கருப்புப் பணப் புழக்கத்தைத் தேர்தல் பத்திரத் திட்டத்தின் மூலம் தடுத்துவிட்டதாக மோடி அரசு பெருமை கொள்கிறது. ஆனால் இது உண்மை அன்று.

**வங்கிகள் மூலம் தேர்தல் நன்கொடைப் பத்தி ரங்களை நடைமுறைப்படுத்துவதால் திரைமறைவு நன்கொடைகள் தடுக்கப்படும் என்று மோடி அரசு சொல்கிறது. நீண்டகாலமாக வங்கிகள் மூலமாகத்தான் கருப்புப் பணம் வெள்ளையாக் கப்பட்டு வருகிறது என்பது ஊரறிந்த உண்மை யாகும். ஹவாலா பணப் பரிமாற்றத்திற்கு வங்கிகள் துணைபோகின்றன. பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் போது, கருப்புப் பணத்தைப் புதிய பணத்தாள்களாக மாற்றிக் கொள்வதில் ரிசர்வ் வங்கி முதல் உள்ளூர் கிளை வங்கிகள் வரையில் துணைபோயின என்பது அம்பலப் பட்டுச் சந்தி சிரிக்கிறது.**

நாடாளுமன்றத் தேர்தலிலும் சட்டமன்றத் தேர்த லிலும் ஒரு விழுக்காட்டுக்குமேல் வாக்குகள் பெற்ற - தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே தேர்தல் பத்திரம் வழங்க முடியும். 2017ஆம் ஆண்டு வரையில் ஒரு தொழில் நிறுவனம் அரசியல் கட்சிக்கு நன்கொடை வழங்க வேண்டுமானால் அது குறைந்தது மூன்று ஆண்டுகள் செயல்பாட்டில் இருந்திருக்க வேண்டும்; இலாபத்தில் இயங்கியிருக்க வேண்டும்; மூன்று ஆண்டுகளின் நிகர இலாபத்தில் 7.5 விழுக்காடு அளவுக்கு மட்டுமே நன்கொடை தர முடியும் என்கிற விதிகள் இருந்தன. தேர்தல் பத்திரத் திட்டம் இந்த விதிமுறைகளை நீக்கிவிட்டது. மேலும் தொழில் நிறுவனங்கள் சட்டம் 182(3)-இன்படி அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்படும் நன்கொடை விவரத்தை ஆண்டு வரவு-செலவு அறிக்கையில் கட்டாயம் குறிப்பிட வேண்டும் என்று இருந்த விதியும் இப்போது நீக்கப் பட்டுவிட்டது. அதேபோன்று இந்தியாவில் இயங்கும் அயல்நாட்டு முதலாளிய நிறுவனங்கள் தேர்தல் நன் கொடை அளிப்பதற்கு இருந்த தடைகளும் அகற்றப்பட்டு விட்டன.

எனவே, தேர்தல் நேரத்தில் முளைக்கும் காளான் நிறுவனங்கள், போலி நிறுவனங்கள் பெயர்களில் கருப்புப் பணம் தேர்தல் பத்திரங்களாக மாற்றப்படும். இந்நிறுவனங்களின் பெயர்கள் இரகசியமாக வைக் கப்படும் என்பதால் எவ்வளவு பணம் எந்த அரசியல்

கட்சிக்குத் தேர்தல் பத்திரமாக வழங்கப்பட்டது என்ப தெல்லாம் திரைமறைவு தில்லுமுல்லுகளாகவே இருக்கும். எனவேதான், முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா, "தேர்தல் பத்திரம் அரசியல் கட்சி களுக்குத் தொழில் நிறுவனங்கள் தரும் கருப்புப் பணத்தை மூடி மறைப்பதற்கான ஒரு திட்டம்" என்று கூறியிருக் கிறார் (தி இந்து-ஆங்கிலம்-27.1.2019).

தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி, அரசு ஊழியர்கள் மக்களின் பொதுநலன் தொடர்பாக எடுக்கும் கொள்கை முடிவுகளைக் குடிமக்கள் அறிந்து கொள்ள உரிமை இருக்கிறது. அதுபோல் தேர்தலில் வெற்றி பெறும் ஒரு அரசியல் கட்சி எடுக்கும் முடிவுகளைத் தேர்தல் பத்திரங்கள் தீர்மானிக்க வாய்ப்பு இருப்பதால், வாக்காளர்கள் தேர்தல் நன்கொடைப் பத்திரங்களை வாங்கி வழங்கியவர்களின் விவரத்தைத் தெரிந்து கொள்ளும் உரிமை இருக்க வேண்டும்.

சனநாயக சீர்திருத்தத்திற்கான அமைப்பு 2019 மார்ச்சு மாதம் உச்சநீதிமன்றத்தில், "தேர்தல் பத்திரம் வழங்குவதைத் தடைசெய்ய வேண்டும். அல்லது தேர்தல் நடவடிக்கையில் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் வகையில் நன்கொடை வழங்கியவர் களின் விவரங்களை வெளியிட ஆணை பிறப்பிக்க வேண்டும்" என்று வழக்குத் தொடுத்தது. மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சியும் இதேபோன்று ஒரு வழக்கைத் தொடுத்தது.

2019 ஏப்பிரல்-மே மாதங்களில் நாடாளுமன்றத் துக்குப் பொதுத் தேர்தல் நடைபெறவிருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கை முதன்மை வழக்காகக் கருதி, உச்சநீதிமன்றம் 2018 திசம்பர் மாதத்திற்குள் விசாரித்து, தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும். இதற்கு மாறாக, முதல் கட்டத் தேர்தல் தொடங்குவதற்கு முதல் நாள் ஏப்பிரல் 10 அன்று உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், நீதிபதிகள் தீபக் குப்தா, சஞ்சீவ் கன்னா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மூன்று நாள்கள் நடந்த இந்த வழக்கு விசாரணையின் போது, சனநாயக சீர்திருத்தத்திற்கான அமைப்பின் சார்பில், "தேர்தல் பத்திரங்கள் வெளிப்படைத் தன் மையை மறுக்கின்றன; போலியான நிறுவனங்கள் பெயரில் கருப்புப் பணம் நுழைவதற்கான வாய்ப்பு உள்ளது. நன்கொடையாளர் யார் என்பதை அறியும் வாய்ப்பு ஆளும் கட்சிக்கு மட்டும் இருக்கிறது; அதனால் மற்ற கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதைத்தடுத்திட தன் அதிகாரத்தைப் பயன்படுத்தும்" என்று வாதிடப் பட்டது.

தேர்தல் பத்திரத் திட்டத்தை எதிர்த்து தேர்தல் ஆணையத்தின் சார்பில் வாதிட்ட வழக்குரைஞர் ராக்கேஷ் திவேதி, "வேட்பாளர் பற்றிய விவரத்தை அறிவது ஒரு பகுதி மட்டுமே ஆகும். வேட்பாளர் போட்டி யிடும் கட்சிக்கு நன்கொடை அளித்தது யார் என்பதை அறிவது அதைவிட முதன்மையாகும். அரசியல் கட்சிகள் யாரிடமிருந்து நன்கொடை பெற்றன என்கிற விவரத்தை அக்கட்சிகளின் வலைதளத்தில் வெளியிட வேண்டும்" என்று கூறினார்.

நடுவண் அரசின் தலைமை வழக்குரைஞர் கே.கே. வேணுகோபால் உச்சநீதிமன்றத்தில் அளித்த அறிக்கையில், "தேர்தலில் கருப்புப் பணம் செலவழிக்கப் படுவதைத் தடுப்பதற்காக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது செயல்படுகிறதா? இல்லையா? என்பது பற்றி இந்தத் தேர்தல் நேரத்தில் உச்சநீதி மன்றம் தலையிடக்கூடாது. தேர்தல் முடிந்த பின்னர் இதனை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம்" என்று தெரிவித்திருந்தார். மேலும், "அரசியல் கட்சிக்கு யார் நன்கொடை அளித்தார் என்பதை அறியும் உரிமை வாக் காளர்களுக்கு இல்லை; நன்கொடை அளித்தவரின் பெயர் இரகசியத்தைக் காத்திட அரசமைப்புச் சட்டப்படி அரசுக்கு உரிமை உண்டு" என்று தலைமை வழக்கு ரைஞர் வாதிட்டார்.

இந்த வழக்கில் உச்சநீதிமன்ற அமர்வு ஏப்பிரல் 12 அன்று ஒரு இடைக்காலத் தீர்ப்பை அளித்தது. அதில், "நாட்டில் நியாயமான முறையில் தேர்தல் நடைமுறைகள் செயல்படுவது குறித்து தேர்தல் பத்திரத் திட்டம் அழுத்த மான சிக்கலை உண்டாக்கியிருக்கிறது. எனவே அரசியல் கட்சிகள் தாம்பெற்ற தேர்தல் பத்திரங்கள் எந்த நாளில் எந்த வங்கியின் கணக்கில் செலுத்தப்பட்டது, நன்கொடை வழங்கியவர்களின் பெயர்கள், அவர்களின் வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட விவரங்கள் கொண்ட அறிக்கையை முத்திரையிட்ட உறையில் தேர்தல் ஆணையத்திடம் மே 30-க்குள் அளிக்க வேண்டும்" என்று நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், அந்த விவரங்களையும் வருமானவரிச் சட்டம், தேர்தல் சட்டம், வங்கிச் சட்டம் ஆகியவற்றில் செய்யப்பட்ட மாற்றங்களையும் ஒப்பிட்டு விரிவாக ஆராய்வோம் என்று கூறிய நீதிபதிகள், இறுதித் தீர்ப்புக் கான நாள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

நாடாளுமன்ற சனநாயகத்திற்கு அடிப்படையாக விளங்கும் தேர்தல் முறை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் தேர்தல் பத்திரத் திட்டம் குறித்து முன்

கூட்டியே விசாரித்துத் தீர்ப்பு வழங்கி நியாயம் செய்திட உச்சநீதிமன்றம் தவறிவிட்டது. குறைந்த அளவில், தேர்தல் பத்திரத் திட்டத்துக்கு இடைக்காலத் தடைவிதித்து விட்டு, விசாரணையைத் தொடர்ந்து நடத்தியிருக்கலாம். இந்த இடைக்காலத் தீர்ப்பால் நாடாளுமன்றத் தேர்தலில் தேர்தல் பத்திரம் மூலம் கருப்புப் பணம் புழங்குவதைத் தடுக்க இயலாது.

**2017-2018-ஆம் ஆண்டில் கடைசி மூன்று மாதங்களில் தேர்தல் பத்திர விற்பனை ரூ.220 கோடி ஆகும். இதில் பா.ச.க.வுக்கு ரூ.210 கோடி, காங்கிரசுக்கு ரூ.5 கோடி, மற்ற கட்சிகளுக்கு ரூ.6 கோடி அளிக்கப்பட்டுள்ளது. 2017-18-இல் பா.ச.க. பெற்ற தேர்தல் நன்கொடை ரூ.1,027 கோடி; காங்கிரசு பெற்ற நன்கொடை ரூ.197 கோடி. தேர்தல் பத்திரத் திட்டம் ஆளும் கட்சிக்கு அதிக அளவில் வெள்ளைப் பணமாகவும் கருப்புப் பணமாகவும் அளிப்பதற்கே உதவும்.**

**அமெரிக்காவில் தொழில் நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு அளிக்கும் நன்கொடைக்கு வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தேர்தல் பத்திரம் மூலம் வரம்பின்றி எவ்வளவு தொகை வேண்டு மானாலும் தரலாம். இங்கிலாந்தில் குறிப்பிட்ட நிதி ஆதாரங்களிலிருந்து மட்டுமே அரசியல் கட்சி களுக்கு நன்கொடை வழங்க முடியும். ஒவ்வொரு காலாண்டிற்கும் அளிக்கப்பட்ட நன்கொடை விவரத் தை அரசியல் கட்சியின் பொருளாளர் வெளியிட வேண்டும். பிரான்சிலும் கனடாவிலும் தனிநபர் மட்டுமே அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை தர முடியும். அதற்கும் வரம்பு விதிக்கப்பட்டுள்ளது.**

**வெளிப்படைத்தன்மை என்பது சனநாயகத் தின் ஆணிவேர் போன்றதாகும். வேட்பாளரின் விவரத்தை அறியும் உரிமை வாக்காளருக்கு இருப்பது போல், வேட்பாளரின் அரசியல் கட்சி பெறுகின்ற தேர்தல் நன்கொடை விவரத்தை அறியும் உரிமையும் இருக்க வேண்டும். தேர்தல் பத்திரத் திட்டம் இவற்றை மறுக்கிறது. இரகசியம் காத்தல் என்கிற பெயரால் கார்ப்பரேட்டு நிறுவனங் களின் கருப்புப் பணம் தேர்தல் நிதியாக அளிக்கப் பட்டு, தேர்தல் முடிவைத் தீர்மானிப்பதுடன், அமைக் கப்படும் ஆட்சியின் கொள்கை முடிவுகளை - செயல் திட்டங்களை ஆட்டிப் படைக்கும் ஆற்றல் வாய்ந்ததாகவும் விளங்கும். எனவே சனநாயகம் காக்கப்பட தேர்தல் பத்திரத் திட்டம் உடனடியாக ஒழிக்கப்பட வேண்டும்.** ❖

## கவிவேந்தர் கா.வேழவேந்தன் பிறந்த நாள் வாழ்த்து



தமிழகத்தின் முதுபெரும் மரபுக் கவிஞரும் 70 ஆண்டுகளாக இடைய றாமல் இன்று வரை ஓய்வும் சாய்வு மின்றித் தாய்த் தமிழுக்குத் தம் இனிய படைப்புகளால் தொண் டாற்றி வரும் முன்னாள் அமைச்சர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்கள் 5.5.2019 அன்று தம் 84ஆம் வயதில் அடி எடுத்து வைக் கிறார். நம் இதழின் சார்பில் அப்பாவலர் பெருமகனுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் போற்றுதலையும் தெரிவிக்கின்றோம்.

4.6.2019 செவ்வாய் மாலை 6 மணிக்கு நடைபெறும் (1) அவர் தீட்டிய புதிய கவிதை நூல், (2) அவர்தம் சீரிய படைப்பாற்றல் பற்றிப் பேராசிரியர் சிவ. செல்வகுமார் எழுதிய கருத்தாய்வு நூல் ஆகியவற்றின் வெளியீட்டு விழா, பாரி முனையில் உள்ள உயர்நீதிமன்றம் எதிரில் அமைந்த ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் எழுச்சியுடன் நடைபெறு கிறது. தமிழ்ச் சுவைஞர் அனைவரும் பங்கேற்று வாழ்த்து வோம்.

கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களின் அலைபேசி எண்.9444450167. தம் 84-ஆம் பிறந்த நாளை ஒட்டி, “சிந்தனையாளன்” வளர்ச்சி நிதியாக, கவிஞர் அவர்கள் உருவா 1,000/- காசோலை விடுத்துள்ளார். நன்றி.

## அய்யா தமிழேந்தி அவர்களுக்கு செவ்வணக்கம்!

**- மு. சுகுமார்**

சமத்துவம் என்னும்
கருத்தினை விதைத்து
சாதியின் வேரினை
பொசுக்கிய தீயே!

வாளின் கூர்மையை
விஞ்சும் வார்த்தையால்
வரலாற்றின் பக்கத்தை
நிரப்பிய கவிஞரே!

சிந்தை சிலிர்க்கும்
சிந்தனையாளன்
இறுதிப் பக்கமே!
போய்வாரும் ஐயா....

நீர் வளர்த்த செந்தமிழை
நாளை உலகம் பேசும்
வரலாற்றில் உம்தமிழ்
வாசம் என்றும் வீசும்... ❖

# தேசிய குடிமக்கள் பதிவேடு

- குட்டுவன்

ஒன்றிய அரசு தேவையற்ற துறைகளில் பொதுச் செலவினைப் பெருக்கி, மேலும் அரசுக்கடனை உயர்த்தி வருகிறது. அதிகக் கடன் பெறும் நாடுகளில் இந்தியா ஒன்றாகத் திகழ்கிறது. அண்மையில் வந்த அரசுப் புள்ளிவிவரங்களின்படி, 2014இல் ரூ.55 இலட்சம் கோடியாக இருந்த ஒன்றிய அரசின் கடன் ஜனவரி 2019இல் ரூ.83 இலட்சம் கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. இந்தியாவினுடைய குடிமக்கள் அனைவருக்கும் ஒரே சீரான அடையாள அட்டையை (ஆதார்) வழங்கி, அதற்கென ஒரு தனி அமைப்பைத் தொடங்கிச் செலவிட்ட தொகை ரூ.9 ஆயிரத்து 55 கோடி ஆகும். அதிகஅளவில் செலவிட்ட பிறகும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா உட்பட 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு ஆதார் தொடர்பான தீர்ப்பினை (2018 செப்டம்பர்) திங்களில் வெளியிட்டது. இத்தீர்ப்பு ஆதார் அட்டையை அறிமுகப்படுத்துவதற்கான காரணங்கள் பலவற்றைச் செயலிழக்கச் செய்துவிட்டது. இத்தீர்ப்பினைச் சில புள்ளி விவரங்கள் அடிப்படையில் ஆய்வு செய்தால் இன்னும் புதிய சிக்கல்கள்தான் எழுந்து நிற்கின்றன என்பது புலனாகும். இந்தியாவில் 50 விழுக்காட்டு மக்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்றனர். தமிழ்நாடு, கேரளா மற்றும் சில மாநிலங்களைத் தவிர்த்துப்பெரும்பாலான மாநிலங்களில் முழுமையான பொது விநியோகத் திட்டம் இன்றளவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குரிய புள்ளிவிவரங்கள் உரிய முறையில் இதுவரை சேகரிக்கப்படவில்லை. **இந்தியாவில் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் வருமானவரி செலுத்துவோர் 2.2 விழுக்காட்டு அளவே உள்ளனர்.**

உச்சநீதிமன்றத் தீர்ப்பில் வருமான வரி செலுத்துவோர் ஆதார் எண்ணை நிரந்தர வருமான கணக்கு எண்ணுடன் இணைக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. 2.2 விழுக்காடு மக்கள் தொகையினருக்காக ஆதார் எண்ணைக் கட்டாயப் படுத்துவது எவ்வகையில் வருமான வரித்துறையினருக்குப் பயனளிக்கும் என்பது இன்றுவரை புதிராகவே உள்ளது. வணிக வங்கிகள், இணைய பணப்பரிமாற்றத்தில் ஈடுபடும் வங்கிகளுக்கு இனிமேல் ஆதார் அட்டை கட்டாயமில்லை என்று அறிவித்துள்ளது. இது ஒரு வகையில் கறுப்புப் பணத்தை வைத்திருப்பவர்களுக்குச் சாதகமாக அமையும். ஏனென்றால் ஆதார் அட்டையைஆதாரமாக வைத்து வங்கிக்கணக்கை இணையதளம் வழியாக வருமான வரித்துறையினர் வரி ஏய்ப்பாளர்கள் வரி தவிர்ப்பாளர்களை இனம்காண முடியாது. இந்தியாவில் கைப்பேசியைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 82 கோடியாகும். கைப்பேசிகளைப் பயன்படுத்துவதற்குத் தேவையான தொகுப்பியைப் (சிம் அட்டை) பெற, ஆதார் எண் அவசியமில்லை என்றும் இத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. ஆதார் எண்ணை வைத்துக் கைப்பேசி எண்ணைக் கண்டுபிடிப்பதற்கு காவல் துறையினர் மற்றும் பாதுகாப்புத் துறையினருக்கு கைப்பேசி எண்ணை ஆதார் எண்ணோடு இணைத்திருந்தால் குற்றவாளிகளை எளிதில் கண்டுபிடிக்கலாம் என்று சொல்லப்பட்ட ஒரு காரணமும் அடிபட்டுவிட்டது. ஒன்றிய அரசின் பல்வேறு நுழைவுத்தேர்வுகளை எழுதும் மாணவர்களுக்கும் ஆதார் அவசியமில்லை என்றும் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கும் ஆதார் தேவையில்லை என்றும் தீர்ப்பில் சுட்டப்பட்டுள்ளது. இவ்வாறு இந்த ஆதார் அட்டையின் பயன்பாடு பெருமளவில் பயனற்றதாகித் தோற்றுப் போனது.

அரசின் நலத் திட்டங்களைப் பெறும் பெரும்பாலான ஏழை மக்கள் குடிசைகளிலும் பாதுகாப்பற்ற குடியிருப்புகளிலும் வாழ்ந்து வருகின்றனர். பெரும் மழை புயல் மற்றும் தீ விபத்துகளால் ஏழைகளின் வாழ்விடங்கள் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகின்றன. அண்மையில் தமிழ்நாட்டில் தஞ்சை புதுக்கோட்டை திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் கஜா புயல் தாக்கிய போது மக்களின் வீடுகள் பெருமளவில் பாதிப்புக்குள்ளாயின. ஆதார் அட்டைகளும் காணாமல் போயின. எனவே பாதுகாப்பான குடியிருப்புகளில் வாழும் வருமானப் பிரிவினருக்கு ஆதார் அட்டை தேவையில்லை. அதே நேரத்தில் பாதுகாப்பற்ற குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு அரசின் நலத் திட்டங்களைப் பெற ஆதார் அட்டை அவசியம் என்பது பல நிர்வாக நடைமுறைச் சிக்கல்களையும் முரண்பாடுகளையும் மாநில அரசுகளுக்கு ஏற்படுத்துகிறது. மாநிலங்களின் உரிமையைப் பறிக்கும் இந்த அட்டையால் ஏற்பட்ட பலன்களைவிட பாதிப்புகளே அதிகம் என்பதை நடைமுறையில் நாம் காண்கிறோம்.

இத்தகைய சிக்கல்களுக்கு இடையே தற்போது ஒன்றிய அரசு தேசிய குடிமக்கள் பதிவேடுஎன்ற திட்டத்தை அசாம் மாநிலத்திற்கு மட்டும் தற்போது நடைமுறைப்படுத்த முயலுகிறது. இந்தத் திட்டத்தால் பெரும் எதிர்ப்பு வடகிழக்கு மாநிலங்களில் எழுந்துள்ளது. குறிப்பாக அசாம் மாநிலத்தில் சனநாயக முறையில் இயங்கி வரும் அசாம் கணபரிசத் பாசகவின் கூட்டணியிலிருந்து விலகி உள்ளது. இந்தச் சட்டத்தால் மண்ணின் மைந்தர்களின் நில உரிமையும் மற்ற உரிமைகளும் பெருமளவில் பாதிப்படையும் என்று அனைவரும் குறிப்பிடுகின்றனர். இந்தியாவில் பாகிஸ்தான் பிரிவினைக்கு பிறகும் வங்க தேசம் உருவான பிறகும், அந்த நாடுகளிலிலிருந்து பல இலட்சம் பேர் அகதிகளாக மேற்குவங்கத்திற்கும் அசாமிற்கும் குடியேறினர். அகதிகளான இவர்களால் அசாம் மாநிலத்தில் பெரும் தொடர் போராட்டம் 1980இல் வெடித்தது. அசாம் மாநில மக்கள் தொகையைவிட வெளியிலிருந்து வந்து குடியேறிய மக்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்ற சூழ்நிலையில் இந்தப் போராட்டம் மாணவர்களால் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தை நடத்திய மாணவர்கள்தான் பின்பு அசாம் கணபரிசத் என்ற கட்சியை அமைத்து அசாம் மாநிலத்தில் ஆட்சியைக் கைப்பற்றினர். இந்திய விடுதலைக்குப்பின் தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் போல் மற்றொரு மாணவர் புரட்சி என்று உலக அளவில் உள்ள

ஏடுகள் அசாம் மாணவர்களைப் பாராட்டின. இருப்பினும் உல்பா என்கிற தீவிரவாத அமைப்பு தனிநாடு கோரிக்கையை முன் வைத்து, நாகாலாந்து போன்று தனி இராணுவத்தை வைத்துக் கொண்டு இந்திய இராணுவத்தையும் பாதுபாப்புப் பணியில் இருந்த காவல் துறையினரையும் தொடர்ந்து தாக்கி வந்தது. அசாம் பிரச்சினை சுமூகமாகத் தீர்க்கப்பட்டதால் இவர்களது செல்வாக்கு குறையத் தொடங்கியது. தற்போது தேசியக் குடிமக்கள் பதிவேற்றச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தால் மீண்டும் அசாம் மக்கள் தீவரவாத உல்பா இயக்கத்தை ஆதரிக்கின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று பல ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து வடகிழக்கு மாநிலங்களில் கடும் எதிர்ப்பினைத் தற்போது பாசக ஒன்றிய அரசு சந்தித்து வருகிறது.

இந்தச் சட்டத்திருத்தத்தில் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து வெளியேறிய இந்து மக்களுக்கு மட்டும்தான் இந்த தேசியக் குடிமக்கள் பதிவேட்டில் இடம் பெறுகிறார்கள் என்று அறிவித்தவுடன் பெரும் கொதிப்பு உள்ளூர் மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இசுலாமியர் களைத் தவிர்த்து இந்துக்களுக்கு மட்டும் குடியேற்ற உரிமைகள் அளிப்பதனால் இந்து-இசுலாமியர் பிரிவினையை விரிவாக்கி வாக்குவங்கி அரசியல் நடத்தலாம் என்று பாசகவினர் கனவு கண்டனர். ஆனால் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பழங்குடி யின மக்கள் தங்களின் பொருளாதார நிலை பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்று எதிர்க்கத் தொடங்கி விட்டனர். இந்நிலையில் அசாம் மாநிலத்திற்கு மட்டும் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை 1221 கோடி ஆகும். இந்தியாவின் பன்முகத் தன்மை யைச் சிதைத்து, இந்துக்கள் என்ற ஓர் அடையாளத்தைக் காட்டி அரசியலில் வெற்றி பெறலாம் என நினைக்கும் பாசக அரசிற்கு, இது ஒரு பெருத்த அடியாகும். மேலும் ஆந்திரா, தெலங்கானா உட்பட பல மாநிலங்கள் தங்களுக்குச் சிறப்பு தகுதி வேண்டும் எனத் தற்போது போராடி வருகின்றன. இதுபோன்ற பல மாநில மக்களின் பிரச்சினைகளை அந்தந்த மாநிலங்களில் உள்ள பண்பாடு, மொழி, சமூக அடையாளங்களின் அடிப்படையில் சுமூகத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, ஒரே நாடு ஒரே மதம் ஒரே மொழி என்று பாஜக வெற்று முழக்கம் செய்து இந்தியாவைச் சீர்குலைவுப் பாதையில் எடுத்துச் செல்கிறது.

2019 பிப்ரவரி 18இல் சென்னை பெருநகரில் அமைந்துள்ள பஷீர் அகமது பெண்கள் கல்லூரியில், அமெரிக்க மனித உரிமைப் போராளி மார்டின் லூதர் கிங் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. இச்சொற்பொழிவை நிகழ்த்தியவர் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர் மூசா ரசா காஷ்மீர் மாநிலத்தின் சிறப்புத் தகுதியை உறுதிப்படுத்தும் அரசமைப்புச் சட்டப் பிரிவுகளான 370, 35 (ஏ) ஆகியவற்றை மாற்றக்கூடாது என்று வாதிட்டுள்ளார். மூசா ரசா கூறும் காரணங்கள் புதியன. இந்தச் சட்டப்பிரிவுகளை நீக்கிவிட்டால் காஷ்மீர் நிலப்பகுதிகளை அமெரிக்க சவுதி நாட்டின் முதலாளிகளும் இந்தியப் பெரு முதலாளி களும் விலைக்கு வாங்குவார்கள். 5 நட்சத்திர விடுதிகளையும் அடுக்குமாடிக் குடியிருப்புகளையும் பயணிகள் விடுதிகளையும் சொகுசு வீடுகளையும் உல்லாச இருப்பிடங்களையும் தங்கள் இலாப நோக்கிற்காகக் கட்டி இயற்கைச் சூழலையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் முற்றிலுமாக அழித்துவிடுவார்கள். இந்திய ஆட்சிப் பணியில் தேர்வாகி ஜம்மு-காஷ்மீர் மாநில தலைமைச் செயலாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் மூசா ரசா. எல்லாக் கட்சியினராலும் சிறந்த நிர்வாகி என்று பாராட்டப்பட்டவர். அவர் கூறியதற்குப் பல காரணங்களும் உள்ளன. காஷ்மீரில் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் கடந்த காலங்களில் பல உயர் இராணுவ அதிகாரிகள் நில மோசடிகளில் ஈடுபட்டார்கள் என்று ஒன்றிய அரசே பல வழக்குகளைப் பதிவு செய்துள்ளது என்பதைப்பல செய்திகள் தெரிவிக்கின்றன.

பிப்ரவரி திங்கள் 2019இல் கட்டுரையாசிரியர் தெலங்கானா மாநிலத்திற்கு, மாநில சுயாட்சி பற்றிய ஆங்கில நூலை வெளியிடச் சென்றிருந்தார். இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு காங்கிரசு, பாசக தவிர அனைத்துக் கட்சியினரும் வந்திருந்தனர். ஒரே குரலில் தெலங்கான மாநிலத்திற்குச் சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று வலியுறுத்தினர். இந்நூலாசிரியர், வல்லால நாகராஜ் 23 வயது நிரம்பியவர். சட்ட இயலில் பட்டம் பெற்று காக்காத்தியா பல்கலைக்கழகத்தில் உயர் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றார். பெருமளவில் மாணவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். விழா முடியும் வரை மிகவும் கட்டுப்பாடாகச் செயல்பட்டனர். ஐதராபாத் மற்றும் முக்கிய மாவட்டங்களில் வடநாட்டு முதலாளிகள் வட்டித் தொழிலில் ஈடுபட்டும், வணிகத்தில் ஈடுபட்டும் ரூபாய் கோடி கோடியாகக் கொட்டுகிற பணத்தில் நிலத்தை வாங்குவதில் அக்கறைக் காட்டுகின்றனர். ஏழை மக்களின் வாழ்வாதாரங்களைச் சிதைக்கின்றனர். இதை உள்ளூர் மக்கள் எதிர்க்கத் தொடங்கி யுள்ளார்கள். இந்நிலை தொடர்ந்தால் தெலங்கானா மாநிலத்தில் மராட்டிய மாநிலத்தில் செயல்படும் சிவசேனா போன்று உள்ளூர் மக்கள் ஓர் இயக்கம் தொடங்கி, வடநாட்டவர்களுக்கு எதிராகக் களங்கள் அமைத்துவிடுவார்கள். இது பெரும் ஆபத்தினையும், சமூக அமைதியையும் கெடுத்துவிடும் என்று ஆய்வாளர்களும் மாணவர்களும் குறிப்பிட்டனர். வடநாட்டவர்கள் பெரும்பாலா னோர் இந்துத்துவா சங்க பரிவார அமைப்புகளுக்கு நிதியை அளித்து மக்களைப் பிளவுபடுத்தி வருகின்றனர் என்றும் குறிப்பிட்டனர். இதே நிலைதான் தமிழ்நாட்டிலும் உள்ளது. ஊக வணிகத்திற்காக வடநாட்டு முதலாளிகள் நிலங்களை வாங்கு கிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். இவ்விதமான மக்கள் விரோத எதிர்மறைப் போக்குகளைக் கட்டுப்படுத்தி மூசா ரசா தனது உரையில் குறிப்பிட்டது போன்று, சுற்றுச்சூழல் இயற்கை வளங்களைப் பாதுகாக்கஒவ்வொரு மாநிலத்திற்கும் காஷ்மீர் போன்று சிறப்பு அந்தஸ்தை அளித்தால் மட்டுமே இப்பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். மண்ணின் மைந்தர்கள் அந்தந்த மாநிலங்களிலேயே ஏழைகளாக மாற்றப்படுவதைத் தவிர்க்கலாம். இதன் காரணமாகஏற்றத்தாழ்வுகள் பெருகி பிரச்சி னைகள் பெருமளவில் உருவெடுத்து இந்திய ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடும் வாய்ப்புள்ளது. இதுபோன்ற முதன்மையான பிரச்சினைகளைப் புறந்தள்ளி பாசக ஒன்றிய அரசு தேசிய

குடிமக்கள் பதிவேடு என்ற பெயரில் பாகிஸ்தான் ஆப்கானிஸ் தான் ஆகிய நாடுகளில் இருந்து வெளியேறும் இந்துக்களை மட்டும் குடிமக்களாக ஏற்றுக்கொள்வது ஓர் அப்பட்டமான ஒரு அநீதியான செயலாகும்.

1980க்குப் பிறகு ஈழத்தில் சிங்களர்களால் தொடர்ந்து தாக்கப் பட்டுத் தமிழ் நாட்டில் குடியேறியவர்கள் இன்னும் அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டுப் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். ஒன்றிய அரசின் இரகசியப் புலனாய்வுத் துறை தொடர்ந்து தமிழர்களைக்கண்காணித்துப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களின் உரிமைகளைப் பறித்து வருவது எவ்வகையில் நீதியாகும்? ஈழத்திலிருந்து வந்த மக்கள் எல்லோரும் இசுலாமியர்களா? கிறித்தவர்களா? தமிழர்கள் இந்துக்கள் இல்லையா? அசாமில் குடிபெயர்வதற்காக இந்துக்கள் என்ற பெயரில் ஒரு சட்டத்திருத்தத்தின் வழியாகத் தீர்வுகாண முற்படுவது அவசர அவசரமாக ரூ.1221 கோடி தாரைவார்ப்பது இந்திய ஒற்றுமைக்கு வழிவகுக்குமா?

**ஈழத் தமிழர்களுக்கு இந்தத் தேசியக் குடிமக்கள் பதி வேட்டு திட்டத்தின்படி ஏன் குடியுரிமை இன்றுவரை வழங் கப்படவில்லை? தமிழ்நாட்டுத் தமிழர்களும், ஈழத் தமிழர்களும் ஒன்றிய அரசால் தொடர்ந்து புறந்தள்ளப் படுவதுதான் இந்தியத் தேசிய ஒருமைப்பாடா?** ❖

## அனைவரும் உதவி செய்வீர்!

பேரன்புடையீர், வணக்கம்.

1993-இல் தோழர் தியாகு அவர்கள் முயற்சியால் தாய்த் தமிழ் கல்விப்பணி அறக்கட்டளை அம்பத்தூரில் தொடங்கிய தமிழ்நாட்டின் முதல் தாய்த் தமிழ்ப் பள்ளி, தன் 26-ஆம் ஆண்டு விழாவை 05.04.2019-இல் சிறப்பாகக் கொண்டாடியது.

தாய்த் தமிழ்ப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகளும், தமிழ்ச் சான்றோர்களின் வாழ்த்துரைகளும், பரிசளிப்புமாக விழா இனிதே நடைபெற்றது.

தாய்மொழிக் கல்வியை இலவயமாகப் பெருமையோடு வழங்கி வரும் எம் பள்ளி ஆண்டு விழாவிற்கு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களும், தமிழ்நாடு உணவு தானிய வியாபாரிகள் சங்கச் செயலாளர் திரு. சா. சந்திரேசன் அவர்களும், கோயம்பேடு கனி வணிகர் திரு. த. மணிவண்ணன் அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக வருகை தந்து விழாவைச் சிறப்பித்தனர். வரவேற்புரை தலைமையாசிரியர் திருவாட்டி ந. மீனா அவர்களும், நன்றியுரை பெற்றோர்-ஆசிரியர் கழகத் தலைவர் தோழர் சண்முகலட்சுமி அவர்களும் வழங்கினார்கள்.

எம் பள்ளியின் புதிய கட்டடத்தைக் கட்டி முடிக்க அனை வரும் உதவ வேண்டும் என்றும் தாய்த் தமிழ்ப் பள்ளிகளைக் காக்க தமிழ் வளர்ச்சித் துறை முன்முயற்சிகள் எடுக்க வேண்டும் என்றும் பொதுக் கோரிக்கை வைக்கப்பட்டது. தாய்த் தமிழ்ச் சிட்டுகளுக்கும், தன்னார்வத்தோடு பணி யாற்றிய பெற்றோர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

## “பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் முழக்கம்”

### நூல் வெளியீட்டு விழா



பெரம்பலூர் சின்னமணி - இராசேசுவரி திருமண மண்டபத்தில் 10-03-2019 ஞாயிறு மாலை 05.00 மணிக்கு இவ்விழா நடைபெற்றது.

ஓவியச் செம்மல் கி.முகுந்தன் தலைமை வகித்தார்

பேராசிரியர் முனைவர் சா.தங்கப்பிரகாசம் வரவேற்புரை யாற்றினார்.

பெரியாரியல் அறிஞர் வே.ஆனைமுத்து அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். தந்தை ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் டாக்டர்.கே.வரதராஜன் நூலின் முதல்படியைப் பெற்று உரையாற்றினார்.

மறுமலர்ச்சி தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆ.வந்தியத் தேவன்; தி.மு.க.கொள்கைப்பரப்புத் துணைச்செயலாளர் ச.சு.பெருநற்கிள்ளி மற்றும் கவிஞர். அக்ரி. ஆறுமுகம் பெரம்பலூர் மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் சி.தங்கராசு, செயலாளர் அண்ணாதுரை, பேராசிரியர் அம்மணி வ.சந்திரமௌலி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திருமழபாடி முனைவர்.அ.ஆறுமுகம், முனைவர் கடவூர் மணிமாறன், கரூர் தமிழன் குமாரசாமி எஸ்தர், நன்செய்ப்புகழூர் கவிஞர் அழகரசன், கவிஞர் கவிச்சிட்டு வேல் இளங்கோ, புலவர் செம்பியன், பதியம் அமைப்பு நிறுவனர் நா.சாரங்கபாணி, மரு.க.கோபால், மரு.கோசிபா, பெரியார் தொண்டர் அந்தூர் கி.இராமசாமி (அகவை 99), கவிஞர் வெண்பாவூர் சுந்தரம், கவிஞர் கீ.அ.முத்தரசன் அரும்பாவூர் இலக்கியச்சாரல் இ.தாஹீர்பாட்சா, மாவட்ட காங்கிரஸ் தலைவர் வழக்கறிஞர் தமிழ்ச்செல்வன், மாவட்ட ம.தி.மு.க தலைவர் செ.துரைராஜ், திருச்சி ந.கருணாகரன், பெரம்பலூர் மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் துரை.தாமோதரன், அரியலூர் தமிழ்க்களம் அரங்கநாடன், பெரம்பலூர் மாவட்ட மார்க்சியப் பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் செயலாளர் மா.நாராயணசாமி மற்றும் திரளான கவிஞர்கள் எழுத்தாளர்கள் பெரம்பலூர் மாவட்டம் பிற மாவட்டத் தைச் சேர்ந்த பலரும் அரங்கு நிரம்பக் கூடி யிருந்தனர். விழா பலரும் பாராட்டும் வண்ணம் சிறப்பாக நடைபெற்றது.

செய்தி : **அக்ரி.ஆறுமுகம்,** பெரம்பலூர்

# விண்வெளியில் விளம்பரப் பலகைகள்

- இராமியா

புதுப்பணக்காரர்களும், புதிதாக மதம் மாறியவர்களும் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதில் அதீத அவசரத்தையும், நிதானம் இன்மையையும் காட்டுவது இயல்பு.

இதே போல் சமதர்ம சமூகத்தில் இருந்து முதலாளித்துவ முறைக்கு மாறிய இரஷ்யர்கள் முதலாளித்துவ விளம்பர முறையில் நிதானமற்ற ஒரு புதிய உத்தியைப் புகுத்த முனைந்து இருக்கிறார்கள்.

தொடங்கு ஏவுகலன் என்ற இரஷ்ய நாட்டுத் தனியார் நிறுவனம் வணிக விளம்பரம் செய்வதற்காகச் செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவும் திட்டம் ஒன்றை வகுத்து உள்ளது. இதைப்பற்றி அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி விளாட் சிட்னி கேவ் 2021ஆம் ஆண்டுக்குள் 200 சின்னஞ் சிறிய செயற்கைக் கோள்களை விளம்பரம் செய்வதற்காக விண்ணில் ஏவத் திட்டமிட்டு இருப்பதாகத் தெரிவித்து உள்ளார். இக்கோள்கள் பூமியில் இருந்து 500 கி.மீ. தொலைவில் நிறுத்தப்படும் என்றும், இவை வணிக நிறுவனங்களின் விளம்பரப் பலகைகளாக இருக்கும் என்றும், இரவு நேரங்களில் ஒரு விளம்பரத்தை ஆறு நிமிடங்கள் வரை மிளிர வைக்கலாம் என்று திட்டமிட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதன் மூலம் விளம்பர உத்தியை விண்வெளிக்குக் கொண்டு செல்ல இரஷ்யாவின் தனியார் நிறுவனம் திட்டமிட்டு உள்ளது. இவ்வாறு விளம்பரங்களை விண்வெளிக்குக் கொண்டு செல்வதால் விளம்பரச் செலவுகள் கூடி, பண்டங்களின் விலை கடுமையாக உயரும் அபாயம் உள்ளது. இருந்தாலும் ஏற்றத் தாழ்வுகளைப் பற்றி அக்கறை கொள்ளாத முதலாளித்துவ உற்பத்தி முறையில் இவ்விலை உயர்வையும் மீறி இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும் என்று அந்நிறுவனம் எதிர்பார்க்கிறது. விண்வெளிப் பலகைத் திட்டம் செயல்பட்டால், வானம் எப்படி இருக்கும் இந்நடைமுறைகளால் மனித இனத்திற்கு மட்டும் அல்ல; எந்த உயிரினத்திற்கும் எந்தவிதமான பயனும் இல்லை. அதுமட்டும் அல்ல; பூமியின் இயற்கை வளங்கள் வீணாக உறிஞ்சப்பட்டு, புவிவெப்ப உயர்வும் சூழ்நிலைக் கேடும் அதிகரிக்கும்; இப்படிப்பட்ட விண்வெளி விளம்பரப் பலகைகள் விண்வெளி ஆய்வுக்கு இடையூறாக இருக்கும் என்றும், ஆகவே இத்திட்டத்தை அனுமதிக்கக் கூடாது என்றும் விண்வெளி வீரர்களும், அறிவியலாளர்களும் கூறி உள்ளனர்.

தனியார் நிறுவனம் ஒன்று இதுபோன்ற ஆபத்தான வழியில் அறிவியலைப் பயன்படுத்த முனைந்து உள்ள நிலையில், விண் ஆராய்ச்சி பற்றிய சட்டங்களை மறுஆய்வு செய்யவேண்டும் என்று பிரிட்டனில் உள்ள நேர்த்தும் பிரியா பல்கலைக்கழகத்தின் விண்வெளிச் சட்டப் பேராசிரியர் கிருஸ்டபர் நியூமேன் கூறி உள்ளார்.

**விண்வெளியில் விளம்பரப் பலகைகளை நிறுவுவது வீணான முயற்சி என்றும், பெரும் செலவுகளைத் தேவை இன்றிச் செய்வதாகும் என்றும், வானத்தின் இயற்கை அழகைக் கெடுத்துவிடும் என்றும் பிரிட்டிஷ் அரசின் வானவியல் கழகத்தின் துணைச்செயல் இயக்குநர் இராபர்ட்மாசே 31.1.2019 அன்று இலண்டனில் கூறினார்.**

முதலாளித்துவ சமூக அமைப்பில் அதிகாரத்தைக் கைப்பற்றவும் நிலை நிறுத்திக் கொள்ளவும் ஆசைப்படும் மனிதர்களுக்கு விண்வெளி விளம்பரப் பலகை போன்ற விபரீத எண்ணங்கள்தான் தோன்றும். அதனால் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் அதிகரிப்பதைப் பற்றியோ, இப்புவி அழிவுப் பாதையில் இட்டுச் செல்லப்படுவதைப் பற்றியோ அவர்களுக்கு அக்கறை தோன்றாது.

**அறிவியலாளர்கள் இது போன்ற எண்ணங்களைக் கடுமையாக எதிர்க்கவே செய்கின்றனர். ஆனால் அவர்களால் அரசியல் முடிவுகளை எடுக்க முடியாது.**

**ஆகவே மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அறிவியலாளர்களின் எண்ணத்தைத்தான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஆதிக்க வர்க்கத்தினருக்கு அழுத்தம் தரவேண்டும். தேவை ஏற்படின் ஆதிக்க வர்க்கத்தை முற்றிலும் ஒழித்துக் கட்டவும் தயங்கக்கூடாது.** ❖

## ஆசிரியருக்கு மடல்

பேரன்பு கொண்ட ஆசிரியப் பெருந்தகை ஆனைமுத்து ஐயா, வணக்கம்.

ஐயா அவர்கள், என் தமையன் நினைவினைப் போற்றி வெளியிடப்பட்ட 'சிந்தனையாளன்' மார்ச் 2005 இதழையும், "பெரியார் இரா" ஆங்கில இதழையும் அனுப்பி வைத்து அண்ணனின் நினைவுகளை என் உள்ளத்தில் நெகிழ்ச்சியுடன் கிளர்ந்தெழச் செய்துவிட்டீர்கள். மெத்த நன்றியுடனும், கண்களில் கண்ணீருடனும் பெற்றுக்கொண்டேன்.

என்னை சுயமரியாதை மறவர் என விளித்திருப்பது தங்களின் பெருந்தன்மையையே எனக்குச் சுட்டிக்காட்டுவதாய் அமைந்துள்ளது. நன்றி. அப்படி அழைப்பதற்கு நான் தகுதி படைத்தவன் தானா என என்னையே நான் கேட்டுக் கொள்கிறேன்.

- பேரா. **மரு. க. சோமாஸ்கந்தன்**

# எழுத்தாளர் அம்பேத்கர்

தத்துவ மேதைகளின் எழுத்துக்கள், சமூக சிந்தனையாளர்களின் படைப்புகள், சிறந்த இலக்கியங்கள், கலைப் படைப்புகள், இன்ன பிறவற்றை இளைஞர்கள் மத்தியில் விதைக்கும் வண்ணம், மேற்குறிப்பிட்ட படைப்புகளை வாசிக்கவும், அதுகுறித்து விவாதிக்கவும் வேண்டி, இந்நகரமயச் சூழலில் பல்வேறு துறைகளில் பணியாற்றும் துடிப்புமிக்க இளைஞர்கள் சிலரால், சென்னையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்புதான் ‘வாசகர் சாலை’ என்ற அமைப்பு.

பரபரப்பான சூழ்நிலையிலேயும் அமைதியாக இந்த அமைப்பு இயங்கிக் கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு ஆளுமைகளை அழைத்து சென்னையில் நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருந்தாலும் இதன் படிநிலை வளர்ச்சியாகத் தமிழர்கள் அடர்த்தியாக வாழும் மும்பை, பெங்களூர் போன்ற பிற மாநிலப் பகுதிகளிலேயும் தமிழ்நாட்டின் முக்கியமான மாவட்டத் தலைநகர்களிலேயும் முழுநாள் நிகழ்வாக நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்திக் கொண்டு வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, மேதை அம்பேத்கரின் பிறந்த நாளை ஒட்டி 20.4.19 சனிக்கிழமையன்று சென்னை, எழும்பூர், இக்சா மையத்தில் ‘எழுத்தாளர் அம்பேத்கர்’ - முழுநாள் நிகழ்வு-2 என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு வாழ்த்துரையாகவும், தொடக்கவுரையாகவும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர், தந்தை பெரியாரின் தலைமை மாணாக்கர் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்.

காலை 10 மணிக்கு தோழர் வே. ஆனைமுத்துவின் வாழ்த்துரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. நாற்காலியில் அமர்ந்தபடி தோழர் ஆனைமுத்து அவர்கள் ஒரு மணிநேரம் உரையாற்றினார்.

அம்பேத்கரின் சிந்தனைகள், அவரது எழுத்துகள் இவைகளைப் பற்றி விரிவாகப் பேசினார். அவர் தனது உரையில், அம்பேத்கரின் உதவியாளர், அவருடன் பணியாற்றியவர்கள், அவரது கொள்கைகளை முன்னெடுத்த வட நாட்டுத் தலைவர்கள், இவர்களுடனான தமது தொடர்புகள், அரசியல் அனுபவங்கள் ஆகியவைகளை விளக்கிப் பேசினார்.

அம்பேத்கர் உதவியாளர் வசந்த் மூன் அவர்களிடம் தான் நெருங்கிப் பழகியதை வைத்து, அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு தமிழில் நூலாகக் கொண்டுவரத் தான் வைத்த கோரிக்கையையும், தனஞ்செய்கீர் அவர்களால் எழுதப்பட்ட ‘அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு’ என்ற நூலைத் தமது கட்சியான மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பாகச் சிறப்பான முறையில் வெளியிட்ட முறையினையும் விளக்கிப் பேசினார்.

அந்நூலைப் பற்றிப் பேசும்போது அந்த நூலை எடுத்து உயர்த்திக்காட்டிப் பேசினார். மேலும் இந்திய அரசமைப்புச் சட்ட நூலை எடுத்துக்காட்டி, அதில் அம்




பேத்கர் குறிப்பிட்ட சில சட்டப் பிரிவுகளைப் படித்துக் காட்டி விளக்கிப் பேசினார்.

அப்போது அரங்கில் அமர்ந்திருந்த இளைஞர்கள் தோழர் ஆனைமுத்துவின் உரையினைக் கூர்ந்து கவனித்தபடி குறிப்பெடுத்துக் கொண்டனர். அய்யாவின் உரை நிறைவுற்றவுடன், பின் பல அமர்வுகளில் ‘எழுத்தாளர் அம்பேத்கர்’ நிகழ்ச்சி தொடங்கியது.

- முதல் அமர்வாக, ‘அம்பேத்கர் கொள்கைகள் - சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்’ என்ற தலைப்புகளில் தோழர் சந்துரு மாயவன் உரையாற்றினார்.

- இரண்டாவது அமர்வாக, ‘இந்திய சனநாயகமும், இரட்டை வாக்குரிமையும்’ என்ற தலைப்பில் தோழர் வினோத்குமார், தோழர் பா.ம. மகிழ்நன் உரையாற்றினர்.

- மூன்றாவது அமர்வாக, ‘அம்பேத்கர் - நவீன இந்தியாவின் திசைகாட்டி’ என்ற தலைப்பில் தோழர் சுந்தரவள்ளி, தோழர் தீபலட்சுமி, தோழர் தாமரைக் கொடி உரையாற்றினர்.

- நான்காவது அமர்வாக, ‘அம்பேத்கரும் சோசலிசமும்’ என்ற தலைப்பில் தோழர் சந்திரமோகன், தோழர் ம. செந்தில் உரையாற்றினர்.

- ஐந்தாவது அமர்வாக, ‘அரசமைப்பும், அண்ணல் அம்பேத்கரும்’ என்ற தலைப்பில் ‘ஒடுக்கப்பட்டோர் உரிமை’ என்கிற பிரிவில் தோழர் கொளத்தூர் மணி அவர்களும், ‘பெண்கள் உரிமை’ என்ற பிரிவில் சௌமியா ராமன் அவர்களும் உரையாற்றினர்.

இந்நிகழ்வின் ஒவ்வொரு அமர்வின் நிறைவின் போதும் உரையாற்றியோருடன் நிகழ்ச்சியில் பங்கேற்றார் கேள்வி-பதில் நிகழ்ச்சியும் தொடர்ந்தது. கேள்வி-பதில் நிகழ்ச்சியில் பங்கேற்ற புதுச்சேரி மாநில மா.பெ.பொ.க. செயலாளர் இரா. திருநாவுக்கரசு தங்கள் கட்சிக் கொள்கையில், அம்பேத்கர் குறித்த பார்வையை கருத்துரையாக முன்வைத்துக் கொண்டே வந்தார்.

இந்நிகழ்ச்சி பற்றி புதுச்சேரியிலிருந்து இரா. திருநாவுக்கரசு, இரா.இரமணன், சீனு.சந்திரசேகரன், துளசிதரன் மற்றும் வேலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் சா. குப்பன் ஆகியோர் பங்கேற்றனர்.

**- இரா. திருநாவுக்கரசு**

# பாவலர் தமிழேந்திக்கு – அஞ்சலி

- கவிக்கனல் கவியன்பன்

பனிப்பூவாம் வாழ்க்கையிலே
புயலாய் வந்தாய்
பகுத்தறிவே நம்வாழ்க்கைப்
பாடம் என்றாய்
தனித்தனியாய்ப் பிரித்தாளும்
சூழ்ச்சி தன்னை
தன்மானப் பெரியாரின்
கொள்கை பற்றி
கனன்றெழுந்த நெருப்பாக
எரித்து வந்தாய்.
கண்ணீரில் எமையெல்லாம்
விட்டுச் சென்றாய்.
அனல்கக்கும் பேச்செல்லாம்
தொலைத்த தெங்கே?
ஆறாக எம்கண்ணீர்
வடிப்ப தெங்கே?

என்னகவி இத்தனைநாள்
எங்கி ருந்தாய்?
எழுச்சியினை ஊட்டுகின்ற(து)
உனது பாடல்.
என்னுடனே இனிநட,வா!
உனது ஆற்றல்
எள்நுழையும் இடமெல்லாம்
எடுத்துச் சொல்வேன்.
என்றென்னை உச்சிமோந்த
எழுச்சிப் பாட்டே!
இமயத்தைத் தொட்டுவந்த
கவிதைச் சிட்டே!
இன்றெம்மை விட்டுவிட்டுச்
சென்ற தெங்கே?
இறுதிவரை சுமந்ததமிழ்
சுருண்ட தெங்கே?

சிந்தனையாளன் இதழின்
இறுதிப் பக்கம்
சீரிழந்து வெற்றிடமாய்
ஆகிப் போச்சே!
பந்தாகத் துள்ளுமிசைச்
சந்தப் பாடல்
பந்தாக்கள் இல்லாத
எளிமைத் தோற்றம்
செந்தணலின் வீச்சாக
உணர்ச்சிப் பேச்சு
செந்தமிழின் நிமிர்வாக
விறைத்த மீசை
வந்தாரை அன்போடு
அழைத்த நாக்கு
வற்றாத கவிநதியே!
வறண்ட தெங்கே?

பெரியாரின் கொள்கைகளை
நெஞ்சில் ஏற்று
பெற்றிமிகு மறவனாகச்
சுற்றி வந்தாய்.
சிறியார்க்கும் மதிப்பளித்து
சிகரம் ஏற்றும்
சீரறிவைப் பகுத்தறிவாய்
ஏற்று வாழ்ந்தாய்.
புரியாரைத் தோலுரித்தாய்;
பக்தி என்னும்
புதைசேற்றில் வீழ்ந்தாரைக்
கரையில் சேர்த்தாய்.
தறியாடும் நாடாவே!
அறிவுச் சீலை
நெய்துதந்த நெசவாளா!
சென்ற தெங்கே?



பள்ளியிறுதி வரை, என் வகுப்புத் தோழர்

# அறிஞர் சிலம்பொலி சு. செல்லப்பன் மறைந்தார்!

‘சிலம்பொலி செல்லப்பன்’ என்று பெயர் பெற்ற அறிஞர் சு. செல்லப்பன் அவர்கள் 6.4.2019 சனி அன்று மறைவுற்றார் என்பதை அறிந்து அதிர்ச்சியடைந்தேன்.

அவரும் நானும் 8, 9, 10, 11 ஆகிய பள்ளி இறுதி வகுப்புகளில் 1942 முதல் 1946 ஏப்ரல் வரை, சேலம் மாவட்டம், பரமத்தி வேலூர் கந்தசாமிக் கண்டர் உயர்நிலைப் பள்ளியில் 4 ஆண்டுகள் வகுப்புத் தோழர்களாகப் படித்தோம்.

எங்களுக்கு நல்ல, தூய தமிழைக் கற்றுத் தந்தவர் எங்கள் தமிழாசிரியர் கீழமாளிகை தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார் ஆவார். அவர் 1945 வரையில் பழுத்த சைவராக இருந்தவர். அப்போது அடிக்கடி இலால்குடி அ.சரவண முதலியாரை அழைத்து சேக்கிழாரைப் பற்றி இனிய தமிழில் உரையாற்றச் செய்வார்.

வை. பொன்னம்பலனார் 30.9.1945 திருச்சி திராவிடர் கழக மாநாட்டுக்குப் பிறகு, நல்ல நாத்திகராக விளங்கினார். அப்போது பாவேந்தர் பாரதிதாசன், ஞா. தேவநேயப் பாவாணர், சேலம் உலக ஊழியர் ஆகிய பெருமக்களை அழைத்து திராவிடம், ஆரியம் பற்றியும் திராவிடத்தின் மேன்மை, ஆரியத்தின் இழிமை ஆகியவை பற்றியும் துல்லியமாகப் பேசச் செய்வார்,

கந்தசாமிக் கண்டர் உயர்நிலைப் பள்ளியில் மாணவர் மன்றத்தில் மாதந்தோறும் மாணவர் பேசும் கூட்டம் நடைபெறும், நானும், சு.செல்லப்பன், ச.செவ்வண்ணன், து.மணிமொழி, கருப்பண்ணன் ஆகிய பல மாணவர்கள் பேசிப் பழகினோம்.

சு.செல்லப்பன் அவர்கள் உயர் கல்வி பெற்று, தமிழக அரசில் பல பொறுப்புகளை வகித்தார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இயக்குநராகவும், பதிவாளராகவும் பின்னர் தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநராகவும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் பல பொறுப்புகளை வகித்தார்,

அவர் சென்னையைத் தலைமையகமாகக் கொண்ட பிறகு, நான் அவரை திருவல்லிக்கேணியில் எங்களுடைய நல்லாசிரியராக 1942-46-இல் வேலூரில் பணியாற்றிய, ஏ.இ.கணபதி அவர்கள் வீட்டில் எதிர்பாராமல் சந்தித்தேன். கணபதி அவர்கள் 8, 9, 10, 11 ஆகிய வகுப்புகளில் எங்களுக்குக் கணக்கும், ஆங்கிலமும் கற்றுத் தந்த பேராசான். அவர் மறைவையொட்டி அவருடைய பழைய மாணவர்களாகிய நாங்கள் இருவரும் கணபதியின் இறுதிக் கடனில் பங்கேற்று உரையாற்றினோம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய மூத்த மகன் தொல்காப்பியன் மறைந்துவிட்டார் என்ற செய்தியறிந்து வருந்தினேன். எதிர்பாராத விதமாக அந்த நேரம் நாமக்கல்லுக்கு இராமசாமி அவர்கள் நூலகத்துக்குச் சென்று படித்துக் கொண்டிருந்தேன். தம் சொந்த ஊரான சிவியாம் பாளையத்தில் செல்லப்பன் தங்கியிருக்கிறார் என்று அறிந்து, நானும் இராமசாமி அவர்களும் மகிழுந்தில் சிவியாம்பாளையத்துக்குச் சென்று செல்லப்பன் அடைந்த துயரத்தைப் பங்கு கொண்டோம்.

**நான்கு ஆண்டுகள் ஒரே வகுப்பில், ஒரே விசுப் பலகையில் அமர்ந்து பாடம் கேட்ட நாள்களும், ஒரே இடத்தில் இலவசமாக உண்டு, இலவசமாகத் தங்கி நான் செல்லப்பனோடு இளமைக் காலத்தைக் கழித்த நாள்களும் 7.4.2019 அன்று முழுவதும் என் மனக் கண்முன் நிழலாடின.**

என்னைவிட மூன்று ஆண்டுகள் இளையவரான செல்லப்பன், தம் 91-ஆம் அகவையில் மறைவுற்றது தமிழுக்கும், தமிழ் இலக்கிய உலகுக்கும் மாபெரும் இழப்பாகும்.

**வாழ்க அறிஞர் சிலம்பொலி சு. செல்லப்பன் புகழ்!**

ஆவடியில்

## பாவேந்தர் விழா - பாவரங்கம், கருத்தரங்கம்



தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் சார்பில் ஆவடி முத்தமிழ் மன்றத்தில் 27.9.2019 காரி (சனி)க் கிழமை மாலை 4.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை பாவேந்தர் விழா - பாவரங்கமும், கருத்தரங்கமும் நடைபெற்றது. தோழர் த. மணிசேகரன் தலைமை தாங்கினார்.

பாவேந்தரும் தமிழும் என்ற தலைப்பில் மறை. தி. தாயுமானவன், வா.சுப. மாணிக்கனாரும் தமிழ்வழிக் கல்வியும் என்ற தலைப்பில் புலவர் செந்தமிழ்வாணன், பரிமேலழகரும் - நாகசாமியும் திருக்குறளும் என்ற தலைப்பில் இலக்குவனார் திருவள்ளுவன், பெரியாரும் திருக்குறளும் என்ற தலைப்பில் வாலாசா வல்லவன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

தோழர்கள் தமிழ்நேயன், அ.சி. சின்னப்பாத் தமிழர், ஆவடி நாகராசு, புலவர் சோம. பொன்னுசாமி, முல்லைத் தமிழன் ஆகியோர் உரையாற்றினர். அழகுஒளி நன்றியுரையுடன் கருத்தரங்கம் நிறைவடைந்தது.



# அம்மையார் சுசீலா ஆனைமுத்து மறைவும் - இறுதி நிகழ்வும்

**தாம்பரம் சுப்பிரமணி**

அய்யா ஆனைமுத்துவின் துணைவியார் சுசிலா அம்மாள் கடந்த ஏப்ரல் 30ந் தேதி மாலை 7.00 அளவில் சென்னை ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் காலமானார். மருத்துவமனையில் அய்யாவின் மகன்கள், மருமகள்கள் ஆனை. பன்னீர் செல்வம், வீரமணி, அருள்மொழி, கோவேந்தன், விசயலட்சுமி வெற்றி, மலர்வீரமணி, தாம்பரம் சுப்பிரமணி, மகாதேவன், ஓட்டுநர் செல்வம் ஆகியோர் உடன் இருந்தனர்.

அம்மா சுசீலா கடந்த 28.4.2019 அன்று, சனிக்கிழமை உடல்நலக் குறைவால் தாம்பரம் இந்து மிஷன் மருத்துவ மனையில் ஆனை. பன்னீர்செல்வம், கோவேந்தன் மருத்துவமனையில் சேர்த்தார்கள். கடந்த சில மாதங் களாக கால் வலியுடன் இருந்ததை அடுத்து அவருக்குத் திடீரென மூச்சுவிடுவதில் சிக்கல் ஏற்பட, சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனையில் தொடர் சிகிச்சையால் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. மருத்துவமனையில் பார்க்க வந்த அனைவரிடமும் நன்றாகப் பேசி வந்தார்.

அம்மாவிற்கு நுரையீரலில் பாதிப்பு இருப்பதாகவும், நுரையீரலுக்கு செல்லும் 'வால்வு' பழுதுபட்டு இருப்ப தாக அதற்கு உரிய சிகிச்சை செய்ய வேண்டும் எனவும் மருத்துவர்கள் ஆலோசனை கூறினார்கள். அதற்குக் குறைந்தது பதினெட்டு இலட்சம் செலவாகும் முதற்கட்ட மாக 'நுரையீரல் சளி'யை சரி செய்யவேண்டும் என அதற்குரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் 30.4.2019 செவ்வாய்க்கிழமை மதியம் திடீர் என அம்மா வின் உடல் நிலை சீர்கெட்டது. உடனடியாக உயர் மருத்துவத்திற்கு அன்று மதியமே சென்னை ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அம்மாவை ஆனை. பன்னீர் செல்வம் அழைத்துச் சென்றார்.

சென்னை மருத்துவமனையில் அம்மாவிற்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை பலன் அளிக்காத நிலையில் 30.4.2019 அன்று மாலை 7.00 மணி அளவில் சுசீலா அம்மாள் மறைந்தார்.

அம்மாவின் உடல்நிலை மோசமான நிலையில் தகவல் அறிந்து அய்யா ஆனைமுத்து, தொல்காப்பியன் அம்பத்தூர் அறக்கட்டளையில் இருந்து விரைந்து வந்தனர். தன் மனைவி மறைவுற்றார் என அறிய வந்து நிலைகுலைந்துதான் போனார். ஆனால் நிலைப் படுத்திக் கொண்டு மகன் ஆனை.பன்னீர்செல்வத்தோடு அம்மாவின் உடலை தாம்பரம் இல்லத்திற்கு எடுத்துச் செல்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்தார். அய்யா ஆனைமுத்துவிற்கு மருத்துவமனையில் அ.மதிவாணன், ராணி மதிவாணன் உரிய உதவிகளைச் செய்தனர்.

அம்மாவின் உடல் அரசு மருத்துவர்களின் உதவி யோடு தாம்பரம் இரும்புலியூர் தேசிய நெடுஞ்சாலை யில் உள்ள இல்லத்தில் இரவு 11 மணிக்கு கொண்டு செல்லப்பட்டது. முன்பாகவே இல்லத்தில் துணிப்பந்தல் கள், நாற்காலிகள், உயர் மின்விளக்குகள் என தோழர்கள் கு.கிருட்டிணமூர்த்தி, தாம்பரம் சென்ட்ரிங் கோவிந்தன், சிந்தனையாளன் ப.வடிவேல், ஆப்பி தேநீர் கடை உரி மையாளர் சந்திரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

அம்மாவின் உடல் அவருடைய இல்லத்தில் தயார் நிலையில் இருந்த உடல் வைக்கும் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டது.

அன்று நள்ளிரவே தகவல் அறிந்த தாம்பரம் தோழர்கள் ஆனை.பன்னீர்செல்வத்தின் நண்பர்கள் இரும்புலியூர் மக்கள் என ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

கடந்த 1992 ஆண்டு முதல் தாம்பரம் இரும் புலியூர் இல்லத்தில் சுசீலா அம்மா ஏராளமான நாய்கள், பூனைகள் புடைசூழ வாழ்ந்து வந்தார். அம்மாவிற்கு பூனைகள், நாய்கள் மீது அளவுகடந்த பாசம்.

கால்வலியால் அம்மா துன்புற்றபோது மருத்துவர்கள் வீட்டின் மாடிப்படி ஏறக்கூடாது என்று சொல்லியபோது அதைப் பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை.

அம்மா, கட்சிக்காரர்கள் மத்தியில் உரிமையாய் பேசக் கூடியவர், அய்யாவின் உழைப்புக்கு மிகப்பெரிய அடித்தளமாக விளங்கியவர். அய்யா மீதும் மகன் மீதும் அவ்வப்போது கோபப்பட்டாலும் எப்போதும் அளவு கடந்து அன்பு பாராட்டியவர்.

இளமைப் பருவத்தில் மிக பெரும் செல்வச் செழிப்பில் வாழ்ந்தவர்.

அய்யா ஆனைமுத்துவை மணந்தபிறகு பெரியார் நெறியில் எளிய வாழ்வை ஏற்றுக் கொண்டார்.

பொதுத்தொண்டிற்கு பெரியார் ஈ.வெ.ரா. போன்று அய்யா ஆனைமுத்து உழைப்பதற்கு ஏற்ற வகையில் வாழ்க்கையின் ஆசாபாசங்களை முற்றிலும் கைவிட்டவர்.

தாம்பரம் இல்லத்தில் மே முதல்நாள் காலை முதல் இரும்புலியூர் மக்கள், தாம்பரம் மக்கள், ஆனை. பன்னீர்செல்வத்தின் நண்பர்கள், ம.பெ.பொ.க. கட்சித் தோழர்கள் பல்வேறு கட்சித் தலைவர்கள், தோழர்கள் என அஞ்சலி செலுத்தினர்.

மதியம் 2.30 மணி அளவில் அம்மா சுசீலாவிற்கு அஞ்சலிக் கூட்டம் தொடங்கப்பட்டது. கூட்டத்திற்கு மா.பெ.பொ.க. சென்னை மாவட்டச் செயலாளர் வல்லவன் தலைமை தாங்கி கூட்டத்தை நடத்தினார்.

கூட்டம் மாலை 5.30 மணிவரை தொடர்ந்த நிலையில், 6.00 மணிஅளவில் அம்மா உடல் சென்னை போரூர் ராமச்சந்திர மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி மாணவர்கள் ஆய்வுக்காக உடல் கொடை வழங்க அம்மா திட்டமிட்டு எழுதி தந்த உறுதிமொழிக்கு ஏற்ப உடல் அளிக்கப்பட்டது.

# ஓயுமா இந்த அவலங்கள்?

அன்றந்தச் சிற்றூரின் திருவி ழாவை
அமர்க்களமாய் மக்களெலாம் நடத்தி னார்கள்!
தன்மனைவி, தன் மகளை நேர்த்திக் காகத்
தவறாமல் அழைத்து வந்தார்! ஊர்ப்பூசாரி
தன்கையின் சாட்டையினால் ஓயு மட்டும்
தளிர்போன்ற மகளிரினை அடித்தார்; அன்னோர்
பொன்னான திருமேனி புண்ணாய் ஆகி,
பூங்குருதி வடித்ததெலாம் மறைத்தார்; போனார்.

இன்னோர் ஊர் திருவிழா நடந்தபோது,
எண்ணரிய கோழிகளை ஆட்டையெல்லாம்
புன்மனத்தார் கொண்டுவந்து பலியாய் இட்டார்!
பூவையரே வரிசைகட்டி அமர்ந்தி ருந்தார்;
கன்னெஞ்சப் பூசாரி அவர்கொ ணர்ந்த
கடினமுள்ள தேங்காயை அந்தப் பெண்டிர்
மென்தலையில் மிகஓங்கி உடைத்தார்; பாவம்.
வேதனையை வெளிப்படுத்தல் 'தோஷம்' என்றார்!

மற்றும்ஓர் ஊர்மக்கள் தம்மூர் சார்பில்
மகத்தான திருவிழா நடத்தி னார்கள்;
சுற்றமுடன் பிராமணர்கள் உண்டு சென்ற
தூய்மையிலா எச்சிலைமேல் புரண்டு, பக்திப்
பற்றினையே வெளிப்படுத்த முனைந்தார் என்றால்,
பாழான காட்சியெலாம் சரியா? ஈங்கே
முற்போக்குப் பெரியாரும் அண்ணா போன்றோர்
மொழிந்ததெலாம் விழலுக்கே இறைத்த நீரா?

- கவிவேந்தர் **கா. வேழவேந்தன்**

# வேலூரில் டாக்டர் அம்பேத்கர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா மற்றும் சமூகநீதி எழுத்தாளர் க. முகிலனுக்குப் பாராட்டு விழா



வேலூர் மாவட்ட மார்க்சிய-பெரியாரிய-அம்பேத்கரியச் சிந்தனையாளர் மன்றத்தின் சார்பில், புரட்சியாளர் அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா, மற்றும் சமூகநீதி எழுத்தாளர் சோளிங்கபுரம் க. முகிலன் அவர்களுக்குப் பாராட்டு விழா நிகழ்ச்சி 27.4.2019 சனிக்கிழமை மாலை 5 மணிமுதல் இரவு 8.30 மணிவரையில் வேலூர் நகர அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை முழுப் பொறுப்பேற்று நடத்திய பாவேந்தர் நெறிப் பாவலர் அய்.து. பாபு மாசிலாமணி இந்நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றார். உதவும் உள்ளங்கள் தலைவர் இரா.சந்திரசேகரன் அறிமுக உரையும் வரவேற்புரையும் நிகழ்த்தினார்.

முனைவர் ம. நாராயணன், பேராசிரியர் இரா. நடராசன், இந்தியக் குடியரசுக் கட்சித் தோழர் க. இராமஜெயம், சா. குப்பன், பொ. காளியப்பன் ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அய்.து. பாபு மாசிலாமணி, க.முகிலனுக்குச் சால்வை அணிவித்து, பாராட்டு மடல் படித்து, மோதிரம் அணிவித்து முகிலனின் எழுத்துப் பணியைப் பாராட்டிப் பேசினார். வேலூர், வாலாசாப்பேட்டை, வாணியம்பாடி, சோளிங்கபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து வந்திருந்த மா.பெ.பொ.க. தோழர்கள் க. முகிலனுக்கு ஆடை அணிவித்துப் பாராட்டுச் செய்தனர். க. முகிலன் ஏற்புரை வழங்கினார்.

கவிஞரின் கடைசிப் பா...

# தேர்தல் முடிவுகள்

நாம்
அட்டூழியங்களை
அனுபவித்து
அல்லாடுகிறோம்

நரவேட்டை
நரேந்திர மோடி
தேர்தல் நடத்தி
முடித்துவிட்டார்

ஆர்.எஸ்.எஸ்.-யின்
ஆட்டம் ஒருபுறம்
அமிஷாவின் கூத்து
மறுபுறம்

காவிப் பாசிச
பயங்கரவாதம்
கார்ப்பரேட்டு
நிதிமூலதனக் கொள்ளை

அறுபது கோடி
மக்களின் சொத்து
வெறும் ஒன்பது பேரிடம்!
இதில் ரிலையன்சு ஜியோ
கன்னக் கோலர்களின்
கபட நாடகம்.

ஆயிரக் கணக்கான
மக்களின்
வியர்வையில் கலந்து
தூத்துக்குடி
அனில் அகர்வால்
ஸ்டெர் லைட்டின்

பதிமூன்று பேர்
பிணவாடை

நெடுவாசலின்
ஐட்ரோ கார்பன் நெடி
பன்சாரே
தபோல்கர்
கல்புர்கி
கௌரி லங்கேஷ்
துப்பாக்கிச் சூடு

அனிதா, வெமுலா
அநியாயத் தற்கொலை
சிறுமி ஆஷிஃபாவைக்
குதறிய
ஆர்.எஸ்.எஸ்.
தேச பக்தி
அக்லக் படுகொலை

இடையில்
பணமதிப்பிழப்பு
ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு
தம்பட்டம்!
தாழ்த்தப்பட்டோர்
பெண்கள்,
இசுலாமியர்
பெண்கள் மீது
இந்து மதவெறி
கும்பலை ஏவுதல்

மாட்டுகறி
தடை சட்டம்
குஜராத் நாறுகிறது
இந்நேரம்
தேர்தல் முடிவுகள்
தெரிந்திருக்கும்
நம் முடிவுகள்
தெரிந்திருக்குமா?

**- தமிழேந்தி**

# ஆ.சுசீலா அம்மையார் மறைந்தார்

**மா.பெ.பொ.க.** பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் துணைவி சுசீலா அம்மையார் 30.4.2019 செவ்வாய் இரவு 7.10 மணிக்கு சென்னை அரசு பொதுமருத்துவமனையில் மறைவுற்றார். அம்மையாரின் உடல் தாம்பரம் இரும் புலியூரில் அவரது இல்லத்தில் பொதுமக்கள் பார்வைக் காக வைக்கப்பட்டது.

01.05.2019 புதன்கிழமை காலை முதலே மா.பெ.பொ.க. வின் தோழர்களும் தோழமை அமைப்பினரும் வந்து அம்மையாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் மருத்துவர் ச.இராமதாசு, வே.ஆனைமுத்து அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இரங்கல் தெரிவித்தார்.

புதுவை முன்னாள் முதல்வர் ந.ரங்கசாமி, தாம்பரம் தி.மு.க.சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தமிழக முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் பொற்கோ, விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் முனைவர் தொல் திருமாவளவன், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமை நிலையச் செயலாளர் இராம.முத்துக்குமார், சமூக நீதி வழக்குரைஞர் அணித்தலைவர் பாலு, கவிஞர் அறிவுமதி, பேறறிவாளனின் தாயார் அற்புதம்மாள், சுசீலா அவர்களின் தம்பி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அ.கோ.சம்பத் ஆதிமூலம் இ.ஆ.ப.(ஓய்வு) தகடூர் சம்பத், மு.நகரமன்றத் தலைவர் வி.பி.கோபிநாத் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை க.இராசேந்திரன் அமைப்புத் தோழர்களுடன் வந்து இரங்கலில் கலந்து கொண்டார். தந்தை பெரி யார் திராவிடர் கழகத்தின் தலைவர் முன்னாள் அமைச்சர் ஆனூர் ஜெகதீசன், தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன், தனவேல் இ.ஆ.ப. ஓய்வு, மே.பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, தமிழக மக்கள் முன்னணி சார்பில் பொழிலன், டாக்டர் க.மகுடமுடி, சாமி அறவாணன், மண்டேலா, புதுதில்லி தமிழரசு, வழக்குரைஞர் கயல் பெண்கள் செயற்களம், முனைவர் கு.அரசேந்திரன், தமிழ்மகன் ஆனந்தவிகடன் ஆசிரியர்குழு, திரைப்பட இயக்குநர் வ.கௌதமன், புதுவை து.சடகோபன், மணிவண்ணன், தாம்பரம் ஜான் எட்வர்ட் குருசேவ் அ.தி.மு.க., சோதிடகுமார் நகர மன்றச் உறுப்பினர், பாவாடை கிருஷ்ணமூர்த்தி தினகரன் அ.தி.மு.க., காமராஜ் தி.மு.க. பார்த்தசாரதி தெ.செ.மா. செயாளர் மா.செழியன், தே.மு.தி.க.க. வே.ராதாகிருஷ்ணன், சி.பி.ஐ.எம். செ.இரவிச்சந்திரன், வாலிகண்டபுரம், நுழை புலம் சிவசங்கர் அச்சமில்லை இறைவன், மருது பாண்டியன் சோசலிசமையம், முற்போக்கு சமூக நீதிப் பேரவையின் தலைவர் க.கோதண்டன், டாக்டர் விமுனா மூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மா.பெ. பொ.க. சார்பில் எல்லா மாவட்டங்களிலிருந்தும் பலரும் கலந்து கொண்டனர்.

இரங்கல் நிகழ்ச்சியில் நேரமின்மை காரணமாக ஒரு மட்டுமே இரங்கலுரை ஆற்றினர். தோழர்கள் க.முகிலன், சி.பெரியசாமி, துரை.சித்தார்த்தன், சா.குப்பன், நா.மதனகவி, பா.மோகன், மோ.சி.சங்கர், ந.கருணாகரன், கோவி ராமலிங்கம், இரா.கலியமூர்த்தி, இரா.கலிய பெருமாள், அறிவழகன், சி.நடராசன், சே.ஆனையப்பன், க.பழனி, இரா.பச்சமலை, இரா.திருநாவுக்கரசு, சீனு தமிழ்மணி, தமிழ்நெஞ்சன், கி.சேதுராமன், ஆர்.ராஜ கோபால், சூரியன் தே.கோகுலன், பாலாஜி, பல்லாவரம் பொறியாளர் வ.அருவி, பொறியாளர் கா.பிரகாஷ், ரவி, காஞ்சனா ரவி, கஸ்தூரி சுப்பிரமணி, கிருஷ்ணமூர்த்தி, ராதா கிருஷ்ணமூர்த்தி, அன்பரசன், எழில்அரசன், சுகுணா வடிவேல், கரிபால்டி, சி.மாசினி, மருத்துவர் வ.அரிராஜ், காங்கிரஸ் செந்தில்குமார், இரா.சுந்தர மூர்த்தி, மார்கெட் பாலு, ம.தி.மு.க. மணி வண்ணன், ஊரப்பாக்கம் குடிஅரசு, நிலவு, கெங்கு முனுசாமி, தேவா ஆப்செட் தேவராஜ், முருகவேல், ஆவடி நாகராஜ், சாந்தி நாகராஜ், மக்கள்தாசன், சீனு தங்கராசு, ராஜலட்சுமி, சென்ட்ரிங் தட்சிணாமூர்த்தி, மறைமலைநகர் அருள் ஒளி, பிச்சைமுத்து, அழகு.சமத்துவமணி புலவர் இரத்தின வேலன், காஞ்சி அமுதன், ஓ.என்.சிஸ். குமார், மீனாட்சி, சோலை மாசிலாபாரி, புதுவை நடராஜன், முகவை சம்பத்து, கு.பாலகிருட்டிணன், (சி.பி.எம்), பொ.சுப்பிரமணி, மா.முருகேசன், சி.இரா.இளங்கோவன், மா.அண்ணா துரை (பொதிகை செய்தித்துறை இயக்குநர்) கோ.இள வழகன், வீ.தென் மொழி (மாவட்ட நீதிபதி), க.இராமசாமி, ந.சீனிவாசன், அறிவுக்கடல், க.அறிவொளி (பள்ளிகல்வித் தேர்வு மைய இயக்குநர்) ப.இராமசாமி, இரா.மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர். வாலாசா வல்லவன் ஒருங்கிணைத்தார்.

தாம்பரம் சுப்பிரமணி, ப.வடிவேலு, கிருஷ்ணமூர்த்தி, மணிவண்ணன், ஆ.முத்தமிழ்ச்செல்வன், சுவரொட்டி அச்சடித்தல் மேடை அமைப்பு ஒலிஒளி அமைப்பு ஏற் பாடுகளைச் செய்தனர்.

இரங்கல் நிகழ்ச்சி முடிவுற்றதும், சுசீலா அம்மை யாரில் உடல் தோழர் ஆனைமுத்துவின் அம்மையாரின் மகன்கள், ஆனை.பன்னீர்செல்வம், ஆ.வெற்றி, ஆ.வீரமணி, ஆ.கோவேந்தன், மகள்கள் தமிழ்ச்செல்வி, அருள் மொழி ஆகியோர் முன்னிலையில் இராமச்சந்திரா மருத்துவமனைக்கு உடல் கொடையாகக் கொடுக்கப் பட்டது. ❖

# மாம்பலம் ஆ.சந்திரசேகரின் 65ஆம் பிறந்த நாளில்
## 12 தமிழ் அறிஞர்கள் சிறப்பிக்கப்பட்டனர்




கட்டடக் கட்டுமானத் தொழில் முனைவோராகவும் தமிழ் இலக்கிய வளர்ச்சிப் புரவலராகவும் விளங்குகின்ற மாம்பலம் ஆ.சந்திரசேகரின் 65ஆம் பிறந்த நாள் மகிழ்வாக, அனைத் திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் உலகச் சான்றோர் சங்கமும் இணைந்து, 12 தமிழறிஞர்களுக்கு விருதும் பண முடிப்பும் வழங்கிச் சிறப்பித்தது. இதற்கான நிகழ்ச்சி சென்னை மாம்பலத்தில் சந்திரசேகர் திருமண மண்டபத்தில் 20.4.2019 சனிக்கிழமை மாலை நடைபெற்றது. முனைவர் கோ. பெரியண்ணன் தலைமையில் திருவண்ணாமலை ந. சண்முகம் வரவேற்புரையுடன் நிகழ்ச்சி திட்டமிட்டவாறு மாலை 5.30 மணிக்குத் தொடங்கியது. தமிழறிஞர்களை ஒவ்வொரு வராக மேடைக்கு அழைத்து சிறப்பு இருக்கையில் அமரச் செய்து மாலை சால்வைகள் அணிவித்து பணமுடிப்புடன் அவரவர்க்கான தகுதியுரை படித்து அளிக்கப்பட்டது.

தமிழறிஞர்கள் இரா.மணி, டாக்டர் எஸ்.ஆர். இரவிச்சந்திரன், டாக்டர் பாஸ்கரன் செயராமன், சோலை தமிழினியன், எழுத்தாளர் பிரியசகி, டாக்டர் ம. வான்மதி, கிரிஜா ராகவன், கவிஞர் உதயம்ராம், தஞ்சை கூத்தரசன் ஆகிய 9 பேருக்கு ஆளுக்குப் பத்தாயிரம் ரூபாயும் கவிஞர் பொன்னடியான், முனைவர் வா.மு. சேதுராமன், வே. ஆனைமுத்து ஆகிய மூவருக்கு ஆளுக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாயும் பண முடிப்பு வழங்கப்பட்டது.

விருது பெற்றோரைப் பாராட்டியும் வாழ்த்தியும் திரைப்பட இயக்குநரும் தயாரிப்பாளருமான எஸ்.பி. முத்துராமன் சிறப்புரை நிகழ்த்தினார். வே. ஆனைமுத்து, வா.மு.சேதுராமன், கவிஞர் பொன்னடியான் ஆகியோரும் உரையாற்றினர். மாம்பலம் ஆ.சந்திரசேகர் நிகழ்ச்சியை விவரித்து உரையாற்றி னார். முனைவர் பெ.கி. பிரபாகரன் நன்றி கூறிட, அனை வருக்கும் விருந்து அளிக்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவுற்றது.

செய்தி : **கலசம்**

# புகைப்படக் கலைஞர் ஆர்.கே.சுந்தர் மகள் திருமணம்

மா.பெ.பொ.கட்சியின் ஆர்வலர் தாம்பரம் புகைப்படக் கலைஞர் ஆர்.கே.சுந்தர் - எம். செல்வராணி இணையரின் மகள் சு. கண்மணிக்கும், செய்யூர் வட்டம், விளம்பூர் கிராமம், அ. வேதகிரி - எம்.டி.சி. சசிகலா இணையரின் மகன் வே. பாலாஜிக்கும் 18.4.2019 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் தாம்பரம் கோன் கிருஷ்ணா ரெட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

திருமணத்திற்கு மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர், சிந்தனையாளன் ஆசிரியர் வே. ஆனைமுத்து (வயது 94) நேரில் சென்று வாழ்த்தினார். திருமணத்திற்கு மேனாள் மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, நாடக ஆசிரியர் பூவை மணி, மக்கள் மாமன்றம் ஆனை. பன்னீர்செல்வம், தாம்பரம் சுப்பிரமணி, ஆல்மைட்டி கஸ்தூரி சுப்பிரமணி, உழவர் மகன் ப.வடிவேலு, சூரியன் புரமோட்டர் காஞ்சனா ரவி, தே.கோகுலன், சுமதி கோகுலன், பாலாஜி, ஜெய லட்சுமி பாலாஜி, கோவை மாசிலா பாரி, வி. ராஜகோபால் மற்றும் பலர் விழாவில் கலந்த கொண்டு வாழ்த்தினர்.

# எழுச்சிப் பாவலர் தமிழேந்தியை என்றென்றும் நினைவேந்துவோம்!

- சா.குப்பன்

கவிஞர் சோ.சு.யுவராசன் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல் அடிகளை உணர்ச்சி பீறிட முழக்குவதைக் கேட்டு, அந்த வரிகளின் கருத்துகளில் ஒன்றி-திளைத்துப் போவேன். ஏனெனில் நான் பெரியார் கொள்கைளால் ஈர்க்கப்படவும் தமிழின்பால் பற்று கொண்டிடவும் காரணமே பாரதி தாசனின் செறிந்த கருத்தமைந்த பாக்கள்தாம்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் தலைமையில், 1972இல் ஆர்க்காட்டில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் அரக்கோணம் தோழர் சோ.சு.யுவராசனை வேலூர் தோழர் து.அரங்கநாதன் அறிமுகப்படுத்தினார். பெரியார் சமவுரிமைக் கழகம் தொடங்கப்பட்ட பின் எங்கள் தோழமை தொடர பற்பல வாய்ப்புகள் அமைந்தன. 1980இல் பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா, பெரியார் சமவுரிமைக் கழகத்தின் சார்பில் வேலூர் அண்ணா கலையரங்கத்தில் மூன்று நாள்கள் நடந்தன. வேலூர் தோழர் நா.ப.செந்தமிழ்க்கோ முன் முயற்சியில் எடுக்கப்பட்ட அந்த விழாக் குழுவிற்கு வேலூர் வழக்குரைஞர் தெ.சமரசம் தலைவர்; தோழர் சோ.சு.யுவராசனும் நானும் (சா.குப்பன்) இரு செயலாளர்கள்; வேலூர் தோழர் மு.சுகுமார் பொருளாளர்.

பெரியார் சமவுரிமைக் கழகத்தில் நான் வேலூர் நகரச் செயலாளராகவும் பின் மாவட்டச் செயலாளராகவும் பணியாற்றியதால், தோழர் யுவராசன் முன்னெடுப்பில் அரக்கோணத்தில் காலை முதல் மாலைவரை நடத்தப்பட்ட தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவிற்கு ஒருநாள் முன்னதாக அரக்கோணத்திற்கு முதன்முதலாகச் சென்றேன்.

இருவரும் பெரியாரின் சாதிஒழிப்புக் கொள்கையில் ஈடுபாடும் கொண்டிருந்தோம். அண்ணல் அம்பேத்கர் போராட்டங்களால், எழுத்துகளால் ஏற்பட்டுள்ள விளைவுகளை உணர்ந்திருந்தோம். தோழர் வே.ஆனைமுத்து முன்முயற்சியில் உருவாக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் வகுப்பினர், பட்டியல் பழங்குடியினர், மதச்சிறுபான்மையினர் பேரவையும் பாம்ஃசெப் அமைப்பின் தலைவர் கன்ஷிராம் அவர்கள் வலியுறுத்திய பி.வ.-ப.வ.ஒன்றுபட வேண்டும் என்ற கருத்தும் எங்களை ஈர்த்திருந்தது. எனது பிள்ளைகள் மூவரின் பெயர்களுக்கு முன் தாய்-தந்தை இருவர் முதலெழுத்துகளையும் முன்னெழுத்தாகப் பதிவு செய்திருந்தேன். தோழர் தமிழேந்தியின் பிள்ளைகள் மூவருக்கும் தாய்-தந்தை இருவர் பெயர்களையும் முன்னெழுத்துகளாகப் பதிந்திருந்தார். மற்றும் பிள்ளைகளை தமிழ்வழியில் படிப்பித்தல் முதலானவற்றில் ஒற்றுமை இருந்தது.

**சாதி ஒழித்திடல் ஒன்று-நல்ல**
**தமிழ் வளர்த்தல் மற்றொன்று**
**பாதியை நாடு மறந்தால்-மற்றப்**
**பாதி துலக்குவது இல்லை.**

என்ற புரட்சிக் கவிஞரின் கருத்தினை நினைவில் நிறைத்திருந்தோம். தொடர்ந்து, இரு மாநாடுகளுக்கு நிதி திரட்ட வடஆர்க்காடு மாவட்டம் முழுக்க இருவரும் இணைந்து சுற்றிவந்துள்ளோம். இருவரும் திருவண்ணாமலைக்குச் சென்று-எங்கள் முயற்சியில் ஈழம் பற்றிய ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தினோம்.

இருவரும் பணிநிறைவுக்குப்பின் ஒருமுறை மதுரை, சிவகங்கை, இராசபாளையம், தேனி ஆகிய ஊர்களில் அண்ணல் அம்பேத்கர், புரட்சிக்கவிஞர் பிறந்த நாள் நிகழ்வுகளுக்காகச் சென்று வந்தோம். "இதனால் தோழர் தமிழேந்தி தமிழகமெங்கும் பரவலாக பெற்றிருந்த அறிமுகத்தையும் பல இயக்கங்களைச் சார்ந்த தோழர்களிடம் பெற்றுள்ள நன்மதிப்பையும் கண்டு மகிழ்ந்தேன்.

சிந்தனையாளன் ஏட்டில் வெகுமக்களுக்கு எதிரான இந்திய, தமிழக அரசின் கொள்கைகளையும் செயல்களையும் கண்டிக்கின்ற வகையில் தமிழேந்தி கட்டுரைகளை அச்சமின்றி எழுதிவந்தார். அப்போது ஒருவர், பள்ளிக் கல்வி இயக்குனருக்கு அரசுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் யுவராசன் தமிழேந்தி என்ற பெயரில் இப்படி எழுதுகிறார் என்று தொடர்ந்து புகார் தெரிவித்து, அதனால் தொல்லைகள் வந்தபோதுகூட, வேலூரில் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் 'புலவர் அஞ்சான்' என்ற பெயரில் தொடர்ந்து உரையாற்றியுள்ளார்; சிந்தனையாளனில் எழுதியும் உள்ளார்.

**பாவலர் தமிழேந்தியின் பாவீச்சின் கருத்துச் செறிவு, நடையாற்றல், உணர்வூட்டம் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்குப் பின் மக்கள் பாவலர் இன்குலாபின் பாடல்களும் எழுச்சிப் பாவலர் தமிழேந்தியின் பாடல்களுமே என் மனத்திற் கேற்றன.**

எழுச்சிப் பாவலரின் "தமிழேந்தி கவிதைகள்" "பன்முகப் பார்வையில் பாவேந்தர்" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழாவை, 2013 சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு விழாவுடன் இணைத்து வேலூரில் நடத்தியது மனதிற்கு நிறைவளிக்கிறது.

**தமிழேந்தியின்மார்க்சிய-பெரியாரிய-அம்பேத்கரிய-தமிழ்த் தேசியப் பாடல்கள் நம் சிந்தனைக்கும் செயலுக்கும் உந்தாற்றலாகத் திகழ்வன.**

**எழுச்சிப் பாவலர் தமிழேந்தியை என்றென்றும் நினைவேந்துவோம்!**

# பாவலர் தமிழேந்திக்கு இரங்கற்பா!

## இவரைப் போல் எவருளர்...



ஆனைமுத்து உழைப்பிற்
அரணாக
இருந்தோன்
பெரியாரின்
பெரும்
பணிக்கே
தமிழ்
செய்யப்
பிறந்தோன்!

பகையடிக்க இவன்
தமிழோ
பாவேந்தச்
சாட்டை
உறியடிக்கு
நிகராகும்
இவன்
கவிதை
வேட்டை

இழை பிசகா தமிழ்ச்
செயலாய்
எப்போதும்
வாழ்ந்தவன்!
இறுகிய
நல்
கொள்கையரால்
தப்பாது
சூழ்ந்தவன்!
மிரட்டலுக்கு அஞ்சாத
மின்னோட்டத்
தமிழன்!

தெவிட்டலுக்கு
இடமின்றித்
தேன்
தமிழைத்
தருவன்!

தமிழேந்தி இல்லையெனும்
இச்
செய்தி
ஏற்கேன்!
தமிழ்த்
துணிவில்
இவரைப்
போல்
எவரை
இனிப்
பார்ப்பேன்!

**- அறிவுமதி**

### அடுத்தடுத்து இப்படியா?

## பாவலர் தமிழேந்தி விடைபெற்றார்

எதற்கும் கலங்காத ஆனைமுத்து அய்யா தமிழேந்தி மறைவுச் செய்தியைத் தாங்க முடியாமல் "அடி மேல் அடி விழுந்தால் எப்படித் தாங்குவது" என்று அழுதபடியே கூறினார்.

'சிந்தனையாளன்' இதழைப் பார்த்தவுடன் அதன் இறுதிப்பக்கத்தை ஆவலுடன் தேடுவோர் ஏராளம். இதழ்தோறும் இறுதிப்பக்கத்தில் இடம்பெற்றிருப்பது பாவலர் தமிழேந்தியின் பாடல்.

"நடப்பு அரசியலை வெளிப்படையாகப் பாடுவோர் அருகிவிட்ட தமிழ் இலக் கியச் சூழலில், தமிழேந்தி மட்டுமே அந்தத் தனித்தன்மையை அச்சமின்றிக் காப்பாற்றி வருகிறார் "- என்று பாவலர் அறிவுமதி வியப்பது வழக்கம்.

சிந்தனையாளன் இறுதிப்பக்கக் கவிதையாக இனி தமிழேந்தி வரமாட்டார். அரசியல் கவிதை அற்றுப்போகாமல் காப்பாற்றிய பாவலர் தமிழேந்தியின் பயணம் நின்றுவிட்டது.

தமிழின விடியலுக்கான எல்லாப் போராட்டங்களிலும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் எழுச்சி முழக்கமிடும் போராளித்தமிழேந்தி குரலை இனி கேட்க வாய்ப்பில்லை.

**- செந்தலை கவுதமன்**
சூலூர் பாவேந்தர் பேரவை

## பாவலர் தமிழேந்தி இரங்கல் நிகழ்ச்சி

**மா.பெ.பொ.க.**வின் செயல் வீரரும் சிந்தனையாளன் இதழின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய பாவலர் தமிழேந்தி அவர்கள் 5.5.2019 ஞாயிறு காலை 7.30 மணிக்கு மாரடைப்புக்கு ஆளாகி மறைவுற்றார். அன்னாரின் விருப்பப்படி அவரு டைய கண்கள் காலை 8 மணிக்குக் கொடையாக வழங்கப் பட்டன. அனைத்து மாவட்டங்களிலிருந்து மா.பெ.பொ.க. தோழர்களும் பல்வேறு தோழமை அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் திரளாக வந்து அரக்கோணம் இராசாசி தெருவில் உள்ள அவருடைய இல்லத்தில் அவர் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். பிற்பகல் 3.30 மணி முதல் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. தோழர் வாலாசா வல்லவன் நிகழ்ச்சியை ஒருங்கி ணைத்தார்.

மாலை 5 மணிக்கு அவருடைய உடல் வேலூர் உதவும் உள்ளங்கள் இரா.சந்திரசேகரன் வழியாக சி.எம்.சி.மருத்துவ மனைக்குக் கொடையாக வழங்கப்பட்டது.

வே.ஆனைமுத்து, பெ.மணியரசன், வன்னிஅரசு, பொழிலன், சா.குப்பன், பாவலர் வையவன், அ.மதி வாணன், இரா.பச்சமலை, கோவி ராமலிங்கம், தோழர்கள் கனகராஜ் பா.பொன்னரசு, கௌதமன், புனித பாண்டியன், மு.பாலன், துரை.கலையரசு, சுப.வீரபாண்டியன், கார்த்திகேயன், சி.மோகன், வீரராகவன், வே.மதிமாறன், சீனு.அரிமா பாண்டியன், திலீபன், கவியன்பன், பொதட்டூர் புவிஅரசன், இரா.திருநாவுக்கரசு, கோ.கோதண்ட ராமன், செவ்வேள், யசுவந்தராவ், பேரா. கலை நேசன், துரை.மாலகிருட்டிணன், சி.நடராசன், காஞ்சி அமுதன், இரா.சந்திரசேகரன், சோம.இராசேந்திரன், பெ.ந. சிவம், குறள் அமிழ்தன், துரை.சித்தார்த்தன், க.முகிலன் ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர்.












## பொது மக்களை ஏமாற்றும் மருத்துவமனைகளும், மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்களும்

பொதுவாக மருத்துவமனைகள் தொடங்கும் பொழுது மருத்துவ விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்படும் என்ற மனப்பான்மையுடன் தொடங்கப்படுகின்றன. தொடங்கப்பட்ட உடனே, பல வழிகளில் மக்களிடம் நோயைத் தீர்ப்பதாகக் கூறி பல விளம்பரங்கள் செய்து நோயாளியை வரவழைக்கின்றனர். பின்னர் பல மருத்துவச் சோதனைகள் செய்ய உட்படுத்தப்படு கின்றனர்.

உதாரணமாக மகப்பேறு மருத்துவத் துறையில் இயல்பாகப் பிள்ளை பெற வாய்ப்பிருந்தும் பயமுறுத்தி அறுவை சிகிச்சைக்குச் சம்மதிக்க வைக்கின்றனர். பல் வலி என்று சென்றால் சோதனைக்குப் பிறகு பல்லை எடுக்கவும், மற்ற பற்களையும் அடுத்து வந்து எடுக்கவும் தொடர்ந்து மருத்துவம் செய்ய வேண்டும் எனப் பல நோயாளிகளின் வருமானத்தைச் சுரண்டுகின்றனர். மருத்துவமனைகளின் நிர்வாகத்திற்குத் தகுந்தாற் போல் மருத்துவர்களும் வேறு வழியின்றி மருத்துவப் பணி செய்கின்றனர்.

மருத்துவக் காப்பீட்டு வழியாக மருத்துவம் பார்த்தால் காப்பீட்டுக்கு உரிய அதிகபட்ச காப்பீட்டுத் தொகையையும் சோதனை என்ற பெயரில் எடுத்துவிடுகின்றனர். மேலும் பல சோதனைகள் மருத்துவக் காப்பீட்டுக்கு உட்பட வில்லை என்று கூறி, காப்பீடு மூலம் கட்டணம் போக, மேற்கொண்டு கட்டணம் கட்டப்படுகின்றன. தமிழக அரசு வழியாகக் கட்டப்படும் மருத்துவக் காப்பீட்டுத் தொகை, மருத்துவச் சோதனைக்கும் மருத்துவம் பார்ப்பதற்கும் போதுமானதாக இல்லை. அதனால் நோயாளிகளே கட்டணத்தைக் கட்ட வேண்டும் என்ற கட்டாயத்திற்கு உட்படுகின்றனர். இதனால் காப்பீட்டு நிறுவனங்களின் காப்பீட்டுத் தொகை பயன்படுத்தப்பட முடியாமல் காப்பீட்டு நிறுவனங்களே எடுத்துக் கொள் கின்றன. மொத்தத்தில் மருத்துவச் சேவை என்பதும், மருத்துவக் காப்பீட்டு கட்டணமும் இன்றைய சூழலில் அதிகம் மக்களையே ஏமாற்றுகின்றன.

- உழவர் மகன் **ப.வடிவேலு**

### சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - மே-2019

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **வெ.அறிவுக்கண்ணன்** | குளித்தலை | 1000/- |
| **இரா. பத்மநாபன்** | மாதவரம்-சென்னை | 700/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **தே.தினகரன்** | பாராஞ்சி | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மே-2019

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர்-நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**